உ

குகமயம்.

திருமால் முருகன்

பாமணிக் கோவை

இதன் ஆக்கியோன்

ஈப்போ திருவள்ளுவர் கலாசாலைத் தலைமைத்

தமிழ்ப் பண்டிதர்

யாழ்ப்பாணம் வண்ணைநகர்

நெ. வை. செல்லையா.

(மூன்றும் பதிப்பு.)

சென்னை

பென்ரேஸ் கம்பெனியிற்

பதிப்பிக்கப்பட்டது.

1929.

சிவமயம்.

யாழ்ப்பாணம்
பரமேசுவரக்கல்லூரிப் போதகாசிரியர்
தஞ்சை, வித்துவான்
ச. நடேசபிள்ளை அவர்கள், பி. எ. பி. எல்.
இந்நூற்குதவிய

அணிந்துரை.

அன்பருக்கு அருளுவான் வேண்டி அறுமுகப்பெருமான் கோயில் வீற்றிருக்கும் ஆறு படை வீட்டைப்போல அப்பெருமான் உவகையுடன் அமர்ந்துறையும் மற்றைத் திருப்பதிகளில், தென்னிலங்கைக் கதிர்காமமும், யாழ்ப்பாணத்து நல்லைநகரும் இவ்விலங்கையிற் சிறப்புமிக்கன. கதிர்காமப்பதியினைப் பரவிப்பல பெரும்புலவர் பாடியுள்ளார் என்பது தமிழுலகம் நன்கறிந்ததொன்றாம். அருள் வள்ளலாராகிய அருணகிரியாரும் அத்தலத்தினைத் திருப்புகழ்ப்பாக்கொண்டு போற்றியுள்ளாராகலின் நல்லை நகரையும் செவ்வேளது இன்னருள்வேண்டி நல்லிசைப் புலவர் நயந்து பாடியுள்ளாரென்பது ஈண்டையுலகம் நன்கறியும். அத்தகைய நல்லிசைப்புலவர்தந்தொடர்பில் நல்லை நகர்ப்பிரான்மீது தமிழுலகம் நலனுறுமாறு நல்லைச்சண்முகமாலை என்ற நறுந்தொடையல் சாற்றியவர் யாழ்ப்பாணத்து வண்ணைநகர் திரு. நே. வை. செல்லையா என்ற திருவருட் செல்வத்தகையாளர் ஆவர்.

நல்லைச்சண்முகமாலை என்ற இவ்வருந்தமிழ்த்தெரியல் தமிழ்மணம் நுகர்ந்து முருகெனப்பெயர்கொள்ளும்

தமிழ் முதற்குரவன் தன்மீதணியும் தகைமை சான்ற தெனின், அடியவர் அதனைப்போற்றுவதன்றிப் புகழு மாறுண்டோ? அன்பெனும் பிரசம் அவிழ்ந்து சொட்ட, அணிபொருளாய ஒளிமணந்திகழ அன்றலர் மலராய் என்றும் இலகும் இன்னிசைப்பாமலர் இண்டை தேர் ஆற்றற் செந்நாப்புலவர் செந்தமிழ்க்குருகும் செயலுடை யான் செவ்வேளென இச்சண்முகமாலையை அவற்கு எற் பித்துச் சூட்டியுள்ளார். இதனை ஆக்கிய ஆசிரியர் தமிழ்க் கவிவேண்டிப் புலவரைக்கனவிலும் நனவிலும் ஆட்கொள் ளும் பரமாசிரியனாகிய முருகக்கடவுளைத் தன் நெஞ்சினில் நிறுத்தி, அவனிடத்துத் தன் குறையெலாங் கூறித்தனது உடல், பொருள், ஆவி மூன்றையும் ஒப்புவித்த உரிமை யால் வாதுபேசியும், வழக்காடியும், புகழ்ந்தும், இரந்தும், இவ்வாறுபல்லாற்றான் அவன் உள்ளத்தையும் அடியவர் மனத்தையும் கசிவிக்கும் தன்மையுடைய கவிகளாற் போற்றியுள்ள இவ்வாசிரியர்வாக்கிற் பிணிப்புறாத நெஞ் சம் கல்லோ, மரமோ, இரும்போ, என்றே இரங்கற்பால தாம். இவ்வாசிரியரது வாக்குப் பத்தியினாற் பாடிய பண்டையாசிரியருடைய அன்பு பழுத்த அருள்வாக்கை யொட்டிச் சொல்தோறும் தித்திக்கும் தன்மையுடைய தென்பது இம்மாலையைப் படிப்பார்யாவரும் எளிதினுணர் வார். "பாவியென்றன் சிந்தை நினதடிக்கேயாக்கிப்பணி செயற்கெனிருகரமும் பணிவித்தூறும் நாவினையுன்றிரு நாமந்தனக்கேயாக்கி நானிலத்திலுறுதுயரால் நலிவெய் தாது" என்று ஆசிரியர் ஈண்டுக்கூறியசொல்லும் பொரு ளும் மணிவாசகப்பெருமான் நறுந்தமிழையெமக்கு நினைப் பூட்டும் ஆசிரியரது அரிய உவமைவிசேடங்களும் ஆண் டாண்டுப் புலவர் காமுறச் சுவைததும்பியுள்ளனவாய்க் காணப்படுகின்றன. "இலங்கு நாட்டங்குருடுகொண் டோன் கயத்துறையில் வீழ்ந்தால்யாருங்கூடி நின்றுபார்ப்

பரோகொள்வரன்றே,'' குற்றிதனை யடைந்திருக்கும் பசும்புல்தன்னைக் கூறுமுநருமுபடையென் செயுமஃதே போல்'' என்று இத்தொடக்கத்து உவமைகள் உலகிற் காணும் உண்மைச்செயல்களை உள்ளவாங்குக்காட்டி எவ் வெவர்மனத்தையும் ஈர்க்கும் புலமைப்பாற்பட்டன.

ஆசிரியரது செய்யுளோசை ஒழுகியோடும்விழுமிய தன்மையுடைத்தாய் விளங்குகின்றது. படிப்போர்மனத் தைப் பத்தியில் இலேசானேபடியவைக்கும் பண்புடைய ஓசையமைந்துள்ளது இப்பாமாலைக்கியன்ற பெரியதொரு சிறப்பாம்.

"தேய்ந்திடுநுண் மருங்குலிறப் பணைத் தெழுந்த
திரண்முலையார் சீறடியின் சிலம்பி னோசை
பாய்ந்திடுமென் செவியுமுன தணிகொள் பாதத்
தணிசிலம்பி னொலியுமறிந் திடுமோ வையா
காய்ந்தமனத் தவர்கிருளாய்க் காணொ ணாத
கதிர்வடிவேற் பரவொளியே கதியி லேனைத்
தேய்ந்திடுதற் கினும்விடுதல் சிறப்போ நல்லைத்
தெய்வமே திருக்கடைக்கண் சிறிது நல்கே''

என்ற ஒருசெய்யுளையாம் ஈண்டுக்கூறிய சிறப்பை நன்குணர்த்தற்குப்போதியதென்று எடுத்துக்காட்டினும். ஆசிரியரது புலமை பொய்யடிமையில்லாத மெய்ம்மை சான்றதாகலின் பாடல்தோறும் வெறும்புலமையில் வீணே மனத்தைச் செலுத்தாது புலவர்நிதியாகிய முருகப்பெரு மானின் திப்பியதிருவுருவத்தின் திறத்தைத்தோற்றி அன்பர்மனத்தை அளவிலா இன்பவாரிதியில் அமிழ்த்தும் படியாகப் பாடியுள்ளார் இவ்வாசிரியர் என்பதைவிட அவ ரது புலமையாற்றற்கு வேறுபயன் எதுவும் வேண்டுவ தின்றும். கதிரைமலைக்கடவுளைப் பரவும் இன்னிசைப் பாக்கள் இரண்டும் இரண்டு இரத்தினமென மதிக்கத் தக்கன.

" பன்னிருநா மம்புகழும் பதியா யோங்கு
பன்னிரண்டின் மேலுளதாய்ப் பரவுந் தெய்வத்
தின்னருளைத் திரவியத்தைச் செங்க ரும்பி
னினியகட்டிச் சர்க்கரையை யிமையோர் சென்னிப்
பொன்னடியைத் திரைமறைக்குட் பொருளை வேண்டார்
புரமெரித்த புண்ணியர்க்குப் பொருளை யோது
மென்னரிய கண்மணியை மாணிக் கத்தி
னினியகங்கை தனில்விளங்கு மிரத்தி னத்தை.
கற்பூர தீபவருட் பிரகாசத்தைக்
காணார்க்குக் காணாத காட்சி யானைச்
சிற்பரனைச் சிரமொடுநா சேதிப் பார்க்குத்
தீங்கலிவன் பிணிமடனுந் தீர்த்தெ ழுப்பு
மற்புதனைச் செந்தழல்சந் தனக்கு ழம்பா
யாக்குமறு முகவடிவே லைய னாகும்
பொற்பதியாங் கதிரைமலைப் புத்தேள் வீதிப்
புழுதிபடி னெழுபிறப்பும் போக்க லாமே."

இனி, ஆசிரியர் நல்லைப்பதியில் வீற்றிருக்குந் தெய்வக்கோலத்தின் திருவுருவத்தை நாட்டியிருக்குஞ் செய்யுட்கள் அக்கடவுளை அன்பர் இறைஞ்சும்போது ஓதித் துதிக்கத்தக்க அத்துணை மாண்புடையன. அவற்றில் ஒன்றை ஈண்டுக்காட்டுவாம்.

" அறுமுகமும் பன்னிருசெங் கரமும் வேலு
மபயவர தமுங்கடம்பி னலங்கன் மார்புங்
குறுநகையுங் கருணைபொழி விழியுங் நான்குங்
குஞ்சரமான் மகளிருவர் குலவத் தோகை
பெறுமயின்மே லமர்ந்ததிருக் கோல மென்றும்
பிரியாதென் னெஞ்சினுள்ளே பேணு நிற்கு
முறுவதெது வரினுமெளிர் வேற்க ரத்தா
னுயிர்த்துணையாய் வருவனென வுளங்க ளித்தே."

ஆசிரியர் முடிந்த அனுபவக்கருத்துக்களை ஆங்காங்கு அமைத்துவைத்திருத்தல் இப்பாமாலைக்கு மிக்க சிறப்பை யளிப்பதாம். "குரவணியுந் தண்டையந்தாட்குமராவுன் றன் கூறருள்காட்டக் காணல்கூடுமெல்லாற், காரணமறியாது யிருமறியாதத்தைக் கண்ணொளியுமிருளுமதிற் கதிரும் போன்றே" என்ற ஆசிரியர்வாக்கு "அவனருளாலே அவன்றாள்வணங்கி" என்று ஆன்றோர் காட்டியவுண்மை யை அநுபவவாயிலாய் உணர்த்தாநின்றது.

இக்காலத்திலே இத்தகைய விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் வாய்க்கப்பெற்ற பத்திப்பாமாலைகள் மிக அருகித்தோன்றுவனவாதலின், இம்மாலையைத் தமிழறிந்தார்யாவரும் போற்றுவது தமிழ்மொழிக்கும் தமிழ்த்தெய்வமாகிய எமது முருகக்கடவுளுக்கும் ஆற்றும் அருங்கடன் என்றுகூறி இப்பாட்டுடைத் தெய்வத்திற்கு இம்மாலையை அன்பிற்குழைந்து ஏற்பிக்கின்றோம்.

யாழ்ப்பாணம்
பரமேசுவரக்கல்லூரி,
18-6-24.

இங்ஙனம்,
சு. நடேசபிள்ளை.

சண்முகமாலைச் சாத்துப்பாட்டுகள்

ஆறுமுக நாவலரவர்கள் மருகரும் மாணாக்கரும்
வித்துவ சிரோமணியுமாகிய
ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்களுக்கும்
சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரவர்களுக்கும்
பிரிய மாணவகரும் :
சுன்னாகம் ஆரிய திராவிடபிராசீன பாடசாலைத்
தமிழ்ப்பண்டிதருமாய
வித்துவான் சி. கணேசையர் அவர்கள் சொல்லிய

வெண்பா.

நல்லைச்செவ் வேட்கு நறுந்தொடைசொல் லாற்றொடுத்தான்
செல்லைய பண்டிதன்றான் செவ்விபெறச்—சொல்லுமதற்
கந்தேன் பிலிற்றி யணிபடைத்தும் வாடுமலர்ப்
பைந்தாரோப் பாமோ படி.

யாழ்ப்பாணத்துத்திருநெல்வேலி
பரமேஸ்வரப் பெருநிலைக் கழகத்துத்
தலைமைத்தமிழ்ப்பண்டிதர்.
திரு. சு. நவநீத கிருஷ்ண பாரதியாரவர்கள் செய்த

விருத்தம்.

அன்பினா லெழுந்த அருந்தமிழ் மாலை
அணிபெறு நல்லைநா யகனார்
தன்பத மீது சாத்தியே யுய்ந்தான்
தருமமே வடிவென வந்தான்
இன்பெலா மெய்தித் துன்பெலா மகற்றி
யியற்றமிழ்க் கல்வியா லென்றும்
மன்பதை யுருகப் பாடுநா வல்லோன்
வண்ணைவாழ் செல்லைய வேளே.

சுன்னுகம் ஸ்ரீ ராமநாதன்காலேஜ்தலைமைத்

தமிழ்ப்பண்டிதரும்வித்துவசிரோமணி

ந.ச. பொன்னம்பலபிள்ளை

அவர்கள் மாணுக்கரும் ஆசிரியருமாகிய சாவகச்சேரி

ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள் இயற்றிய

அறுசீராசிரிய விருத்தம்.

நந்தூருஞ் சீர்க்கழனிப் பழனிதிருப் பரங்குன்றம்
    நளிர்சீ ரேதம்
முந்தூரும் வளத்தபழ முதிர்சோலை யேரகநீர்
    மோதும் வேலைச்
செந்தூரும் படைவீடா யமருமது போலவலை
    சிந்துஞ் சூழற்
சிந்தூரும் யாழ்ப்பாணத் திருநாட்டி னருண்மயமாய்த்
    திகழும் நல்லை.

தொல்லைநகர் தோறுமந வரதமருட் டிருநடனந்
    தொடங்கிப் பாங்கர்க்
கொல்லைநகர்க் குறமானுங் குஞ்சரியுங் குதுகலிக்கக்
    குறித்துத் தன்பால்
வல்லைநகர் தருமடியார் வேண்டுமிட்ட சித்திகளை
    வழங்கி யிந்த
நல்லைநகர் மேவுமறு முகற்குவப்பத் துதிமாலை
    நயந்து செய்தான்

பாரகத்தார் பரவுவண்ணை நகருறைவோன் பாவலர்கள்
    பலர்க்கும் நேயன்
நீரகத்தார் மதித்தகலைக் கடல்கடந்தோன் கவியியற்று
    நெறியில் வல்லோன்
ஏரகத்தார் தமையுளத்தி னுபாசனைசெய் தொழுகிவரு
    மெழிற்சீ ருள்ளோன்
சீரகத்தார் புனைந்தவயித் தியலிங்க மருளிய செல்
    லைய வேளே.

சைவப்பிரசாரகரும் வீரசைவாசாரியருமாகிய

சுன்னுகம்

ஸ்ரீமத் : சி. மாணிக்கத் தியாகராச பண்டிதர்

அவர்கள் இயற்றிய

நிலமண்டில ஆசிரியப்பா.

பூவார்ந் திலங்கும் புரிபல வற்றுள்
மாவார்ந் திலங்கும் வண்மைகொ ளீழ
நாட்டிற் சிறந்த நகர்யாழ்ப் பாணத்
தோங்கிய பெருமை தேங்கிய நல்லைப்
பதியிற் பரவிப் பத்தர்கொண் டாட
வீற்றிருந் தருளி வேண்டிய வரமருள்
கந்த னடியிணை கருத்தினு ளிருத்தி
யுள்ளநெக் குருகி யுழுவலன் பாரச்
சொற்சுவை பொருட்சுவை தோன்றும் வண்ண
மற்புத மாக வரியபா மாலை
சூட்டின னெவரும் சொல்லும் பெருமை
யின்னிலத் தோங்க வெழில்பெறு வாழ்வு
மல்கிய செல்வ வயித்திய லிங்க
வேள்தவத் துதித்த வேளன வுருவன்
செந்தமிழ்ச் செல்வன் செம்மனச் செல்வ
னந்தமி லின்ப ஞர்க்குமெய் யன்பன்
முந்துசொல் லின்பன் மூதறி வின்பன்
சித்திரக் கவிமுறை செயுமறி வாளன்
முருகன் சேவடி முதிரு முபாசன்
எழுத்தொ டிலக்கிய மினிதறி வுளத்தன்
தரும தயாளன் சற்குண விலாசன்
இப்புவி புகழு மென்னரு நேய
னென்றே பலரு மேத்திடு வைசிய
குலசிகா மணியாய்க் குலவுசெல் லைய
வித்தக ஞென விறற்பா வலனே

பரமேஸ்வரப் பெருநிலைக்கழகத் தமிழ்ப்பண்டிதர்

யாழ்ப்பாணத்து நல்லூர்த்

திரு. வ. சு. இராசையனூர் அவர்கள் செய்த

விருத்தம்

பொலம்பூத்த கொன்றையனைப் புரமெரித்த கறைமிடற்
பெருமா னைப்பல் [றெம்
நலம்பூத்த நறுந்தமிழின் துறைபோய நல்லோரை
நாளும் மேவும்
குலம்பூத்த திருநல்லூர் முருகவேள் குரைகழற்கோர்
மாலை கோத்தான்
புலம்பூத்துப் புகழ்பூத்து மெய்பூத்த செல்லைய
புலவன் மாதோ.

வண்ணைவைத்தீசுரர் ஒருதுறைக்கோவை நூலாசிரியர்

வண்ணை நகர்

க. வைத்தியலிங்கபிள்ளை அவர்களியற்றிய

அறுசீராசிரிய விருத்தம்

நல்லைவள ரயில்வேற்கை நம்பிபுகழ் வியந்துமிக
நயந்து சீர்கொள்
சொல்லலரிற் புனைந்தெழில்சேர் சண்முகமா லைத்தெரியல்
சூட்டி னன்பார்
மல்லலுறு நற்றவஞ்சேர் வண்ணைவயித் தியலிங்கன்
மதலை வாக்கின்
வல்லனென வுலகுபுகழ் செல்லைய னெனுங்கவிசொல்
வண்மை யோனே.

குகமயம்.

நல்லைச்சண்முகமாலை.

காப்பு.

வேன்மிளிருங் கரதலத்தான் நல்லை மேவி
விளங்குமறு முகமுடைய விமலன் செவ்வேள்
கான்மிளிரும் பூங்கொடியைக் கலந்த புத்தேள்
கந்தனடிக் கொருமாலை கவின்பெற் றுர
வான்மிளிரும் பிறையணிந்த சிரமு முக்கண்
வயங்குகர மைந்துமொற்றை மருப்புங் கொண்ட
தேன்மிளிரு மாம்பலடிப் போதை நாளுஞ்
சிரமொழிமெய் யகங்குளிரச் சிந்திப் பாமே.

திருமால்துதி.

பூவைவணத் தெம்பெருமான் புலவர் போற்றும்
புண்டரிக மலர்க்காடு பூத்த மேனித்
தேவையரி கேசவனை யனந்த னென்னுஞ்
சிங்கார வமளிமிசை திருமா தென்னும்
பாவையுட னறிதுயிலும் பரம னுந்தி
பார்பூத்த கடவுளெம திறைவன் நல்லை
மாவைவடி வேற்பெருமான் மீது சொல்லும்
மாலைநலம் பெறவவன்றாள் வணங்கு வாமே.

நாமகள்துதி.

ஓங்குலக மனைத்தினுக்கு முணர்வா யென்று
மொப்பரிய மணமலரா யுணர்வி னூடு
தேங்கிவள ரொளிவிளக்காய்த் தெவிட்டா வின்பத்
தெள்ளமிர்தாய்க் கலைஞானச் சிரமாய் நாவிற்
பாங்குபெறுந் தூயாளே பனுவ லாட்டீ
பாரதியே நாமகளே பணிந்தே னுன்னைத்
தாங்கியடி யேன்பிழைகள் சாரா வண்ணஞ்
சண்முகமா லைக்குநலந் தந்தாட் கொள்ளே.

நூல்

சீர்பெருகு நல்லைநகர்த் தேவே முக்கட்
சிவமளித்த திருவுருவே செகத்தோ ரென்றும்
பேர்பெருகு மறுமுகனே பிரானே யென்று
பிரியாது சந்நிதியிற் பேசா நின்ற
நேர்பெருகு மடியார்க்கு நினைத்த வெல்லாம்
நிறைந்தளிக்கு நித்திலமே நின்னை யன்றிப்
பார்பெருகு துணையறியேன் பரனே ஞானப்
பன்னிருகைச் சுடர்வடிவேற் பரங்குன் றனே. (க)

அறுமுகமும் பன்னிருசெங் கரமும் வேலு
மபயவர தமுங்கடம்பி னலங்கன் மார்புங்
குறுநகையுங் கருணைபொழி விழிமுந் நான்குங்
குஞ்சரமான் மகளிருவர் குலவத் தோகை
பெறுமயின்மே லமர்ந்ததிருக் கோல மென்றும்
பிரியாதென் னெஞ்சினுள்ளே பேணு நிற்கு
முறுவதெது வரினுமொளிர் வேற்க ரத்தா
னுயிர்த்துணையாய் வருவனென வுளங்க ளித்தே. (உ)

ஆண்டலைப்புட் கொடியுயர்த்த வரசே நல்லை
யறுமுகனே விடயமெனு மைவ ரான
வேண்டலைச்செய் கரவருக்கென் விவேக மாழ்ந்து
வெளிதுபட வறைபோன விதமென் னோதான்

பூண்டமனத் துயரமும்வெம் பிணியு நாளும்
பொருந்துமிடித் துன்பமுமாய்ப் பொழுது போக்கி
யீண்டலையக் கண்டொழித்தா லென்னை யுய்ய
வெவர்கொள்வா ருன்னையன்றி யெடுக்கு மாறே. (௩)

இந்தனத்தி லெழுநாபோ லிருக்கு முன்ற
னிறைநிலைநீ காட்டினல்லா லேழை யேன்றன்
பந்தமுறு கோட்டமனப் பண்பால் ஞானப்
பகுதியில்லாப் புல்லறிவாற் பகுக்க லாமோ
சுந்தரஞ்சேர் நல்லைதனிற் றுலங்குந் தெய்வச்
சுடர்மணியே தொழும்பனேன் றொலைவி லாது
வந்துமடிந் தெறிதிரைபோல் வாட்டுந் துன்ப
வாரிதிவிட் டேற வருகு வாயே. (௪)

இச்சையொடு கிரியையெழில் ஞான மாகி
யிலங்குமிரு பாங்கினொடு மேந்தி மூலப்
பச்சைமயின் மீதமர்ந்த பரனே ஞாலம்
பரவுநவ வடிவெடுத்தாய் பார்க்கி லீது
விச்சையென்கோ கோலமென்கோ விளையாட் டென்கோ
விளங்குமுல குயிரனைத்தும் விரும்ப வாட்டுங்
கச்சைகொளுங் கதிர்வடிவேற் கந்தா நல்லைக்
கடவுளே யென்குறையைக் கண்ணுற் பாரே (௫)

இருடன்னிற் கிடக்குமெனை வெளியே தூக்கி
யெடுத்தருள வேண்டுமையா விலங்கு நாட்டங்
குருடுகொண்டோன் கயத்துறையில் வீழ்ந்தால் யாருங்
கூடிநின்று பார்ப்பரோ கொள்வ ரன்றோ
பெருகுபல வின்கனியின் பிரச மோடிப்
பீடுடைய செஞ்சாலி பெருக்கு நல்லைக்
குருபரனே குடவளையின் முழக்க நீங்காக்
கோயிலுறை நாயகனே குமர வேளே. (௬)

ஈயெனநின் றொருவரிட மிரவா நிற்கு
    மியல்புமென திடமிரப்போர்க் கிலையென் னுமற்
றுயெனநன் றளிக்குமுயர் திறமு நல்லைத்
    தலைவாநின் னுணர்வுமெனைத் தாங்கு முன்றன்
மேயவருட் திறமுமனக் கிலேச மில்லா
    மேன்மைபெறு நல்வாழ்வும் விரும்பி நல்காய்
தூயதிரு நல்லைவளர் சோதி வேற்கைச்
    சுப்பிரமண்ய சிற்பரனே துணையி லேற்கே. (௭)

உலகினிடை யழுதபிள்ளை பால்கு டிக்கு
    முண்மையெனு முரைகாழி யூர்வாய் வந்த
விலகுமழ வழுதயின்ற தெவர்க்குந் தேற்ற
    மில்லெனினு மிரங்கியளித் திடுவ ரன்றே
விலகெனவென் துயரகற்றி மனமா சோட்டி
    விளங்குபெரு வாழ்வளித்து வெறுங்கை யானென்
றலகுபெய ர தன்மென்மை தன்னை வன்மை
    யாக்கியரு ளறுமுகனே யடிய னேற்கே. (௮)

என்றுமுனக் கென்குறையை யெடுத்தெ டுத்தே
    யியம்பிநின்று மென்மீதி லேனோ வையா
நன்றுபொழி கருணைமுக மாறுங் கண்கள்
    நான்மூன்று முடையவனே நாடா நின்றாய்
வன்றுயரால் நலிவடைய விடுதி யேல்யான்
    வருதுணையுன் றனையலதிங் கறிகி லேனே
கன்றுதனக் கிரங்குபசுப் போல வென்னைக்
    கடைக்கணித்து னருள்புரிவாய் கந்த வேளே. (௯)

ஐவகையோங் காரவொளிக் கொளியாய் மேவி
    யைந்தொழிற்கும் பேருருவா யமர்ந்த வேளே
பொய்வளரு நெஞ்சினுள்ளே புகுதல் செய்யாப்
    புண்ணியனே புன்முறுவல் பூத்த வாறு

தூய்ய திரு முகத்தழகுஞ் சோதி வேலுந்
துலங்குகரம் பன்னிரண்டுந் தோகை மீதில்
மையனைய கண்மடவா ரொடுநின் கோலம்
மறவாது துயரகல வழுத்து வேனே. (ய)

ஒழுக்கமுயி ரன்பருளா சாரம் மேன்மை
யுறவொடுப சாரமுய ருணர்வு வாய்மை
வழுத்தல்தவந் துறவடக்க மடியார் தொண்டு
மருவுமிதி லொன்றெனினு மறிந்தி லேன்யான்
புழுக்குரம்பை தனைவளர்க்கச் சுவைகொள் மேலாம்
போனகங்கள் மிகத்தேடிப் பொதிந்த லுத்தேன்
அழுக்குமனச் சழக்கனெனக் கைவி டேலென்
னன்னையப்பா வறுமுகனே யபய நீயே. (கக)

ஓங்கார மிச்சைகிரி ஞான மாதி
யுயர்பரையா தியசத்தி வடிவாய் வந்த
பாங்காரும் வடிவுடைய பகவன் நீங்காப்
பரங்குன்றுஞ் செந்தூரும் பழனி யோடு
தீங்காழ வருந்திருவே ரகமுஞ் சேர்ந்த
திருத்தணியுஞ் சோலைமலைத் திகழி ருப்பு
நீங்காத பத்திகொடு வாறெ ழுத்தால்
நினைப்பாரை மறப்பறியான் நீபத் தானே. (கஉ)

கன்னிகுறப் பூங்கொடிபாற் காதல் கொண்டு
கானகத்தே நடந்ததிருக் கமல பாதா
பன்னரிய காயமுதற் பண்டு கொண்ட
பலசரக்காங் கடைச்சரக்குன் பண்ட சாலை
தன்னிடத்தி லிருந்துவருந் தந்தி ரத்தின்
தன்மையறி யேன்குமரா தணிகை வாழ்வே
மன்னிடுமிச் சரக்குநிலை மாறு தோசொல்
வானவர்க்கு நாயகனே வைய மீதே. (கங)

காய்கனியுங் கருக்காயுங் காற்றி னோடு
காய்ந்திடுநற் சருகொடுதண் கனநீர் கொண்டு
தோய்பனியும் மழைவெயிலு நின்று சோர்ந்து
தூயபடி வந்திரிந்து துன்ப கற்ற
மாய்புலனைக் காய் முனிவீர் வருந்த வேண்டாம்
மாற்றமின்றி யெண்ணியவை மருவ வேண்டிற்
தூய்மலர்த்தண் டலைசூழு நல்லை நாதன்
சோதிதிருச் சந்நிதியிற் றொழுதி டீரே (கச)

குற்றிதனை யடைந்திருக்கும் பசும்புல் தன்னைக்
கூறுழுந ருழுபடையென் செயுமஃ தேபோல்
வெற்றிபெறு வேற்கரத்தா யுனைய டைந்த
மெய்யன்பர் தமைப்பழமை வினையென் செய்யும்
கற்றறியா நிர்மூடக் கயவ னுன்றன்
கழலிணையே புணையான கதியென் றோர்ந்தே
னுற்றதுணை நீயாகி வந்தென் னுளு
மோங்குபெரு வாழ்வளிப்பா யுய்யு மாறே. (கரு)

கையொருமுன் னுன்குடைய கந்த வேளைக்
கருத்துறுமெய் புளகரும்பக் கண்ணீர் சோரச்
செய்யவடி வேலரசே தேவே யென்று
திருவடியை யனுதினமுஞ் சேவித் தோர்கள்
பையரவின் மணிச்சுடிகைப் பார்மே லென்றும்
பதினாறும் பெறுவர்முடி பரிப்பர் பாரோ
ரையவென வணங்கவளித் தண்டு வாழ்ந்து
அந்தியத்திற் கந்தபத மடைகு வாரே. (கசு)

கொண்டதொழி லோய்ந்திடுமேற் பின்னும் வேண்டிக்
கூறுமவை தொடங்குவையோ குறித்த வைந்துங்
கண்டதொரு நான்குவகை யாகி நிற்குங்
காரணமோய்ந் திடுவதெப்போ கழறு வாய்நீ

மண்டுசுழல் காற்றிடையிற் றுரும்பு போல
மறுகியுளம் பதைபதைக்க வாடு வேனைத்
தொண்டுகொள வெழுந்தருளித் துயர்தீர்த் தாள்வாய்
சோதிவடி வேற்கரசே தொழும்ப னேற்கே. (கஎ)

கோடாத தருமனெனைக் கொடிய னென்று
கொதியனலாற் றுட்படுத்திக் கூற வொண்ணு
நீடாழு மீளவிலா வளற்றில் வீழ்த்த
நிற்கின்றான் வீழாது நெடியோ னான
மாடாயர் கோன்மருகா செந்தி நாதா
வளரிமயப் பிடியீன்ற வாழ்வே யென்றே
யூடாடி யுனதருளை யூன்று கோலா
யுன்னுதே னென்செய்வே னுயிர்போம் போதே(கஅ)

சரணமென மடியார்க்குத் தஞ்ச மான
சண்முகசிற் சுகாநந்த சாக ரத்திற்
திரணமெனும் படிந்தார்க்கே யமுதந் தோன்றித்
தீயபிறப் பெழுகரையுஞ் சேரக் காண்பார்
விரணமுறப் பலபிதற்றி வீணர் பின்போய்
மெலிவடையா துயர்மாடம் விளங்கு வீதிக்
கிரணமணிக் கோபுரஞ்சேர் நல்லை நாதன்
கிண்கிணிச்சீ ரடிபணிவோர் கேடி லாரே. (கக)

சரவணப்பூந் தொட்டிமிசைத் தவழ்ந்த செய்ய
சரணமலர் கண்டிறைஞ்சு தவத்தர் யோகர்
கரவகற்றி மனமொழிமெய் யொன்றித் துள்ளங்
கசியவுள்ளு மன்பருக்குங் காட்சி யான
குரவணியுந் தண்டையந்தாட் குமரா வுன்றன்
கூறருள்காட் டக்காணல் கூடு மல்லாற்
கரணமறி யாதுயிரு மறியா தத்தைக்
கண்ணொளியு மிருளுமதிற் கதிரும் போன்றே. (உ௰)

சிறியவர்தம் மியல்புபிழை செய்த லென்றுஞ்
செயிரறுத்த பெரியோர்தஞ் செயல்பு சேர்ந்து
மறியவதைப் பொறுத்து மாய்த் தாண்டன்போடு
வழங்குதலென் றுலகுரைத்தல் வாய்மை யன்றோ
வுறியளையுண் டசோதைதிரு நயநங் கூர
வோடியமான் மகிழ்மருகா வுனையெஞ் ஞான்றும்
வறியவனைக் காத்தருளென் றடுத்திரந்தேன்
வாளாவீற் றிருப்பினன்றோ வள்ளி யோனே (உக)

செய்புமுயிர் தனிலுதித்து மொடுங்கி நிற்குந்
திகழுவத்தை தனைப்போலத் தேவே நின்பாற்
பெய்புமுல கொடுங்கிநிற்கும் பெற்றி யெல்லாம்
பேணுமிடஞ் சிறிதாமே பெருமை சால
நையுமிடைக் கொடிமடவாள் வள்ளி பங்கா
நாயகனே நல்லைவரு நாதா தேவா
பையுளுக்கோர் மருந்தாகி மணியு மாகிப்
பற்றிநின்று யறிகிலேன் பாவி யேனே (உஉ)

செந்தழலின் மெழுகெனநின் றுருகா நிற்கச்
செய்பிணியு நல்குரவுஞ் சேர நின்று
வந்தவிதி சிறிதிரங்க மாட்டா தென்னை
வாட்டுதலா லினிப்பொறுக்க மாட்டே னையா
கந்தசர வணமுருகா கார்த்தி கேயா
காமதக னன்புதல்வா கலங்கா தென்னுள்
வந்தருளிப் புரிவினையின் றாக்கி மாறு
வான்கருணை பொழியவுனை வந்தித் தேனே. (உங)

செய்பொருளுஞ் செய்பவனுஞ் செய்விப் பானுந்
திகழ்நல்லைப் பதியுறையுஞ் சிவமே நீயென்
றுய்பவர்தா மறிவரெது வரினுந் தம்மே
லுனதருளென் றுன்னியுளத் தொழுகு வாரால்

நைதலிலார் குறைபூணார் நலமே கொண்டு
நனவுறக்கம் பெருவெளியில் நாடுந் தொண்டர்
வைதவரை நோதல்செய்யார் மதிப்பார் தம்மை
வாழ்த்தாதும் வருகவென் மானி லத்தே (உ௪)

செம்மேனிச் சிரப்பொருளைத் தேவர்க் கெல்லாம்
தேவனையென் சிறுமையெலாஞ் சிதற நூக்குந்
தம்மையனைத் தாயிலியைச் சரவ ணப்பூந்
தவிசின்மிசைத் தவழ்ந்ததிருத் தாளான் றன்னை
யெம்மையினுந் தான்வேறா யுயிர்கண் மூன்றா
யிருந்தருளு மிறைவனையென் னியத மேவுங்
கொம்மையனைக் கூடிமனம் வாக்குக் காயங்
குலவிநன்றாய் வழிபடநான் கும்பிட் டேனே. (உ௫)

சேர்ந்துபிணிப் புண்டுவருஞ் செயலின் பாலாய்த்
தேராதேன் பட்டுழன்று செய்வே ளாண்மைக்
கார்ந்தவரம் பின்றிவளர்ந் திடிலெந் நாளி
லமைதியுற்று வினையொழித்திங் காளா வேனோ
கூர்ந்தவடி வேற்கரத்தாய் நல்லை மேவுங்
குமரேசா தொண்டரொடு கூட்டு கண்டா
யீர்ந்திடுபின் னிடருறுதற் கேது நீக்கி
யென்செயல்நின் செயலாக வேற்றுக் கொள்ளே (உ௬)

செவிதனிலுங் கேட்டறியேன் கற்றி லேனுன்
சீர்மகிமை தெரிந்தவன்போற் செவ்வி தென்று
குவிமொழிகள் பலபிதற்றிக் கவிபு னைந்தேன்
குமராவீ தென்றனுக்கே குணத்தை யுன்னி
னவிர்நகையைச் செயுமெனினு மகில மீதே
யைந்தருவாய் நின்றிலங்கு மலகில் சோதிச்
சவிமணியே யாசையினாற் சாற்று கின்றேன்
தக்கதென விதனையுநீ தரித்துக் கொள்ளே. (உ௭)

தருவடிவே யில்லார்க்குத் தாங்கு கொம்பே
　　தனநிழலே குருமணியே தாவா வின்ப
விருநிதியே பகிரண்டத் தூடு மூறு
　　மின்பரச வெள்ளமே யியம்ப வொண்ணு
வுருவடிவே யருவேயவ் விரண்டு மல்லா
　　வோங்காரத் துட்பொருளே யுலகி னுக்கோர்
கருவடிவே காட்டாயுன் கருணை யான
　　காட்சிதனைத் தமியேற்குக் காணத் தானே. (உஅ)

தத்துவங்கள் சேர்நடன சாலை கூட்டிச்
　　சமைத்துறப்பா மவிநயங்கள் தன்னைக் காட்டி
யத்தலத்தே யாட்டுவித்தென் னுடல் கண்டு
　　மயர்ந்தொழியா தெழுபிறவி யாழி நீக்கிக்
கத்துமென திளைப்பகற்றிக் கதிதந் தாண்ட
　　கடவுளனம் பெடையொடுதண் கமலக் காவில்
நத்தொலிவான் முழவெனநின் றதிரக் கூடி
　　நளிமணஞ்செய் நல்லைபுறை நாதன் றானே. (உகூ)

தஞ்சமெனக் குன்பதமே சரணல் லாது
　　சார்கதியொன் றிலைக்கடன்மேற் றங்கு நாவாய்
புஞ்சமுறும் பாய்மரத்தின் கொடிபோற் சுற்றிப்
　　புன்கணுறக் கடவேனே பொலியு மாறு
கஞ்சமலர்த் 'திடுபருதிக் கிரண மோலிக்
　　கதிர்வதனக் கடவுளே கரவா ருள்ளப்
பஞ்சரத்தில் வளர்பொருளே நல்லை மேய
　　பரம்பரனே யெனையொருகண் பார்க்கி லாயே. (௩௰)

தங்கியிடு பன்முழுதுங் காட்டிச் சற்றுந்
　　தராதரமே தெரியாத சழக்கர் பாற்போ
யங்கிதனை நெகிழ்த்தரசே யையா வென்றே
　　யடுக்குமொழி பலபிதற்றி யலக்க ணுற்றேன்

துங்கமிகு நல்லைநகர்ச் சுடரே யாறு
துலங்குமுக முடையாயென் றுன்பங் கண்டு
மெங்கொளித்தா யிதுமுறையோ வென்செய் வேன்யா
னேழைதனக் கிரங்குவையென் றிருக்கின் றேனே.

தரிசனந்தந் தாளவுயர்ந் தவனீ யுன்பாற்
சார்ந்துபெறற் குரியவன்யான் றந்தை தாய்நீ
தெரிபவனீ யவைமுழுதுந் தெரிவிப் பான்நீ
செய்வனவீ தெனவறியாச் சிறுவன் யானே
விரிகருணைத் திருவருளே விண்ணோர் போற்றும்
வேற்கரனே விசாகனே விமலா நீங்காக்
கரிசனைவைத் தல்லலுறு கடைய னேனைக்
காப்பாற்ற வேண்டுமெலாங் கண்டு கொள்ளே. (௩௨)

தாமிருக்க மனைகோலி வழியின் முக்கிச்
சார்பிறவெந் துயர்நீங்கித் தரிக்க வெண்ணித்
தேமிருக்க விளையாது புறம்போக் கின்றிச்
சிக்குண்ட வலண்டமதிற் செத்த வாபோல்
போமிருக்கும் பொருள்பூமி புகழ்வீ டாடை
போற்றுபணி யூர்திசுகம் பெண்டு பிள்ளை
தாமிருக்குந் துணையெனவெண் மதியாற் கெட்டுச்
சாதலுக்கென் றேபிறந்து தவிக்கின் றேனே. (௩௩)

தெண்டனிடுந் தொண்டர்தமக் கருள்கூர் நல்லைத்
திரவியமே திருவமுதாய்த் தினைதேன் கொண்டு
துண்டதரக் குறக்கொடியைக் கலந்த நாதா
துணையிலியேன் திருவடிக்கே தொழுதுசொன்னேன்
மண்டுபிணி கொளவிடயம் பொறி கலங்கி
வரும்போதுன் மணிமயிலின் மணியி னோசை
தண்டநம னூர்திமணி நாவி னோசை
தனையடக்கும் வகைவருதி சாமி நீயே. (௩௪)

தெய்வானை யம்மையொடும் வள்ளி யோடுந்
தேவேந்தி வீற்றிருக்குந் திருக்கோ லத்தை
யைவாய வேட்கையறுத் தகத்துட் கொண்ட
வன்பவருக்கு முண்டுகொலோ வன்னை யுந்தி
கைவாரக் கடமுருட்டுந் திருவீ திக்கே
கல்லேனு மண்ணேனுங் காய்த வில்லா
வுய்வான புல்லேனு மளித்தி யேலென்
னூன்பிறவி தவிர்த்திடுதற் குபாய மாமே. (௩௫)

தேய்ந்திடுநுண் மருங்குலிறப் பணைத்தெ ழுந்த
திரண்முலையார் சீறடியின் சிலம்பி னோசை
யாய்ந்திடுமென் செவியுமுன தணிகொள் பாதத்
தணிசிலம்பி னொலியுமறிந் திடுமோ வையா
காய்ந்தமனத் தவர்க்கிருளாய்க் காணொ ணாத
கதிர்வடிவேற் பரவொளியே கதியி லேனைத்
தேய்ந்திடுதற் கினும்விடுதல் சிறப்போ நல்லைத்
தெய்வமே திருக்கடைக்கண் சிறிது நல்கே. (௩௬)

தோன்றுசுழு முனையிடைபிங் கலையி னோடு
தொழில்நாடித் திரியமதிற் றோய்ந்தி டாதிங்
கான்றவனல் கொண்டுவளி மேலெ ழுப்பி
யானந்த நடம்பயிலு மழகைக் கண்டே
யூன்றுமதிக் கலையமுத முண்ணு தூறு
முயிர்கழித்தே னுனதருளை யுறுதி யாயெஞ்
ஞான்றுமெனக் கருளுதியே லுய்வே னையா
ஞாதுருவும் பொருளுமதின் ஞான நீயே (௩௭)

நன்மைசிறி திருந்தறியேன் யார்க்கு நல்ல
நலமறியேன் நயமறியேன் நவையே யுள்ளேன்
தின்மைதருங் கொலைசூழ்ந்தேன் செய்த வங்கள்
சிறிதில்லே னுனைநினையேன் றென்றி சைக்கோன்

வன்மைகொடு போக்கொழியான் றருணம் பார்க்கும்
வன்கூற்றுக் கென்செய்வேன் வள்ளா லுன்றன்
கன்மனத்தை நீக்கியெனைக் கடைக்க ணித்துக்
காப்பாற்ற நின்கடனே கந்த வேளே. (௩அ)

நாடகநன் கமைதலிலாக் குறைவோ வன்றி
நட்டுவத்தின் பணிக்குறைவோ நவையி லாத
பாடகச்செம் பதுமமலர்ப் பாத்தி ரத்தின்
பலக்குறைவோ நிகழ்த்துவையென் பாடெ லாங்கண்
டாடலொடு வீற்றிருப்பி னவனி மீதி
லார்துணையென் றறியாயோ வங்கை யற்கண்
வேடமகள் சிந்தைமகிழ் விசாகா நல்லை
வித்தகனே யெனையாட்டும் விதநன் றாமே. (௩௯)

நாய்கழுகு நரிபருந்து கொடிதீ யாவும்
நகைகொடுமுற் படவிருந்துண் நலமில் சோரி
சீய்தடியா தியநிறைந்த நாலாட் பாரந்
திறம்படநான் பேணிவளர்த் தேமாந் திட்டேன்
வாய்வழுத்தச் சிரந்தாழக் கரங்கூப் புக்கே
வருகருவி கரணமொடு வடிவேல் லாமுன்
தூய்பணிக்கென் றெழுஞான பானு தோன்றித்
துன்பறுத்தென் பால்வளரத் துணைசெய் வாயே (௪௰)

நான்படும்பா டுனதுதிருச் செவிக்கே றாத
ஞாயமென்னே வெங்குநிறைந் தவனீ யன்றோ
கான்படுவான் புனலெனச்சென் றிடவி டுத்தாற்
கருணைதிறம் பியதோவென் கன்ம மோசொல்
தேன்பதுமச் செல்வி திரு மருகா வென்னைச்
சேராது தனிசெனும்பேய் திரியாய்க் கூனுய்த்
தான்செலத்தேய்ந் தகலவருள் தையல் பாகன்
தன்குருவாய் வந்தநல்லைச் சாமி நீயே. (௪க)

நம்பியுனை யடுத்தபின்னுங் கவலை யென்றால்
நாயேனுக் குறுதுணையார் நாடுங் காலே
யம்புவியில் மேருதனை யடுத்த காக
மதுநிறமாய் விளங்குமென வறைவ ரன்றோ
செம்பதுமத் திருத்தாளா சிகியூர் செல்வா
செந்தியருட் சாகரமே சிறிய னேனை
வம்புசெயா தினியேனும் வலக்க ரத்தின்
வழங்குபொருள் தனைவழங்கி வாழ்விப் பாயே. (சஉ)

நீர்விளைக்குங் கருஞ்சேற்றை நீரே போக்கு
நீர்மையது போல்வினைக்கு நிலையாய் நின்ற
சூர்விளைக்குந் தனுவிளைக்கு மொழிக்கு மென்னுஞ்
சூசகத்தா லுடலிருந்தே துணையா யின்பச்
சீர்விளைக்கு முத்திநிலை பயக்க வேண்டுஞ்
சிவமேயத் தொழில்காட்டிச் செய்விப் பான்னீ
கார்விளைக்குஞ் செஞ்சாலிக் கதிர் சான்றோரைக்
காட்டுநல்லைச் சண்முகனே கந்த வேளே. (சங)

நீக்கமுற்றோர் தன்னோடு நீங்கி நாளும்
நிறையழியக் குறையுறுமென் னெஞ்சே நீவா
வாக்கமுறும் வழிசொலக்கேள் பரமா னந்த
வமிர்தைநல்லை தனில்விளங்கு மறுமு கத்தைச்
சாக்கிரத்தி லதீதமுறுந் தன்மை யோர்க்குத்
தானேயா யவரூனந் தவிர்த்தாள் கிற்கும்
வாக்குமன திறந்தவொன்றில் வடியுந் தேனை
வாரியுண்டாற் றீருமந்த வருத்தந் தானே. (சச)

பத்தர்பணி பரங்குன்று பழனி வேலா
பரவைதொழுஞ் செந்தூரா பாலா வேலா
சித்தியொளி ரெட்டிகுடி சிக்கல் சேயூர்
திருத்தணிகை தண்ணிர்மலை சிகிக்குன் றூரூர்

முத்திதரு மெருவைமலே யேர கத்தின்
        மூர்த்தியுயர் கதிர்காமா முதிர்குன் றத்தா
யித்தனையு மாடல்கொண்டா யெங்கு மாறு
        யீசாநல் லூரமர்ந்த வின்ப வாழ்வே. (சரு)

பல்காலும் புரியபிடே கத்தாற் பொங்கிப்
        பஞ்சமுதும் பாலுமொன் றிப் பரக்கும் வீதி
புல்காநின் றிடும்பிரதக் கிணத்தால் நாளும்
        பொருந்துமடித் தொண்டர்குழாம் புன்மை யான
மல்குதுயர் கழீஇப்பொலியும் மதில்சூழ் நல்லை
        மயிலோனை வெளிவீட்டில் மதியா லூன்றி
யல்பகலு மகநாட்டத் தினிது காண்போ
        ரகமிருந்து மிருவயிற்பற் றறுப்பர் தாமே. (சகூ)

பன்னிருநா மம்புகழும் பதியா யோங்கு
        பன்னிரண்டின் மேலுளதாய்ப் பரவுந் தெய்வத்
தின்னருளைத் திரவியத்தைச் செங்க ரும்பி
        னினியகட்டிச் சர்க்கரையை யிமையோர் சென்னிப்
பொன்னடியைத் திரைமறைக்குட் பொருளை வேண்டார்
        புரமெரித்த புண்ணியர்க்குப் பொருளை யோது
மென்னரிய கண்மணியை மாணிக் கத்தி
        னினியகங்கை தனில்விளங்கு மிரத்தி னத்தை (சஎ)

கற்பூர தீபவருட் பிரகா சத்தைக்
        காணார்க்குக் காணாத காட்சி யானைச்
சிற்பரனைச் சிரமொடுநா சேதிப் பார்க்குத்
        தீங்கலிவன் பிணிமடனுந் தீர்த்தெ ழுப்பு
மற்புதனைச் செந்தழல்சந் தனக்கு ழம்பா
        யாக்குமறு முகவடிவே லைய னைக்கும்
பொற்பதியாங் கதிரைமலைப் புத்தேள் வீதிப்
        புழுதிபடி னெழுபிறப்பும் போக்க லாமே. (சஅ)

பத்திமைசேர் நெறியறியேன் பணியு மில்லேன்
பதைப்பறநின் றொருகணமும் பதிய வுள்ளம்
வைத்தறியேன் நினைந்தறியேன் வள்ளா லென்றும்
வாட்டமிடித் துயர்நலிப்ப வன்கோட் பட்டுப்
புத்திகலங் கிடவளர்புல் லுருவி மூடு
பொருவில்தரு வெனக்கலங்கிப் புலம்பு வேற்குன்
சித்தமதைத் தந்தருளி யடிக்கீழ் வைப்பாய்
சிவையளித்த கற்பகமே தேவ தேவே. (சகூ)

பாவியென்றன் சிந்தைநின தடிக்கே யாக்கிப்
பணிசெயற்கெ னிருகரமும் பணிவித் தூறும்
நாவினையுன் றிருநாமந் தனக்கே யாக்கி
நானிலத்தி லுறுதுயரால் நலிவெய் தாது
மேவிவளர் சுகானுபவ மீந்தாட் கொள்வாய்
மெய்மையென வுனையடுத்தேன் மேலு மேலு
மாவிபிரிந் திடுமளவு கவலைக் காளா
யமைத்துவிட்டா யப்பனே யழகி தாமோ (ருo)

பிறந்துமிறந் திடுதெய்வப் பிணங்கள் பாற்போய்ப்
பிதற்றியுய்யக் கதிதேடும் பித்த ரேகீர்
கறந்தருந்திக் கற்பசுவின் பாலைக் கையாற்
கண்டவரு முண்டுகோலோ கன்ம னத்தோ
ரறந்துறந்தோர்க் கெய்தாத வமுதை நல்ல
யறுமுகனைச் செம்மேனி யமலன் றன்னை
மறந்திருந்து கெட்டுவிடா துன்னி வாழ்த்தி
வணங்குவரைக் கைலைதன்னில் வணங்கு வாரே (ருக)

புரமெரித்த விரிசடையம் மதியஞ் சூடும்
போதாந்தப் புண்ணியர்க்குப் போதித் தானைக்
கரவெரித்த மனக்கோயிற் கடவு டன்னைக்
கண்கள்பனி ரெண்டுடைய கதிர்வே லானை

யுரமொளிரு மருணகிரி யுரைக்குள் ளானை
யூணென விடியொடுதே னுவந்தான் றன்னைத்
திரமுடைய மனமொழியாற் றெரிவித் தானைத்
தெவிட்டாத சிவக்கொழுந்தைச் சிந்தித் தேனே (௫௨)

புந்தியிலே னிதுவரையு மோயா தீட்டும்
பொல்லாத பவச்சரக்காம் பொதியை யோம்பி
மந்தியெனும் மனம்வாக்குக் காயத் தேற்றி
வருபயனிற் சிலபுசித்தே மறித்துங் கொண்டேன்
செந்தியினுங் கதிரையினு மாரூ ரான
திருநல்லைப் பதிபுகவுஞ் சேர்த்து வைத்த
தொந்தமுறும் பழஞ்சரக்கும் புதுச்ச ரக்குந்
தொலைந்திடவெம் பணிநீங்கிச் சுகம்பெற் றேனே.

புண்ணியமே வடிவமெனப் பொலிந்த வேடர்
பெருமானார் பொன்னடியிற் பொருந்து நற்றோல்
மண்ணிடைத்தோய்ந் திடவேட்டஞ் செய்நா ளந்த
வழிப்புல்லாய்க் கிடந்திடினு முய்வே னன்றோ
வெண்ணுதற்கே யிடும்பைதனைப் பிறந்தே னன்றி
யென்னறிந்தே னென்செய்தே னீரா றுகும்
கண்ணுடையாய் வேலுடையா யிரங்கி யாளாய்
கற்பகமே நல்லைவளர் கனகக் குன்றே. (௫௪)

பூவளர வருஞான வாயி லானும்
புகலவரு பசுஞான போதத் தானும்
நாவளர வழுத்தவெட்டிப் பார்க்கொ ணாத
நலமேவு பேரறிவே நாயே னை
தாவளருஞ் சிற்றறிவேற் கிருளை நீக்குஞ்
சண்முகப்பே ரொளிவடிவே தமிழின் மேன்மை
சாவளருங் குறளறியு மெலும்பு நீருந்
தானறியும் வன்னிசுரந் தாலந் தானே. (௫௫)

பையரவி னடனமிடும் பச்சை மேனிப்
பரந்தாமன் றிருமருகா பரவை யார்தந்
துய்யமனைக் கொருகாலி லிருகாற் றூது
சொலநடந்து மாரூரன் றுணைவ னாகி
வையமிசைக் குற்றேவல் தமிழ்க்குச் செய்த
வரிவேங்கை யதளுடையோன் மைந்தா வெற்கிங்
குய்யவினிப் புகலிடம்வே றில்லை யென்னை
யுடையானே யுறுதுயரை யகற்றி டாயே. (௩௬)

பொறிவழியே செல்லமன மதனைப் பற்றிப்
போகுமென தறிவுகடாப் போல வேயந்
நெறிவழியே செல்லுமது கொழுவ ழிச்செல்
நெடியதுன்னூ சியைநிகரு நிலைமை யாமா
லறிவருளி யுனதடிய னெனவே செய்தே
யந்தகனுக் காளாகா தாண்டு கொள்வாய்
வெறிகடப்பந் தார்மார்பா வெற்றி வேலா
விண்ணவர்தங் கண்மணியே விமல வாழ்வே. (௩௭)

பொருந்திடுசன் மார்க்கமொடு சகமார்க் கஞ்சேர்
புத்திரமார்க் கந்தாத போற்று மார்க்கந்
திருந்தியவிம் முறைநெறியி லொன்று மில்லேன்
தீவினைசேர் மார்க்கமே சேர்ந்து நின்றேன்
வருந்துணையீ தெனவறியேன் மாசு பூண்டேன்
வள்ளாலுன் றிருவடியு மருவு மோதா
னருந்துணையே யைவரெனைக் கைவிட் டோடு
மப்பொழுதுன் னருட்சேவை யளித்தாட் கொள்ளே.

மறைமுதற்குப் பொருளுரைத்த மனவாக் கெட்டா
வருசரவ ணோற்பவனை மாலைந் தோட்டிக்
குறைவிறவம் புரிமெய்மை கண்டார்க் கென்றுங்
கூடிநின்று வெளியாமாற் கூறொ ராறு

றைவடிவா யமர்ந்தபர ஞான நந்த
நின்மலநிட் களங்கசுக நிலையத் தோற்றம்
பறைமுழங்க நகர்வலஞ்செய் பாவி காணீர்
பன்னிருகை வேலவனைப் பரவு வீரே. (ரு௯)

மனைவியர்க்குத் திருக்கழுத்தி லமரர் பூட்டும்
மங்கலநாண் நிலைதிரியா வகைசூ ராதி
கனைகடல்போல் வருஞ்சேனைப் பதக ரெல்லாங்
காற்றெதிர்த்த புகைபோலக் கலங்கி மாள
வினைதொடுத்து விண்ணோர்த மாவி யூர
வேல்விடுத்த கந்தப்பா விசாக னேயென்
றனையினுங்கண் பாராது விடுதல் நன்றோ
தாயிலிபோற் றவிக்கின்றேன் றனிமை யேனே. (௬0)

மண்ணூடும் மண்ணினிடைப் பயிர்க ளூடும்
வருவிறகிற் றீயூடும் வானி னூடு
மெண்ணூடு மெள்ளினுறு தயிலம் போல
விருக்குமுன திறைநிலையா ரியம்பற் பாலார்
கண்ணூடு மணிபோலக் கலந்த நல்லைக்
கதிர்வடிவேற் கந்தாநின் கருணை யென்பாற்
றண்ணூறிற் புழுவடிவாய் மலத்தி னூடு
தரியெனினு மறித்துரையேன் தாங்கு வேனே. (௬௧)

மயக்குறுவோர் மயக்கமுறும் பொருளை யீது
வகையெனவு மறிவித்தே வளருங் குய்ய
முயக்குமதில் வருபிறப்பு மொழிக்கும் வேலா
மூதறிவில் லாதேற்கு முன்னீ காழி
வியக்கமுறும் பாலயின்ற பொற்று லத்தில்
மேவுதுளி தனையளிக்க விரும்பு வாயேல்
தியக்குமனைத் தொடக்குமழித் தெழில்ஞா னத்தாற்
சிவமாயுன் சீர்பாடிச் சீவிப் பேனே. (௬௨)

மண்டலத்தே மானிடராய்ப் பிறந்த பேர்கள்
மருவுபய னினதடியார் மலர்ப்ப தத்தே
தொண்டுசெய்து நின்கோயில் சூழ்ந்து போற்றித்
தொழுதுனடி பரவிவினை தொலைத்த லன்றோ
மிண்டுசெய்த வசுரர்குழாம் மாள வெற்றி
வேற்படைமேற் றிருநோக்கம் விடுத்த வேளே
மண்டுபிணி கலிநலிய வருள்நோக் கென்மேல்
வைத்தருள வேண்டுநல்லை வைவேற் கோனே. (௩௩)

மக்களது யாக்கைதனிற் பிறந்த தொன்றே
மருவுமன்றிப் பின்னையொரு வளமுங் காணேன்
தொக்கதுய ராழியின்வா யமிழ்ந்தி நெஞ்சந்
துடிதுடித்து நிதமோயா தோடி யோடி
நக்கசெயற் காளாகி விட்டே னையா
நல்லைவரு நாயகனே நயனக் குன்றே
மிக்கதொரு நாட்டமெனக் கமைந்தாற் போதும்
விழுங்குமிடித் துயரகல வேற்கை யானே. (௩௪)

மனமெலிந்தேன் சொன்மெலிந்தேன் வளரு மின்ப
வாரிதியே யிடர்மிக்கேன் வருபா டற்றேன்
தனமெலிந்தே னெனவொன் றமைத லற்றேன்
சாதலுக்கென் றேவளர்ந்த தன்மை யானேன்
கனமுறையாய்க் குறையிரந்தேன் கண்பா ரையா
கதிர்வடிவேற் கரதலத்தாய் கமழுந் துய்ய
வனமணிநா ரணன்மருகா மனமொர் காலும்
வருத்தமுறு வண்ணமருள் வழங்கு வாயே. (௩௫)

மனிதரினு முயர்ந்தவர்வா னவரென் றோதும்
வார்த்தைமறை யவரிழிபு மதித்தன் றீனப்
புனிதமில்லாப் புழுத்தகடை நாயேன் றீயப்
புன்னெறிகண் டெழுந்ததன்றோ பூட்கை மானின்

வனிதையருண் டறிந்ததெளி தேனே பாகே
மயிலேறு மாமணியே மதித்தென் பாலே
யினியேனு மருளுதியுன் னுணை கண்டா
யெங்கொளித்தா யென்றுயர்கண் டின்னு நீயே (௬௬)

மாமைகுடி வீற்றிருக்கும் வாட்கண் மாதர்
மனமுருகக் கனிந்தூறும் வார்த்தை கேட்டுத்
தாமுமது போற்பிரதி தாங்க வுன்னிச்
சலித்ததினுல் வாய்சேப்ப வளையக் கிள்ளை
பூமைகொளு நல்லைநகர்ச் சேயை யன்னு
னுரைசெயற்கு முடியுமோ வுயிர்போய் விட்டாற்
றீமைதவிர்த் தாணையிட்டு மறிப்பார் யாரோ
செத்தபிண மெனநாமஞ் சேரு மன்றே (௬௭)

மாற்றியவா றுதித்தல்செய்து நடங்கொள் வானை
மாவடிவாய் வருஞ்சூரை வதைசெய் தானைக்
கூற்றுதைத்த பாதனரு ளெம்மான் றன்னைக்
குஞ்சரத்துக் கிளையோனைக் குமர வேளை
மாற்றுயர்ந்த பசும்பொன்னை மாணிக் கத்தை
மயக்கறுக்கு மருமருந்தை மனத்துட் கொண்டோ
ரேற்றியெறி வாட்படையுங் கலவைச் சாந்து
மின்பாலுங் கைக்கூழு மிசைபென் பாரே (௬௮)

மான்மகளிர் தம்மதொரு நாணே யென்ன
மற்றவர்தம் விழிகளிக்கும் வடிவ மென்னக்
கான்மலியும் மரகதமும் பதும ராகங்
கலந்திழைத்த மாணிக்கக் கதிரே யென்ன
வான்பிறங்கு கோடிதிவா கரனே யென்ன
வருமடியா ருளமலர்த்தி மகிமை காட்டி
யான்பொழியும் பாலூடு நல்லை மேவி
யாறுமுக மானபொரு ளங்குண் டாமே. (௬௯)

யானெனதென் றெழுஞ்செருக்கை யிழந்த தூயர்
யாரெனினு முளையிழவா ரிமைப்போ துண்மை
தானெனவே மறைமுழக்கஞ் செயவு மோராச்
சழக்கனே னுளையிழந்து தவிப்பே ளையா
மானளித்த குறக்கொடியாள் வள்ளி பங்கா
மாற்றிறந்த பசும்பொன்னே வையமீதே
யூனெடுத்த கொடியனேன் விளைக்கெஞ் ஞான்றே
வுறுமிறுதி யறிகிலே னுரைத்தி டாயே. (எ0)

வணங்கிடுவோர்க் கிதஞ்செய்து வழங்க லின்றி
மறலிகையிற் சிக்குண்ணும் மருள்சேர் தெய்வப்
பிணங்களைக்கொண் டாடாதீர் பெரும்பே றுன்னிப்
பேதைமைபோக் குறவேண்டிற் பெய்வான் பொன்னை
யனைங்குதனக் கணங்குசெயு மையன் றன்னை
யற்புதனைச் சிற்பரனை யந்த மில்லான்
குணங்கடனைப் பரவிநின்று கும்பிட் டேத்திக்
கோயில்தன்னை வலஞ்செய்தாற் கூடு மன்றே. (எக)

வஞ்சகமு முலோபமொடு பொறாமை வன்கண்
மருவுமிழி வுடையவுன்றன் மனத்தே யான்கூர்ந்
தெஞ்சலின்றி யுறைந்திடுதற் கிடமின் றென்றே
யியம்பிடுவா யெனினொருசா ரேனு மின்றே
வஞ்சலிசெய் துனைப்பணிந்தே னிரங்கி யாளா
யறுமுகனே யவனருளா லவன்றாள் பேணித்
தஞ்சமெனு நிறைமொழிபொய்ப் படுமோ வெந்தாய்
சஞ்சலந்தீர்த் தெனையாளத் தருண மீதே. (எ௨)

விரிந்திடுநங் கருணையுயர் தவத்தர் பாலே
மேவுமன்றிப் புன்மையினர் மேலுஞ் சற்றுச்
சொரிந்திடுமோ வென்னினெழு பெருவெள் ளந்தான்
துகளறுவா ரிதிமட்டோ துப்பி லாத

சரியுறவி யனைதனிலும் புகுது மன்றோ
சண்முகனே யீதுனது தன்மை யாகுங்
கிரிபொடித்த வேற்படையா யென்பா லுன்றன்
கிருபைவைத்துக் கவலைதனைக் கேடு செய்யே. (எங)

வாக்கொடுபுன் மனமும்புலை யுடம்பும் மாறி
மறத்துறையே திரிந்தகடை மதிநா யேனை
நோக்கொருபன் னிரண்டுடையாய் நோக்கி னென்றால்
நோக்கிநலி நோக்காடு நோதல் செய்வாய்
தாக்குகுறட் கஞ்சிமுரு காவென் றுன்னித்
தகுமுருகாற் றுப்படைசொல் தமிழோன் றன்னைக்
காக்குமறு முகவடிவேற் கடவு ளேயென்
கருத்துனது புகழையன்றிக் கருது றாதே. (எச)

வாயானை மனத்தானை வடிவே லானை
வாக்கிறந்த பூரணத்தின் வாசி யானைச்
சேயானைத் திகழ்நல்லை மேவி னானைச்
சீரலைவாய்க் கரைவளருந் தீங்க ரும்பைத்
தாயானை வேண்டுவன தரிக்கா தென்றுந்
தந்தருளுஞ் சண்முகனைச் சதுர்ம றைக்குந்
தூயானைத் தூய்மையிலார் சேய்மை யானைத்
தொழுதடியேன் களிவளரச் சுகிக்கின் றேனே. (எரு)

வாழ்ந்திடுவோர் தமக்கியற்கை வடிவே லேந்தும்
வள்ளிபங்கன் றிருக்கோயில் வலஞ்சூழ் தொண்டர்க்
காழ்ந்திடுநேர் பத்திகொடு தொண்டு செய்யு
மல்லலிலாப் பேர்வாழ்க்கை யாகு மன்றோ
வீழ்ந்திடுவோர் தமதுகுறி வீண ரோடும்
விழல்படுத்தி நாட்கழித்து வெறுமை யாகித்
தாழ்ந்திடுவோர் பணியாற்றித் தருங்கூழ் கொண்டு
தனுவளர்த்து நரகாட்சி தமக்கென் பாரே. (எசா)

விருப்பினொடு திருவாலங் காட்டின் முன்னாள்
மிகமெலிந்துந் தலையினால் விரும்பிச் சென்ற
வருத்திவள ரம்மையோ நினது சீர்கொ
ளாலயங்கள் தனைக்காலா லடைந்துஞ் செல்லக்
கருத்துமிலாப் படிறனே பேயார் சொல்லாய்
கந்தாசெந் தூர்வளருங் கரும்பே நல்ல
யிருக்குமறு முகப்பொருளே யெங்ங னுய்வே
னெனதுரையு மதித்திரங்கி யேற்றுக் கொள்ளே

வேல்கரங்கொண் டடியார்தம் வினைவேர் பாற
வீழ்த்தியளித் தவ்வவர்தம் வேண்டு கோளைச்
சாலவுவந் தேற்றளிக்குந் தன்மை யாலித்
தரணிபுகழ்ந் துணையடைதல் சரத மன்றோ
காலமொடு கோள்குறளை கடுநோ யெல்லாங்
கந்தாவென் பாலடையாக் கருணை செய்வாய்
தாலமுண்ட வளைக்கரத்தோன் மருகா நல்லைச்
சண்முகனே யென்குறையைச் சாற்றி னேனே (எஅ)

முன்பிருந்தார் பின்பிருந்தா ரெவரி லேனும்
மொழியிலெனைப் போற்றுயர முழந்தா ருண்டோ
வின்பமுட னுண்டிருந்தா யுண்டார்க் கென்று
மென்தெரியும் பசிவருத்த மியல்பி தாமால்
வன்கரிய மதுகரமுள் ளிருந்து வாழ்ந்தே
வயிரமறத் துளைத்துவிட்ட மரம தானே
னன்புருவே யறுமுகனே நல்லை நாதா
வகமகிழ வுறுதுயரை யகற்றி டாயே. (எகூ)

அண்டருல காட்சிகொள வழிசூ ராதி
யவுணரொடு கிரிசிதற வழித்து நீறாய்க்
கண்டவடி வேல்தரித்த கந்தா செந்தூர்க்
கடவுளே கதிரைமலைக் காட்சி யானே

துண்டதரக் குஞ்சரிமான் மகிழும் வெற்றித்
தோகைமயில் வாகனனே சுப்ர மண்யா
மிண்டுசெயும் வினைத்துயராற் கலங்கி நாளும்
மெலிகின்றேற் குனதருளை விரைந்து தாவே. (அ0)

சொற்படுமா றில்லைமனக் கரண மாதி
தோன்றுசெய லடவுதிக்குந் துன்ப மின்ப
மெற்படுமா றருத்திவினை யூட்டி விக்கு
மீசாநின் செயலறியே னெல்லா மாகி
நிற்படுமா றறிவுறுத்தி நிலையு மாகி
நின்றருளுங் குருபரனே நீப மார்பா
வற்புதனே யலைதுரும்பாய்க் கலங்கு வேனை
யஞ்சலென வந்தருளி யாண்டு கொள்ளே. (அக)

என்சொலலா மென்சொலலா மேழை மைக்கிங்
கிருந்தபடி யேபாவ மேத்தி நாளும்
புன்சொலினு லேனுநினைப் பாடி யாடிப்
புகழ்பெறவோர் கணமேனும் பொருந்தி நில்லேன்
வன்சொலினுர் முன்செல்லா வள்ளி பங்கா
வானவர்சே னுபதியே வழுத்தும் வேத
முன்சொலினு'லுனைத்துதித்து முன்றன் கீர்த்தி
யுரைசெய்து முனையுணர மாட்டா தன்றே, (அஉ)

உனையுளங்கொள் பொருளாக மதிப்பார் பின்னு
மொருவரைப்பின் செலவேனு முன்னு வாரோ
பொனையுறுதிப் பொருளாகக் கொள்வர் கீழாம்
புழுதிதனைப் பொதிவாரோ பூமி மீதி
லனையுமுயர் தந்தையுமா யெல்லா மாகி
யான்றதுணை யாகிநின்ற வரசே தஞ்சம்
பினையுனையல் லாதுபிறி தில்லை யன்றே
பிறந்திறந்திங் குழல்வேற்குப் பேணு மாறே. (அங)

அடியவரைப் பணிந்தறியே னன்பில் லாதே
னார்க்குமணிப் பணிலமரு தணிகொள் கோயில்
முடியுறத்தாழ்ந் தெழுந்துவலஞ் சூழ கில்லேன்
மூண்டெரியத் திரியேனுந் தூண்டி நில்லேன்
கடிகமழ்பூ மாலைதொடுத் தணிதல் செய்யேன்
கந்தாவொன் றேனுமிலாக் கடையே னீற்றி
லிடியொலிபோல் வருங்கூற்றுக் கென்சொல் வேனி
னெழின்மயிலும் வேலுமென விருக்கின் றேனே.

அன்பொடுநின் பாலடைந்து கேட்ட தெல்லா
மப்பனே யளித்தருளென் றருத்தி யோடு
துன்பமெலாம் பொறுத்துநின்றே னினிமே லென்னாற்
சுமக்கமுடி யாதடிக்கே சொல்லி விட்டே
னின்பமளித் தாண்டாலு நீயே யன்றி
யில்லையெனக் கைவிடினு நீயே யையா
வென்பொருளென் னுயிருட லெல்லா மாகி
யிருப்பவனே யேதுபுக லேழை யேற்கே. (௮௫)

ஆதரஞ்சற் றேனுமிலாச் சிறிய னேனை
யன்பொடுநின் பேரருளா லாண்டு கொண்டாற்
பேதமிலா னின்னடிய ரீதென் செய்கை
பித்தன்மக னுண்டியெனப் பேசு வாரோ
பாதமன்றிப் புகலிடவே றில்லை யையா
பன்னிருகைப் பரனேகண் பாராய் நல்லை
நீதருக நாதவள்ளி பங்கா செந்தூர்
நித்திலமே யுன்னையன்றி நிலையில் லேனே. (௮௬)

ஐந்தெனும்பே ரறிவுமொளிர் பார்வை யாகி
யடுத்துவரு கரணமொரு நான்குஞ் சேர்ந்து
சிந்தையென முடியவரு ஞானா நந்தச்
சிற்பரசின் மயசிவசண் முகவி லாசக்

கந்தசர வணபவநின் னருட்கோ லத்தைக்
　　கடைச்சிறியேன் காணுநா ளுண்டு கொல்லோ
சந்ததமும் வேதமொடா கமமு ழக்கந்
　　தயங்குநல்லை நாயகனே தணிகை வாழ்வே. (அஎ)

ஒன்றெனக்குன் பால்வேண்டு மொளியா தீத
　　வுரிமையுனக் குண்டுதின முரைக்கு மென்பா
லென்றுதிரு வுளமிரங்கி யளித்தாட் கொள்வா
　　யேழைதனைக் கைவிட்டா லெங்ங னுய்வேன்
பொன்றுமிடித் துயருனது திருநோக் கென்மேற்
　　பொருந்திவிடி னீறுகப் போகு மன்றோ
கன்றுகுணில் கொண்டெறிந்த காயா மேனிக்
　　கண்ணபிரான் றிருமருகா கந்த வேளே. (அஅ)

இறைவவுன தருளெனக்கோ ரணுவு மில்லை
　　யியம்புவதுன் செவிதனினு மேறு தில்லை
குறையிரந்தார்க் கருள்கொழிக்குங் குமரா நல்லைக்
　　கோயில்கொண்டா யென்னளவிற் குறைவை யாதே
யறைபுனல்சேர் செஞ்சடையா யடியேன் மிக்க
　　வஞ்சினே னுன்பால்வந் தடைந்தே னையா
வுறவுடையா ரெவருமில்லை யெனைக்கண் பாரா
　　யுத்தமனே யேற்றருளெ னுறுக ணின்றே. (அக)

உறவுடையா ரெவருமுற வுடையார் போல
　　வுள்ளளவு முடனுறைவ ரொழிந்த போதே
சிறகுடையார் வடநட்பே தெரிவ தொக்குந்
　　தீயருற வகன்றுனது செம்பொற் பாத
மறமுடையா ரடைவரடி நாயே னுக்கு
　　மணுகுமோ வலந்தவர்கட் கருளு மெந்தாய்
மறமுடையே னுன்பால்வந் தடைந்தே னென்பால்
　　மனமுவந்து பிழைபொறுத்து மன்னித் தாளே. (கூ)

கஞ்சமலர் மீதுறையுந் தேவென் னுளுங்
கவலைகொண்டு துன்படையக் கடவை யென்று
வஞ்சமொடு தலைமீதி லெழுதி விட்ட
வருந்துதலை யெழுத்தெனுந்தீ யெழுத்து மாறக்
குஞ்சிதசெஞ் சரணார விந்தத் தேறல்
குளிரவளித் தெனையாள்வாய் குறைகள் தீரத்
தஞ்சமுனை யன்றியில்லைச் சரத மீது
சாற்றினேன் சண்முகனே தாங்கிக் கொள்ளே. (கூக)

கரணமொடு தளர்கருவி கால்க ரங்கள்
கண்பஞ்சிட் டறிவிழந்து கதியொன் றின்றிப்
பரணமுறப் பாய்துணையாய்க் கிடக்கும் போது
பன்னிருகண் ணுடையநல்லைப் பதியா யென்னைத்
திரணமெனுங் கபம்வருத்தஞ் செய்யா துன்றன்
சிந்தனையில் மனநிலைக்கச் செய்து நீங்கா
மரணமுறும் போதுனது மடிமே லென்னை
வைத்திருக்க வேண்டுமிந்த வரந்தந் தாளே. (கூஉ)

கறங்குதிரை சகடக்கால் கருவி நாடா
காரிகையார் தயிர்மத்துக் கழறு மீது
பிறங்குதொழிற் பிறப்பகற்றத் தெளிவீர் நல்லைப்
பெருமான்றன் றிருநீறும் பெருமை சால
வறங்குலவு மந்திரமா றெழுத்துங் கோல
மணிதீர்த்தத் துளியகத்து மணிந்து கொண்டால்
மறங்குலவு புள்ளியிட்ட கணக்கு மாற்றி
வருவிதியின் றொழிலகற்றி வாழ லாமே. (கூந)

கற்பகமுந் தாமரையுந் துளவுந் துய்ய
கடுக்கையொடு கடிகமழுங் கதிர்வே லாநின்
பொற்பமருந் திருவடிக்கீ ழிமைப்போ தேனும்
பொங்குவகை யுள்ளூறப் பொருந்தி நெஞ்ச

நிற்பதன்றி யமிழ்தருந்தி விண்ணோர் போற்ற
நிறைதருக்கீழ் மாபோக நிலையும் வேண்டேன்
புற்புதநே ருற்பவமெத் தனைவந் தாலும்
பொருந்துவதீ தாகவெனைப் பிறப்பிப் பாயே. (கச)

கைக்கெடுத்தல் வாய்க்குதவா வினையின் பான்மை
கனியிருக்கக் காய்வீழ்த்துங் கனிவி லாது
புக்கடுத்த காயிருக்கப் பழம்வீழ்த் தாதேற்
புகலுவதா ரீதெனநின் புகழல் லாது
மைக்கணிமான் மடமாதும் வார ணத்தின்
மகளினொடும் நீயிருக்க வாட்ட முற்றுத்
தக்கதுணை யில்லார்போற் றளர்ந் திருத்தல்
தகுமோசண் முகநாதா சரண்புக் கேனே (கரு)

கோவேநீ பசுபதியெல் லாவு யிர்க்குங்
குகமயமே யகிலாண்ட கோடி யீன்ற
தேவேசிற் சத்தியொடு முகள மாகித்
திருவிளையாட் டயர்சகளந் தெரிக்குஞ் செல்வா
பாவேயச் செஞ்சொலுண்டு வாயுண் டுன்தாள்
பணிந்திடற்குச் சிரமுண்டு பத்தி செய்ய
மாவேயு மனமுண்டு துணைநீ யுண்டு
வருந்துவனோ மருளரைப்போல் வைய மீதே (கசு)

காமருளக் கருவிளைக்கும் வதனத் தாலுங்
காவிவிழி தன்னாலுங் கண்டு நேருந்
தூமொழிசேர் தவளநகைப் பவளச் செவ்வாய்த்
தோகையர்தம் மயற்பீடத் துணைமு லைக்கும்
வாமமுறு நுண்ணிடையாற் றுகிலாற் செய்ய
வடிவுதன்னா லொயில்நடையால் மனமீர்ப் புண்டு
சேமமின்றி யலைந்தொழியக் கடவே னோவென்
சிந்தையினு நல்லையினுஞ் செழிக்குந் தேவே. (கஎ)

கோதில்பெருங் குணக்குன்றே வடிவே லேந்துங்
குமரகுக சண்முகனே குறமின் நாதா
சோதிதிரு முருகாவென் றனது தாளைத்
துதித்தடியேன் நினைந்துருக வரமீந் தாளா
யாதிநிலை நாளதனி லமர ருர்நின்
றஞ்சலித்து நாணமுற வவனி யாண்ட
காதிமகன் படைத்தநக ரென்ன வோங்குங்
காட்சிபொலி நல்லையில்வாழ் கந்த வேளே. (கஅ)

என்னபிழை செய்திருந்த போது மையா
வேழையென்மேற் கருணையுட னிரங்கி யாண்டே
யன்னபிழை தனையகற்றி யடிய னுக்கி
யணிபெறுசிற் பரபோக மளித்தே யென்று
மின்னலிலாப் பொருவாழ்வி லிருத்தி வைப்பா
யிகபரத்துக் கொருபொருளே யிறையே நல்லை
வன்னமயின் மீதொளிரும் வடிவேற் கையா
வள்ளிபங்கா தொழுதடியேன் வழுத்தி னேனே. (கக)

பேறுபதி னாறுமெனக் களித்தல் வேண்டும்
பெம்மானே யிவ்வுடம்பு பிரிந்து போனாற்
கூறுதற்கெவ் வுடம்பெனநிச் சயமின் றுருகுங்
கொள்கையினு லிச்சணமே கொடுத்தல் வேண்டு
மாறுசமை யங்களுக்கு மறிவு நீயே
யாதலினு லறுமுகங்கொண் டாடல் செய்தாய்
வீறுவடி வேற்கரனே முருகா வெந்தன்
விண்ணப்ப மீதுனடி வேண்டி னேனே. (ள)

சண்முகமாலை முற்றிற்று.

68-11-51

நல்லைக்கலிவெண்பா

பூங்கமலச் சங்கரனார் புத்திரா திக்கரிய
பூங்கமலச் சங்கரனார் புத்திரா—பூங்கமல
வாய்ச்சங் கரிக்கு மருகனே நால்வேத
வாய்ச்சங் கரிக்கு மருகனே—வாய்ச்சங்க
கார்த்திகையா நாளீன்ற கந்தனே பொற்கனகக்
கார்த்திகையா நாளீன்ற கந்தனே—கார்த்திகையிற்
காக்குஞ் சரவணத்தின் கந்தன் றனக்கிளைய
காக்குஞ் சரவணத்தின் கந்தனே—கார்க்கிரணங்
காய்ந்த கதிர்வடிவேற் காங்கேயா சூர்ப்பகையைக்
காய்ந்த கதிர்வடிவேற் காங்கேயா—காய்ந்தகதிர்
ஆறு முகத்தா யறுமுகத்தா யன்பர்பங்கில்
ஆறு முகத்தா யறுமுகத்தாய்—ஆறு
பரசமய மான பதத்தா யிமையோர்
பரசமய மான பதத்தாய்—பரசமயம்
சேந்தா விசாகா திருக்குமரா குன்றெறிந்த
சேந்தா விசாகா திருக்குமரா—சேர்ந்தருளி
வாசக் கடம்ப மலர்வனத்தாய் நீள்குறிஞ்சி
வாசக் கடம்ப மலர்வனத்தாய்—வாசத்திற்
சிந்தூர மாய்விளங்குஞ் சேவகா சீர்வயலூர்
சிந்தூர மாய்விளங்குஞ் சேவகா—சிந்தூர
ஓங்கார வெங்க ளுளமுருகா வென்றுதித்த
ஓங்கார வெங்க ளுளமுருகா—ஓங்கார
ஆதி திருத்தணியி லாதாரா வேரகத்தோர்
டாதி திருத்தணியி லாதாரா—ஆதி

பழனிமலே யாதரித்த பாலா விராலூர்ப்
பழனிமலே யாதரித்த பாலா—பழனிமலே

கூடற் குடவையுடன் குன்றத்தா யெங்கோளித்தாய்
கூடற் குடவையுடன் குன்றத்தாய்—கூடநகை

ஆயன் குடியலேவாய்க் காசாரா வெட்டிகுடி
ஆயன் குடியலேவாய்க் காசாரா—ஆயன்பாற்

பாதச் சதங்கை பரிபுரத்தாய் பங்கயப்பொற்
பாதச் சதங்கை பரிபுரத்தாய்—பாதத்தில்

ஆர்க்குஞ் சிவன்றிருக்கா ளாஸ்திரியா யஞ்செழுத்தின்
ஆர்க்குஞ் சிவன்றிருக்கா ளாஸ்திரியா—யார்க்குமர

ஆரூ ருடன்காசி யம்பலத்தாய் கச்சிநகர்
ஆரூ ருடன்காசி யம்பலத்தாய்—ஆரூரில்

ஆறிரண்டு கையானேக் காவிரிவாய்க் காவேரி
ஆறிரண்டு கையானேக் காவிரிவாய்—ஆறிரண்டு

நாட்டம் படைத்துடைய நாயகா வென்கருத்தில்
நாட்டம் படைத்துடைய நாயகா—நாட்டகத்தின்

அண்ணு மலேக்கயிலே யாதரிப்பாய் காவேரி
அண்ணு மலேக்கயிலே யாதரிப்பாய்—அண்ணுவா

நாகையா லங்காடா நல்லூரா நள்ளாறு
நாகையா லங்காடா நல்லூரா—நாகையால்

முத்திகிரி சிற்சிலம்பின் முன்னியுள்ளாய் கோளிநெடு
முத்திகிரி சிற்சிலம்பின் முன்னியுள்ளாய்—முத்திகிரி

வந்தெனேத்தா னம்பலத்தாய் மங்கலத்தாய் சொற்கமென
வந்தெனேத்தா னம்பலத்தாய் மங்கலத்தாய்—வந்தெனேத்
[தான்

திருக்கொறுக்கைக் காருகிச் சேர்வாய் கடம்பூர்
திருக்கொறுக்கைக் காருகிச் சேர்வாய்—திருக்கொறுக்கை

மெய்ப்பூந் துருத்தியாய் விற்குடியாய் கண்டியுயர்
மெய்ப்பூந் துருத்தியாய் விற்குடியாய்—மெய்ப்பூஞ்சார்

சொற்கத் துறையுகந்த தூநெறியாய் நாயடியேன்
சொற்கத் துறையுகந்த தூநெறியாய்—சொர்க்கமே

நிறஞ்செய்வா ரன்பருள்ளே நிற்பாய் நிறம்போல்
நிறஞ்செய்வா ரன்பருள்ளே நிற்பாய்—நிறஞ்செய்

களைமேவு சாத்தானங் கண்டாய் கடவூர்
களைமேவு சாத்தானங் கண்டாய்—களைமேவ

நாவற் பராபரமாம் நன்னிலத்தா யேரிகுடி
நாவற் பராபரமாம் நன்னிலத்தாய்—நாவலுறை

எண்ணுல வாய்க்கச்சூ ரேற்றத்தாய் கிரனூர்
எண்ணுல வாய்க்கச்சூ ரேற்றத்தாய்—எண்ணில்

திருக்கேதா ரம்மயிலாய் தேவா குருகூர்
திருக்கேதா ரம்மயிலாய் தேவா—திருக்கைநிறஞ்

சேயாவி னம்பொருளே நிற்பாய் நிறம்பொனிறஞ்
சேயாவி னம்பொருளே நிற்பாய்நி—சேயாவி

கிட்டுபணி பத்திரமணிக் கேயூரா தோண்மீதிற்
கிட்டுபணி பத்திரமணிக் கேயூரா—கிட்டசுரர்

வெற்றிமுடிக் கந்தரத்தில் வேல்விடுத்தாய் வள்ளிதன்னில்
வெற்றிமுடிக் கந்தரத்தில் வேல்விடுத்தாய்—வெற்றி
[யுள்ளே

வாகுபுரி நூல்வயிர மாலையாய் மார்புரளும்
வாகுபுரி நூல்வயிர மாலையாய்—வாகுபுரி

பத்திரக்கை யைத்தவிர்த்த பாலகா வென்னையருள்
பத்திரக்கை யைத்தவிர்த்த பாலகா—பத்திரக்கை

வாளகிரி வான வரோதையாய் வாளசக்ர
வாளகிரி வான வரோதையாய்—வாளகிரி

சல்லாப சங்கீர்த சாகரா சாரூப
சல்லாப சங்கீர்த சாகரா—சல்லாப

சவுந்தாம தாரவித் தாரவுத் தார
சவுந்தாம தாரவித் தார—சவுந்தாம

சாந்தியாவி சாந்தியாவி சாட்சஞ சாரூப
சாந்தியாவி சாந்தியாவி சாட்சஞ—சாந்தியில்

தீட்சாவ கோராய சிற்பரா விற்பரா
தீட்சாவ கோராய சிற்பரா—தீட்சாய

புட்பரா கத்துறைந்த பூபரா பொற்பன்ன
புட்பரா கத்துறைந்த பூபரா—புட்பரா

நிர்வியா ருளசகள நிட்களா வெளிசையில்
நிர்வியா ருளசகள நிட்களா—நிர்வியா

வேதத் தழுந்தா விபூஷஞ நின்புனத்தில்
வேதத் தழுந்தா விபூஷஞ—வேதத்தில்

பட்சாவ பக்கீர பகீரதா பாறுபதி
பட்சாவ பக்கீர பகீரதா—பட்சாப

சௌந்தரம தார தாரா வுதாரா
சௌந்தரம தாரா வுதாரா—சௌந்தாம

வுற்றசிவ லோகவு தாரஞ வுற்றுதவு
வுற்றசிவ லோகவு தாரஞ—வுற்றகலை

சந்திரமௌ ளிக்குதவு சற்குண சற்புருஷா
சந்திரமௌ ளிக்குதவு சற்குண—சந்திக்

கருத்துரியம் வாராமற் காப்பா யடியார்
கருத்துரியம் வாராமற் காப்பாய்—கருத்துரியம்

இந்திராணி மங்கல்யா சரஞ வுதரஞ
இந்திராணி மங்கல்யா சரஞ—இந்திராணி

தீட்சாய கோராய சிற்பரா சிற்பரா
தீட்சாய கோராய சிற்பரா—தீட்சாய

சகலகலை வல்லபா சரணு சுதரணு
சகலகலை வல்லபா சரணு—சகலகலை
சத்தியோ சாத பதஞ்சலா நீபாபச்
சத்தியோ சாத பதஞ்சலா—சத்தியோ
மந்திர வியாகரண வாசகா மால்பரவு
மந்திர வியாகரண வாசகா—மந்திக்
கருத்துயரங் காகாமற் காப்பா யடியேன்
கருத்துயரங் காகாமற் காப்பாய்—கருத்திலுனைக்
காப்பாய் கயிலாயங் காட்டுவா யன்றியும்நீ
காப்பாய் கயிலாயங் காட்டுவாய்—காப்பாய
கந்தா முருகா கதிர்வடிவேற் காங்கேயா
கந்தா கருணு கரா.

உ

ஸ்ரீ செந்திலாண்டவன் திருவடி துணை.

இஃது

திரு. அ. பிரஹ்மஸ்ரீ சிவாநந்த சாகர யோகீஸ்வர சுவாமிகளின்

மாணாக்கரிலொருவராகிய

காரைக்கால், அரங்கராச குமராநந்த சுவாமிகளியற்றிய

சிறப்புப்பாயிரம்.

நேரிசை ஆசிரியப்பா.

தெய்வத் திருவரு ளுய்வைத் தருசீர்
சைவக் கொழுந்தாஞ் சண்முகப் பெருமா
னாட்டயர் பூதர மளவில வவற்று
ணாட்டவர் வியக்கு நாடு பலவா
நிலாய யாவுளு நிலைமே லாய
மலாய நாட்டின் மாண்புமிக் குடைய
தளிர்த்த தேமாந் தண்பொழி லிடத்து
வளித்தொட ரிசைப்ப வமைவுற வதற்குப்
பாகெனப் பைங்குயில் பாடக் கேட்டுக்
கேகய மாடக் கிள்ளைகண் டுவப்ப
மன்றலம் புனைமாண் வளமுறப் பூவை
நன்றெனத் தென்ற னனிவிராய் பொதுளுஞ்
செந்நெற் கன்னலிற் செழுங்கழை கமுகிற்
றென்னையிற் கந்தி தெங்குகார்க் காலென
வளமுலாம் பண்ணை மன்னுமா தரத்தாற்
றாப்பயி லியற்கைத் தொடர்வனப் பமைந்த
வீப்போ நன்னக ரியலுறு முதக்கிற்
கண்விருந் தயிலக் கனிந்த காமர்

விண்ணவர் நாடொறும் விழைந்திவண் வரற்குப்
பூபா லமைத்துப் போகுயர் கொடுங்கா
சோபா னத்திற் றுன்றிய சோலை
தண்ணிய குவட்டிற் சார்குகை யதனின்
மண்ணிய மணியாய் வளர்குகன் றுளிற்
சேவை செய் தன்பு செலுத்தி யுய்ந்திட
மூவகைப் பாவின் மொழிந்தனன் ஸ்ரோத்திரம்
உற்பல மலர்ந்து வொளிர்மணிப் புனனிறை
பொற்புறு வாவிப் பூந்தா மரையிடை
பெடையொடு பார்ப்பைப் பெரிதுற வணைத்துத்
தொடுதோ லடிப்பொலஞ் சூட்டனங் கண்டுயில்
கேட்போர்க் கினிது கிளறு முத்தமிழ்
யாழ்ப்பா ணத்தி னணிநலம் புனைந்த
எண்ணில் பல்வள மினிதுறப் பிறங்கு
வண்ணை யம்பதி வைத்திய லிங்கவேள்
ஆற்றிய மெய்த்தவ மனைய கான்முளை
போற்றிடுங் கல்விப் பொருளெலா முணர்ந்து
எல்லையின் ஞானத் தேய்ந்த
செல்லைய நாவலர் சிரகிகா மணியே.

சிவமயம்.

ஈப்போ, தண்ணீர்மலை வடிவேலர்

மும்மணிக் கோவை.

காப்பு

பொன்னுரு மீப்போ பொலிவெண் கிரியான
மின்னுருந் தண்ணீர்மலை வேலவற்கு—மன்னுருஞ்
செந்தமிழாற் பாமாலை செப்பவரு நற்றுணையாந்
தந்திமுகத் தெந்தையிரு தாள்

(இதன் பொருள்) இலக்குமி கடாக்ஷம் நிறைந்த ஈப்போவினிடமாக விளங்குகின்ற, வெண்ணிறமமைந்த தண்ணீர்மலை யென்னும் பெயரினைக்கொண்ட மலையினிடமாகப் பிரகாசிக்கின்ற, வேற்படையினைக்கொண்ட சுப்பிரமணியக் கடவுளுக்கு, நிலைபெற்றமைந்த செந்தமிழினாற் பாவாகிய மாலையினைச் சொல்லுதற்கு யானை முகத்தையுடைய எம்பெருமானாகிய விநாயகக் கடவுளுடைய பெருமை பொருந்திய திருவடிகளானது எமக்கு வருகின்ற நல்ல துணையாகும். (எ-று.) (க)

நேரிசை வெண்பா

பூமேவு பொய்கைப் புலத்துதித்த புண்ணியன்றன்
மாமேவு தாள்பரவு மாதவர்க்கே—வாமப்
பதிசேர் மனையும் பலநிதியுஞ் சீருங்
கதிசே ருருளு முறைகாண்

(இ-ள்) பூமியினிடத்துப் பொருந்திய சரவணப் பொய்கையின் கண்ணே திருவவதரித்த புண்ணிய வடிவாகிய முருகக்கடவுளது மேன்மை பொருந்திய திருவடி

களைத்துதிக்கும் சிறந்த தவத்தை யுடையவர்களுக்கு இம்மையிலே அழகு பொருந்திய இடமும் மனையும் பலவகைப்பட்ட செல்வங்களும் சிறப்பும் பெற்று மறுமை இன்பத்துக் கேதுவாகிய திருவருளும் முத்தியும் வந்து சேரும். (எ-று.) (உ)

நேரிசை வெண்பா

மூரிதனை வேங்கை முறுகிவெட்டிப் பார்க்கின்ற
கார்பொழியுந் தண்ணீர்மலைக் கந்தனே—பாரதனில்
யார்க்குஞ் சமைய மணித்தாகில் வேண்டுவன
பார்க்கப் படுமே பணி.

(இ-ள்) இடபராசியினை வேங்கையானது, எருதெனவெண்ணி, முறுகிக்கொண்டு எட்டிப்பார்க்கின்ற மேகமானது மழையினைச் சொரிகின்ற தண்ணீர்மலைக் கந்தசுவாமியே; பூமியிலே எவருக்கும் சமையம் நேரிடிற் செய்ய வேண்டியவற்றைச் செய்து முடித்துக்கொள்ளுவார்கள். (எ-று.) (ஈ)

நேரிசை வெண்பா

சீறு மரவொலியைத் திங்கள்பார்த் தேயுடலம்
கூறுபட வஞ்சுங் குளிர்மலையே—நாறும்
மலர்சொரிந்து தேவர் வணங்கும் பெருமை
தலமுருகன் தண்ணீர்மலை.

(இ-ள்) பாம்பினது சீறுகின்ற ஒலியினைக்கேட்டுச் சந்திரன் தனது உடலம் தேய்ந்துபட அஞ்சுகின்ற குளிர்ச்சி பொருந்திய மலை; வாசனை வீசுகின்ற மலர்களைச் சொரிந்து தேவர்கள் வணங்கும் பெருமையையுடைய தண்ணீர் மலையே; (அது) முருகப்பெருமானது தலமாகும். (எ-று.) (ச)

நேரிசை வெண்பா

தீங்கனியைப் பாங்கருந்தத் தேவருல கைத்தடவி
யோங்குபொழில் தாங்கி யொளிர்மலையே—நீங்காம
லாரும் வணங்க வருள்மேவுந் தண்ணீர்மலை
தாரகனைச் செற்றோன் தலம்.

(இ-ள்) தேவர்கள் மதுரமான கனிகளை இருந்தவிடத்திற் பக்கத்திற் பறித்துண்ணுமாறு ஓங்கிவளர்ந்த சோலைகளைப் பொருந்தி விளங்குகின்ற மலையே; தாரகாசூரனைச் சங்கரித்த முருகக் கடவுள் நீங்காமல் எவரும் வணங்கும் பொருட்டாக அருள் பொருந்தி யிருக்கின்ற தண்ணீர்மலை யென்னும் தலமாகும். (எ-று.) (ரு)

நேரிசை வெண்பா

கன்னியர்தங் கொங்கையினுங் காரிருள்சேர் கூந்தலினு
நன்னீர் மலைதனிலு நாறுமே—யென்னேரங்
காழகிலுஞ் சந்தனமுங் கந்தபிரான் சேர்தண்ணீர்
வீழ்மலையை நெஞ்சே விளம்பு.

(இ-ள்) எப்பொழுதும் வயிரமுள்ள அகிலினது வாசனையும்; சந்தன வாசனையும், பெண்களது முலையினிடத்தும், தடித்த இருளானது குடியிருக்கின்ற கூந்தலினிடத்தும், நல்ல நீரையுடைய மலையினிடத்தும் கமழும். அவ்வாறான பெருமையையுடைய கந்தபிரான் வீற்றிருக்கின்ற குளிர்ச்சி பொருந்திய நீர் வீழ்ச்சியையுடைய அம்மலையினை நெஞ்சமே புகழ்வாயாக (எ-று.) (சு)

நேரிசை வெண்பா

பேராப் பிரிவிற் பிறங்குமீப் போநகரிற்
சீரா யொளி தண்ணீர் சேர்மலையே—ஏராய்க்
குகையா லயத்துக் குகனமருங் கோலந்
தகையா துளமே தரி.

(இ-ள்) ஐக்கிய மலாய் நாடுகள் நான்கிலொன்ருகிய, பேராவில் விளங்கும் ஈப்போ நகரிற் சிறப்பொடு பிரகாசிக்கின்ற தண்ணீர்மலையினிடத்துக் குகையாகிய கோயிலின் கண்ணே, குகப் பெருமான் வீற்றிருக்கின்ற திருக்கோலத்தினை மனமே நீங்காமல் எப்பொழுதும் வைத்துக்கொள்வாயாக. (எ-று.) (எ)

நேரிசை வெண்பா

பாரிலுள்ள சாதியெலாம் பல்குழுவாய்த் தங்கிநிற்கு
மூர்தொடுவாய் ராச்சியமா யோதலா—மாரும்
பலவே றுடையணியும் பாராது மேல்கீ
ழிலகுவா ரின்னாட் டியல்பு.

(இ-ள்) பூமியிலுள்ள சாதிகளெல்லாம் பல கூட்டங்களாகத்தங்கி இருக்கும் ஊர், தொடுவாய் ராச்சியமென்று சொல்லலாம். நிறைந்த பலவிதமான உடையும் ஆபரணங்களும் பூண்டு விளங்குவார்கள், மேல்சாதி கீழ்சாதி யென்னும் பாகுபாடு பார்க்க மாட்டார்கள், இவைகள் இந்நாட்டினது இயற்கை யாகும். (எ-று.) (அ)

நேரிசை வெண்பா

காய்ந்தறியாப் புற்றரையுங் கண்கவருஞ் சோலைகளும்
பூந்தடமு நல்வனப்புப் பூவையரும்—மாய்ந்தகன்ற
பெண்ணலமுஞ் செல்வாக்கும் பேறும் வினைமாண்பு
மெண்ணுமலாய் நாட்டினெழில்.

(இ-ள்) காய்தலையறியாத புல்லுள்ள நிலங்களும், பார்வையைத் தன்வசப்படுத்துஞ் சோலைகளும், பூஞ்சோலைகளுஞ் சுந்தரமுள்ள மங்கையரும், இறந்தொழிந்த கற்புநிலையும், செல்வப் பெருக்கும், பெற்றுக் கொள்ளுதற்கெளிய அநுபவங்களும், கைத்தொழில்களும், நினைக்கின்ற மலாய் நாட்டின் அழகாகும். (எ-று.) (கூ)

நேரிசை வெண்பா

மாடமதை நீங்கா மனையும் மறுகுகளு
மாடரங்கு மூன்மலிந்த வாவணமுங் —கூடுதொழிற்
பல்பண்ட சாலைகளும் பாவிப் பரத்தையரும்
புல்குநக ரெங்கும் பொலிந்து.

(இ-ள்) மேல்வீடுகள் அமைந்தன்றித் தனித்தில்லாத வீடுகளும், அவைகள் உள்ள அழகான, வீதிகளும், கூத்தாடும் மண்டபங்களும், பலவிதமான மாமிசங்கள் மலிந்துள்ள கடை வீதிகளும், பலவிதமான பண்டங்களைக் கொண்ட கூட்டுவியாபாரக் கழகங்களும், பாவமே உருவமான விலைமாதரும், நகரின் கண்ணே அதிகமாகப் பொருந்தியிருக்கும். (எ-று.) (ம)

நேரிசை வெண்பா

என்னபிழை செய்திருந்த போதுமதை யெண்ணும
லன்னபிழை நீக்கியெனை யாதரிக்க—பின்னே
திருமான் மருகா முருகா குறவர்
வருமான் மகள்கணவா வா.

(இ-ள்) அடியேன் என்ன விதமான பிழைகளைச் செய்திருந்தாலும், அவைகளைப் பொருட்படுத்தாது அப்பிழைகளை அகற்றி ஆதரித்தற்கு இப்பொழுதே, திருமாலினது மருகரா யுள்ளவரே! முருகக்கடவுளே! குறவர் சேரியில் வந்த மானினது மகளாகிய வள்ளிநாயகியாருடைய கணவரே! வருவீராக. (எ-று) (மக)

பன்னிரு சீர்க்கழில் நெடில் ஆசிரிய விருத்தம்

மாமேவு கோலமயில் வாகனக் கடவுளே !
வடிவேல் கரங்கொண்டவா !
வள்ளிமண வாளனே ! கொள்ளியிடை யுறவியென
வாடியலை யாதுகருணைத்
தேமேவு தண்மாரி பொழியவுனை வேண்டினேன்
செய்தவ மிலாதசிறியேன்
தீராத தெவையுமுன் சன்னிதியை யணுகிடிற்
தீருமென அறிவோருரை
நாமேவி வருவதென் பால்மேவி டாததென்
நாதனே ! யுறுதிபுகல்வாய்
நானிலந் தனிலொன்று மறிகிலே னுனையன்றி
நாட்பல கழிந்ததையா
பாமேவு குளகனே யீப்போ மலைக்குகைப்
பரனே ! சுயம்புவடிவே !
பண்ணிலவு மொழிவள்ளி கண்ணிலவு மளிகொண்ட
தண்ணீர்மலை வடிவேலனே !

(இ-ள்) வலிமைமிக்க அழகினைக்கொண்ட மயில் வாகனத்தி லேறுகின்ற கடவுளே! கூர்மையுடைய வேற் படையினைக் கையிற் கொண்டிருப்பவரே! வள்ளிநாயகி யாருக்குக் கணவராயுள்ளவரே! அடியார்கள் கூறும் பாட்டினிடமாக விளங்கும் நெற்றிக்கண்ணினை யுடைய வரே! ஈப்போ மலைக்குகையி லெழுந்தருளியிருக்கும் பரம் பொருளே! ஒருவராலுமாக்கப்படாத திருவுருவத்தினிட மாக விளங்குகின்றவரே! இனிய இசைபோல விளங்கும் மொழியினைக்கொண்ட வள்ளிநாயகியாருடைய கண்ணி னிடமாக ஒளிரும் அன்பினைக் கொண்ட தண்ணீர்மலை வடி

வேலனே! நான்கு பகுப்பினைக்கொண்ட பூமியின் கண்ணே உன்னைத்தவிர எவ்வகை யின்பத்தையுமறியாது பல்நாட்கள் கழிந்துவிட்டன. தீராத எவ்வகைத் துன்பமும், உனது சன்னிதியைக் கிட்டிய மாத்திரத்தில் தீர்ந்துவிடும் என்று அறிவாளர் கூறும் மெய்யுரையானது என்னளவில் மாத்திரம் நிறைவுறாது விட்டதென்ன? என் தலைவனே! எனக்குறுவது கூறக்கடவாய். செய்யப்பட்ட நல்ல தவத்தினைப் பொருந்தாத சிறியவ னாகிய யான், இருபுறமுமெரிகின்ற கட்டையினிடையே யகப் பட்ட எறும்புபோலச் சோர்வுற்று அலைந்து திரியாது இனிமையான குளிர்ச்சி பொருந்திய கருணையாகிய மழையை என் மீது சொரியும்படி வேண்டுதல் செய்தேன் ஐயனே! (எ-று) [க]

கவலையுறு நெஞ்சமுஞ் சுவைபடா நாவுங்
 களிப்பிலா முகவுறுப்புங்
கைப்பொருளி லாவாழ்வு மொப்புயர்வி லாதநின்
 கருணையில் லாவாயுளுஞ்
சவலையறி வுங்காத லமையாத வுடலுமே
 தந்தென்னை யிங்குவைத்தாய்
சரியான நீதியா வீதுனது கருணையா
 சாற்றுமுறை கேட்க விலையா?
வவல் முறு மனமகிழ நிலவுமுன தருள்பெருக
 வடிமைகொண் டாளவேண்டு
மறுமுகப் பொருளான தெய்வமே கன்னிமா
 ரறுவர்முலை யமுதவாழ்வே!
பவமகலு மீப்போ மலைக்குகை யமர்ந்தவா
 பரனே! சுயம்புவடிவே!
பண்ணிலவு மொழிவள்ளி கண்ணிலவு மளிகொண்ட
 தண்ணீர்மலை வடிவேலனே!

(இ-ள்) ஆறுமுகங்களைக் கொண்ட பரம்பொருளாகிய தெய்வமே! கார்த்திகைப் பெண்களென்னும் ஆறு கன்னியர்களுடைய திருமுலைப்பாலினை உண்ட அமிர்தம் போன்ற வாழ்வானவரே! பணிந்தோருடைய பாவமானது நீங்குகின்ற ஈப்போ மலைக்குகையி லெழுந்தருளி யிருக்கின்ற பரம்பொருளே! ஒருவராலுமாக்கப்படாத திருவுருவத்தினிடமாக விளங்குகின்றவரே! இனிய இசைபோல விளங்கும் மொழியினைக்கொண்ட வள்ளிநாயகியாருடைய கண்ணினிடமாக ஒளிரும் அன்பினைக்கொண்ட தண்ணீர்மலை வடிவேலனே! கவலை கொண்ட மனமும், நல்ல சுவையினை யறியாத நாவும், மகிழ்ச்சியில்லாத முகமாகிய வுறுப்பும், பொருளில்லாத வாழ்க்கையும், ஒப்புயர்வற்ற உனது கருணையானது .இல்லாத ஆயுட்காலமும், தெளிவில்லாத அறிவும், அனுபவமில்லாத உடலும், ஆகிய இவைகளைத் தந்து இவ்வுலகினிடத்தே என்னை வைத்தாய்; இது சரியான நீதியா? இது உனது கருணையாகுமா? அடியேன் சொல்லுகின்ற சொல்லானது கேட்கவில்லையா? துன்பமடைகின்ற மனமானது இன்பமடையும் பொருட்டு விளங்குகின்ற உனது அருளானது பெருகும்வண்ணம் அடியேனை அடிமைகொண்டு ஆளவேண்டும். (எ-று.) [உ]

உள்ளமொ டுனைப்பணியு மன்புமழி வெய்தாத
 வுறுபொருளு மெவ்வுயிர்க்கு
முற்றிடத் துதவியொடு நல்லோர்க ணேசமொளி
 ருயர்புலமை யறிவாற்றலும்
வள்ளிய மனத்தனுய் வாழ்வுபெறு செல்வமும்
 வருகவலை யற்றமனமும்
மாறாத திருவருளு நோயிலா வாயுளும்
 மாண்புபெறு சீர்சிறப்பும்
தெள்ளிதா யிவைகளுன் னடிபரவு மன்பரைச்
 சேருமென வறைவரன்றே

சித்திரக் கலபமர கதநிற !மயூரனே
தேவகுஞ் சரிமணாளா!
பல்லிய முழங்குமீப் போவெண் மலைக்குகைப்
பரனே சுயம்புவடிவே!
பண்ணிலவு மொழிவள்ளி கண்ணிலவு மளிகொண்ட
தண்ணீர்மலை வடிவேலனே

(இ-ள்) அலங்காரமுள்ள தோகையினைக்கொண்ட பச்சை நிறம் பொருந்திய மயில் வாகனத்தையுடையவரே! தெய்வ யானையம்மையாருடைய கணவரே! வாத்தியங்கள் முழங்குகின்ற ஈப்போவினிடமாகவுள்ள வெண்மலைக் குகையிலெழுந் தருளியிருக்கும் பரம்பொருளே! ஒருவரா லுமாக்கப்படாத திருவுருவத்தினிடமாக விளங்குகின்ற வரே! இனிய இசைபோல் விளங்கும் மொழியினைக் கொண்ட வள்ளிநாயகியாருடைய கண்ணினிடமாக ஒளி ரும் அன்பினைக்கொண்ட தண்ணீர்மலை வடிவேலனே! மன மானது பொருந்த உன்னைப்பணிகின்ற அன்பும், அழி வில்லாத உறுதியான பொருளும், எந்த உயிர்களுக்கும் துன்பம் வந்தகாலத்து உதவுகின்ற தன்மையும், நல்லவர் களுடைய சினேகமும், விளங்குகின்ற உயர்ந்த புலமை யோடு கூடிய அறிவு வல்லமையும், கொடையொடுபட்ட மனத்தவனுய் வாழத்தக்க செல்வமும், வருகின்ற கவலை யில்லாத மனமும், நீங்காத திருவருளும், நோயில்லாத பூரண வாயுளும், பெருமையுடைய மேலான சிறப்புக் களும் என்று சொல்லப்பட்ட குற்றமில்லாத இவைகள், உன்னை வணங்குகின்ற மெய்யன்பருக்குச் சேரு மென அறிவுடையோர் கூறுநிற்பர். (எ-று) (௩)

செந்தமிழ்க் குரவனே! சேவலங் கொடியனே!
செந்திவேன் முருகையனே!
திகழ்பரங் குன்றென விளங்கிணு யுன்பெருமை
செப்புவ தெவர்க்குமுடியும்

சந்ததமு முந்தனடி சிந்தனைசெ யெந்தனைச்
    சண்முகா கைவிடாதே
தாவிவந் தேன்குகா! சாமிசர வணபவா!
    தணிகையங் கிரிவாசனே!
கந்தா! கடம்பனே! பழனிமலை யேரகம்
    காணநின் றருள் தெய்வமே!
கதிர்காம மோனபர ஞானபண் டிதனை
    கற்பகக் கருணைவாழ்வே!
பந்தம தகற்றுமீப் போமலைக் குகைமேவு
    பரனே! சுயம்புவடிவே!
பண்ணிலவு மொழிவள்ளி கண்ணிலவு மளிகொண்ட
    தண்ணீர்மலை வடிவேலனே

(இ-ள்) அன்பர்களது பாசபந்தங்களை நீக்கி யாட்கொள்ளும் ஈப்போ மலைக்குகையி லெழுந்தருளி யிருக்கும் பரம்பொருளே! ஒருவராலுமாக்கப்படாத திருவுருவத்தினிடமாக விளங்குகின்றவரே! இனிய இசைபோல விளங்கும் மொழியினைக் கொண்ட வள்ளிநாயகியாருடைய கண்ணினிடமாக ஒளிரும் அன்பினைக்கொண்ட தண்ணீர்மலை வடிவேலனே! செந்தமிழ்க்குப் பரமாசாரியரா யுள்ளவரே! சேவற்கொடியுடையவரே! செந்திற்பதியில் விளங்குகின்ற வேலாயுதத்தைக்கொண்ட முருகக்கடவுளே! குகப்பெருமானே! குருவாயுள்ளவரே! ஆறெழுத்து வடிவானவரே! தணிகை மலையிலிருப்பவரே! கந்தனே! கடம்பனே! பழனி மலையிடத்தும்; சுவாமி மலையிடத்தும் யாவருந் தரிசிக்கும்படி நின்றருளுந் தெய்வமே! கதிர்காமத்திலிருப்பவரே! சாந்த நிலையாகிய பரம ஞானத்தை அளிக்கவல்ல பண்டிதனாகிய கற்பகம் போன்ற நினைத்தவற்றைக் கொடுக்கும் கருணை தங்கிய வாழ்வாயிருப்பவரே! விளங்குகின்ற திருப்பரங்குன்றம் போலிம் மலையினிடத்தும் இருக்கின்ற உன்னுடைய கீர்த்தியைச் சொல்லுதற்கு யாவரால் முடியும்!

ஆதலால் எப்பொழுதும் உன்னுடைய திருவடியைச் சிந்திக்கின்றவனும், அவனுடன் வந்தவனுமாகிய அடியேனை ஆறு முகங்களை உடையவரே! கைவிடாது காப்பாற்றுவீராக. (எ-று) [ச]

அத்திமுக னொடுசிங்க னுதியாஞ் சூர்சிர
மரிந்தவச் சிரமிருக்க
வக்கிரம மிக்ககிர வுஞ்சமலை பொடியாக்கு
மயில்வேல் வலத்திருக்க
சித்தருளு முன்னுடைய தெய்வமந் திரமான
சீராறெழுத் திருக்கத்
தீண்டினும் பூசினும் பாபமொடு பிணியறத்
தீர்க்கும்வெண் ணீறிருக்க
வித்தரையி லொன்றுமறி யாதவன் போலநீ
யென்னளவில் வீற்றிருந்தா
லென்றுய ரகற்றியெனை யுய்விக்க நீயன்றி
யின்னுமொரு தெய்வமுண் டோ
பத்திசெய் தடியர்பணி யீப்போ மலைக்குகைப்
பரனே ! சுயம்புவடிவே !
பண்ணிலவு மொழிவள்ளி கண்ணிலவு மளிகொண்ட
தண்ணீர்மலை வடிவேலனே

(இ-ள்) அன்பு செய்து அடியார்கள் பணிகின்ற ஈப்போ மலைக்குகையி லெழுந்தருளி யிருக்கின்ற பரம்பொருளே! ஒருவராலுமாக்கப்படாத திருவுருவத்தினிடமாக விளங்குகின்றவரே! இனிய இசைபோல விளங்கும் மொழியினைக்கொண்ட வள்ளிநாயகியாருடைய கண்ணினிடமாக ஒளிரும் அன்பினைக்கொண்ட தண்ணீர்மலை வடிவேலனே! தாருகன், சிங்கன், சூரன் முதலாகிய அவுணர்களது சிரங்களைக்கொய்த வச்சிரப்படையானது இருக்கவும்; தீயசெய்கையில் மிகுத்த கிரவுஞ்சனது மாய

உருவாகிய கிரவுஞ்ச மலையினைப் பொடியாகச் செய்த கூர்மை பொருந்திய வேற்படையானது வலக்கரத்திருக்கவும்; சகலசித்துக்களையு மளிக்கின்ற தெய்வத்தன்மையுடைய மந்திரமாகிய உனது ஆறு எழுத்துக்களிருக்கவும்; தொடினும் அணிந்தாலும் பாபமுடன் நோய் முதலியவை யற்றுப்போகும்படி நீக்கிவைக்கும் வெண்மையாகிய திருநீறானது இருக்கவும், இப்பூமியின்கண்ணே ஒன்றுந்தெரியாதவன்போல் என்மட்டில் நீ வாளாவிருந்தால், எனது துயரத்தினை நீக்கி என்னை ஈடேற்றிவைக்க உன்னையன்றி இன்னுமொரு தெய்வமிருக்கின்றனவா? இல்லை. (எ-று) [௫]

முருகா வெனுஞ்சொலல் லாதொன்று மறியாத
முருகம்மை யெனுமன்பினள்
முன்னு ளூனைக்கூவி நாயனால்வெட்டுண்ட
முகிழ்மலர்க் கரமீளவே
திருகாத வன்பினற் பெறவரு ளளித்தவா
செந்திலம் பதிவாசனே!
செய்யவடி வேலேந்து மையனே யென்மீது
திருவருளளிக்கவேண்டு
முருகாத மனமுடைய கள்வனு னுமுன்
னுபயபா தாம்புயத்தை
யுற்றதுணை யாகவே பற்றினே னென்றுய
ரொழித்திட விரக்கமிலையா?
பருகா ரசைந்துலவு மீப்போ மலைக்குகைப்
பரனே! சுயம்புவடிவே!
பண்ணிலவு மொழிவள்ளி கண்ணிலவு மளிகொண்ட
தண்ணீர்மலை வடிவேலனே

(இ-ள்) சூற்கொண்ட மேகங்கள் அசைந்துலாவுகின்ற ஈப்போமலைக்குகையி லெழுந்தருளி யிருக்கும் பரம்

பொருளே! ஒருவராலு மாக்கப்படாத திருவுருவத்தி னிடமாக விளங்குகின்றவரே! இனிய இசைபோல விளங் கும் மொழியினைக்கொண்ட வள்ளி நாயகியாருடைய கண்ணினிடமாக ஒளிரும் அன்பினைக்கொண்ட தண்ணீர் மலை வடிவேலனே! முன்னாளிலே முருகம்மையார் என்னும் அன்புடையமாதரசியானவள், முருகா வென்னும் உனது திருநாமத்தைத்தவிர வேறு சொல்லறியாதவளாய் அதனையே செபித்துக்கொண்டிருந்த ஞான்று, அப்பெ யரினைக்கொண்ட அயலானொருவனைக் காதலித்து அரற்று கின்றாளெனும் அலர்மொழிக்கஞ்சி, அவள் நாயகன் தடுக் கவும், தன்னுணர்வற்ற நிலையிற் கேளாது பின்னுமதனையே கூறவும் நாயகனானவன் சீறிக் கரத்தினைத் துணிக்க; அன் பிற்குழைந்த அடியாளாகிய முருகம்மையார் ஏன் முருகா? கரத்தினைத் துணித்தாயென்னலும், நீ கூறுகின்ற முருக னிடம் அதனைப்பெறக் கடவாய் என்று பரிகசித்தலும் உடனே முருகாவென ஓர்காற் கூவிய மாத்திரத்திற் கரத் தினையளித்துக் காட்சிகொடுத்த அழகிய செந்தூர்ப்பதி வீற்றிருப்பவனே! சிவந்த கூர்மையான வேலாயுதத்தைத் தாங்கிய ஐயனே! உருக்கமில்லாத மனதினையுடைய கள் வனாயிருந்தாலும் உனது திருவடித்தாமரையை உண்மை யான துணையாகவெண்ணிப் பிடித்தேன், என் துயரத்தை நீக்க இரக்கமில்லையா? (எ-று) [சு]

உற்றுரு மிங்கிலை யிருந்தாலு முதவியிலை
    யுதவிபெற வாளுமில்லை
யொண்பொருளு மில்லைநற் கவியருமை யறிகின்ற
    வுத்தமனு நீயல்லவோ?
முற்றாத முகிழ்முலைக் குறமாது கணவனே!
    மூசுவண் டறைகடம்பா!
மூரிவேல் வளைசெண்டு கொண்டாழி சசிமேரு
    மொய்ம்பினை யழித்த முதல்வா!

கற்றறி விலாதவன் பாடுமுன் புகழையுங்
கருணையொடு கேட்கவேண்டும்
காசினியி லோதநீ ரேதநீர் தன்னையுங்
கலந்துநிறை வாகுமன்றோ?
பற்றான துயரகலு மீப்போ மலைக்குகைப்
பரனே! சுயம்புவடிவே!
பண்ணிலவு மொழிவள்ளி கண்ணிலவு மளிகொண்ட
தண்ணீர்மலை வடிவேலனே

(இ-ள்) ஆன்மாக்களைப்பற்றி நிற்குந் துயரானது நீங்குகின்ற ஈப்போ மலைக்குகையி லெழுந்தருளியிருக்கும் பரம்பொருளே! ஒருவராலுமாக்கப்படாத திருவுருவத்தினிடமாக விளங்குகின்றவரே! இனிய இசைபோல விளங்கும் மொழியினைக்கொண்ட வள்ளி நாயகியாருடைய கண்ணினிடமாக ஒளிரும் அன்பினைக்கொண்ட தண்ணீர் மலை வடிவேலனே! முதிராது விம்மிய முலையினைக்கொண்ட குறப்பெண்ணாகிய வள்ளி நாயகிக்குக் கணவரே! வண்டுகள் ஆரவாரிக்கின்ற கடப்பமாலையையுடையவரே! காய்சினவழுதியாகத் திருவவதரித்து வலிமை பொருந்திய வேலாயுதத்தையும், வளையினையும், செண்டினையும் கொண்டு கடலினதும், இந்திரனதும், மேருமலையினதும் எதிர்த்த வலிமைகளை அழித்த முதல்வனே! எனக்கு உற்றவர்களும் இவ்விடத்திலில்லை, இருந்தாலு முதவியுமில்லை, உதவி பெறுதற்கேற்றவர்களுமில்லை விளங்குகின்ற பொருளுமில்லை, நல்ல கவியினது அருமையை அறியக்கூடிய உத்தமனு மீயன்றியில்லை, பூமியிலே கடல் நீரானது குற்றமுள்ள நீரினையும் வேறுபடுத்தாது தன்னுடன் சேர்த்து நிறைந்து நிற்பதுளதாகுமல்லவா? அதுபோற் கல்வியறிவில்லாத வஞ்சிய யான் பாடுமுன் புகழையும் கருணைகொண்டு கேட்கவேண்டும். (எ-று) [எ]

சுத்தபர நின்மல சுகாநந்த பரவடிவ
சோதியே துரியவடிவே!
தோன்றுபல நின்றனவு நில்லாத பலவுமுன்
தோற்றமதி லன்றுகண்டே
நித்திய பரம்பொருட் திருவடிவு குமரனென
நெஞ்சுருகி யஞ்சலித்தே
நீடுமொழி கூறவே சூரனுக் கன்றுநீ
நிலைபெறக் காட்டவிலையா?
கத்துபுன் மொழியேனு மையனே நீதயவு
காட்டியெனை யாட்கொள்ளுவாய்
கந்தா! விசாகனே! கார்த்திகைக் குமரனே!
காமதக னன்புதல்வனே!
பத்தியொடு பருதிபணி யிப்போ மலைக்குகைப்
பரனே! சுயம்புவடிவே!
பண்ணிலவு மொழிவள்ளி கண்ணிலவு மளிகொண்ட
தண்ணீர்மலை வடிவேலனே

(இ-ள்) அன்புடன் சூரியன் தினமும் வணங்குகின்ற ஈப்போ மலைக்குகையில் எழுந்தருளியிருக்கும் பரம்பொருளே! ஒருவராலு மாக்கப்படாத திருவுருவத்தினிடமாக விளங்குகின்றவரே! இனிய இசைபோல விளங்கும் மொழியினைக்கொண்ட வள்ளி நாயகியாருடைய கண்ணினிடமாக ஒளிரும் அன்பினைக்கொண்ட தண்ணீர்மலை வடிவேலனே! சுத்த நிலை பொருந்திய மேலான மலமற்ற சுகாநந்த பரவடிவத்தினையுடைய ஒளியே! துரிய வடிவமே! கந்தனே! விசாகனே! கார்த்திகேயனே! காமனையெரித்த கண்ணுதற் கடவுள் குமாரனே! சராசரங்கள் யாவும் உனது பேருருவத்தினிடமாக இருத்தலைச் சூரபன்மன் கண்டு முழுமுதற்கடவுளே குமாரக்கடவுளாக அவதரித்த தென மன முருகித் துதிக்கும்படி அவ்வடிவத்தினைக் காட்டவில்லையா? தீங்கினையுடையோரும் உன்பால்வரின்

தூயோராவதுண்மையால் அடியேன் கூறுவது பயனில்லாத மொழிகளாயினும், உனது கருணையை என்மீது வைத்து ஆண்டுகொள்ள வேண்டும் ஐயனே ! (எ-று) [அ]

நலமருவு மாமதுரை செந்தமிழ்ச் சங்கமேல்
நடுவீற் றிருந்தகுமரா !
நற்கீர னுரைதமிழ்ச் சுவைகனிந் தூறுபா
நற்றொடைய லணிமார்பனே !
புலமைகொண் டெழுமேக மென்னவரு மருணகிரி
பொழிசந்த மாரியமிர்தம்
பொங்குபுக ழுண்டநின் செவியருகு செல்லுமோ
புன்மையேன் கவியுமையா !
வலமருவு வெற்றிவே லாயுதக் கடவுளே !
மயிலேறு மாணிக்கமே !
வானவர்கள் சிறைதவிர்த் தாண்டமுரு கையனே !
மங்கைசிவ காமிபாலா !
பலமருவு மீப்போ மலைக்குகை யமர்ந்தவா !
பரனே ! சுயம்புவடிவே !
பண்ணிலவு மொழிவள்ளி கண்ணிலவு மளிகொண்ட
தண்ணீர்மலை வடிவேலனே !

(இ-ள்) நல்ல பலனை அளிக்கவல்ல ஈப்போ மலைக் குகையி லெழுந்தருளி யிருக்கும் பரம்பொருளே ! ஒருவராலு மாக்கப்படாத திருவுருவத்தினிடமாக விளங்குகின்றவரே ! இனிய இசைபோல விளங்கும் மொழியினைக் கொண்ட வள்ளிநாயகியாருடைய கண்ணினிடமாக ஒளிரும் அன்பினைக்கொண்ட தண்ணீர்மலை வடிவேலனே ! வலக்கரத்தினிடமாக விளங்குகின்ற வெற்றி பொருந்திய வேலாயுதத்தையுடைய கடவுளே! மயிலின்மீது ஏறுகின்ற மாணிக்க நிறம் போன்றவரே ! தேவர்களுடைய துன்பத்தினைத்தீர்த்து ஆட்கொண்ட முருகையனே ! சிவகாமியம்மையாருடைய புதல்வரே ! நன்மை பொருந்திய

பெருமையான மதுரையிலே செந்தமிழ்ச் சங்கத்தில் நடுநாயகமாக வீற்றிருந்த குமாரக்கடவுளே! நற்கீரரென்னும் புலவர் பெருமானுற்கூறிய கவிச்சுவை பழுத்து நல னூறிக்கொண்டிருக்கும் திருமுருகாற்றுப்படையென்னும் பாமாலையைச்சூடிய மார்பினையுடையவரே! மேகமானது புலமைகொண்டு கவிமழையைப் பெய்தாலொப்ப அருணகிரி நாதரால் சந்தவின்பங்கொண்ட திருப்புகழென்னும் அமிர்தமாரி பொழியப்பட்ட உனது செவியின் பக்கத்தே தானும் புல்லறிவாளனுகிய எனது கவியும் செல்லுமோ? (எ-று) [கூ]

தானு யமைந்தகுகை மேனு ளமர்ந்தநின்
தரிசனைப் பாங்குமைந்து
சாற்றுமண் டபவரிசை யேற்றமுறு மாட்சியும்
தண்ணளிக் கிருபைவடிவு
மானுய செங்கல்வ ராயர்பதி னைந்தாண்டி
னளவுதா னுதரித்து
மப்பாலு மீழவட விந்துதே வஸ்தான
வனுசரணை புரிதொண்டையும்
மேனுய தைப்பூச விழவினது காட்சியும்
வேண்டிவரு வாரநந்தம்
வேலனே! புமைதழுவு பாலனே! சீலனே!
விண்ணவர்கள் சேனுபதீ!
பானுய வளமேவு மீப்போ மலைக்குகைப்
பரனே! சுயம்புவடிவே!
பண்ணிலவு மொழிவள்ளி கண்ணிலவு மளிகொண்ட
தண்ணீர்மலை வடிவேலனே

(இ-ள்) சூரியனுஞ் செல்லுதற்கு அஞ்சுகின்ற வளப்பத்தினையுடைய ஈப்போமலைக் குகையிலெழுந்தருளி யிருக்கும் பரம்பொருளே! ஒருவராலு மாக்கப்படாத திருவுருவத்தினிடமாக விளங்குகின்றவரே! இனிய இசைபோல

விளங்குகின்ற மொழியினைக்கொண்ட வள்ளி நாயகியாருடைய கண்ணினிடமாக ஒளிரும் அன்பினைக்கொண்ட தண்ணீர்மலை வடிவேலனே! வேற்படையையுடையவரே! உமையம்மையார் தழுவியெடுத்த பாலகரே! சீலமானவரே! தேவர் சேனுதிபதியே! தானுயமையப்பட்ட குகையாகிய கோயிலின் கண்ணே எழுந்தருளிய உனது தரிசனையின் பெருமையும் ஐந்தாகச் சொல்லப்பட்ட மண்டபவரிகளைக் காட்டும் மேன்மையான சிறப்பும்; குளிர்ச்சி பொருந்திய கிருபையுடைய வடிவமும்; செங்கல்வராயன் என்பவரால் பதினைந்து வருடமளவும் பூசை முதலியன நடப்பித்தும் அப்பாலுமிந்து தேவஸ்தான பரிபாலன சபையாருடன்கூடி நடத்தும் சிறப்புக்களும், அந்நாள் முதல் நடக்கின்ற தைப்பூச விழாவினது காட்சியும் ஆகிய இவைகளைக் காணவேண்டி அளவிறந்தோர்கள் வருவார்கள் (எ-று) [௭]

வாழி

சீரோங்கு செல்வமும் வணிகமுந் தொழிலுஞ்
சிறக்குமீப் போநகரிலே
செவ்வேளி னடியர்பணி சேவலங் கொடிமஞ்ஞை
செய்யவடி வேலும்வாழி
பேரோங்கு தருமநெறி புலவர்செங் கோலரசு
பெருகிநீ டூழிவாழி
பெட்பினொடு சிவசமய நீறுகண் டிகைதமிழ்ப்
பெருமையென் றென்றும்வாழி
யேரோங்கு சங்கரன் தருசரவ ணத்தரள
மின்பமுட னினிதுவாழி
யெழில்கொண்ட விந்துதே வஸ்தான சபையினிட
மிலகுவோ ரென்றும்வாழி
பாரோங்கு தண்ணீர்மலை வடிவேலர் புகழ்பரவு
பாவாகு மிக்கவிதையும்
படிப்போர் துதிப்போர் தினந்தினம் நீடூழி
பாரினிடை வாழிவாழி

௳

கட்டளைக் கலித்துறை.

கற்றார் பணிந்திடு மீப்போ மலைவளர் கந்தனருள்
பெற்றார் பெறுவ ரரியதெல் லாமிந்தப் பேருலகில்
வற்றாத செல்வமும் வானாளும் பேறும் வருமிடருஞ்
செற்றோட நாளுஞ் சிவபோகந் தங்கிச் செழித்திடவே

(இ-ள்) கற்றோரால் வணங்கப்படு மீப்போ மலையி லெழுந்தருளியிருக்கும் கந்தனது அருளைப்பெற்றவர், எப்பொழுதும் வருகின்ற துன்பங்களெல்லாம் அழிந்துபோகக் குறையாத செல்வமும் இந்திர பதவியும் பெறுவர்; அதுவுமன்றி இவ்வுலகில் அரியதெல்லாம் பெறுவர்; பின்னுஞ் சிவபோகந் தங்கிச் செழித்திடவும் பெறுவர். (எ-று) [க]

குன்றந் தொறுமுறை கோலா குமர குருபரனே
யென்றுமுன் பொன்னடி யேத்தார்க் கிடரு மிடும்பைகளுந்
துன்றும் பணியு மடியார்க் கமரர் தொழும்பு செய்யும்
நன்றும் பெருமையுஞ் செல்வமுஞ் சீரொடு நண்ணிடுமே

(இ-ள்) குன்றங்கள் தோறும் வீற்றிருக்கின்ற அழகனே! இளமை நீங்காத மேலான குருவாயிருப்பவரே! எப்பொழுதும் உனது பொன்போன்ற திருவடியைத் துதியாதவர்க்கே துன்பமும் வறுமையும் அதிகரிக்கும்; துதிக்கின்ற அடியார்களுக்குத் தேவர்கள் பணிபுரிகின்ற சிறப்பும் சகல பெருமையும் செல்வமும் அழகோடு பொருந்தும். (எ-று) [உ]

வையா புரியும் பரங்குன்றும் மேவிய வாழ்வினைப்போற்
கையா றிரண்டுடைக் கந்தாயிப் போமலை காணநின்றாய்
மெய்யா வுனைத்தொழு மன்பர்க் கிரங்கும் விழுப்பொருளே
செய்யா சிவசுப் பிரமணி ஞான தினகரனே

(இ-ள்) உண்மையுடன் உன்னை வணங்குகின்ற அன்பர்களுக்கு அருள்செய்கின்ற மேலான பொருளாயிருப்பவரே! செந்நிறமானவரே! சிவசுப்பிரமணி யென்னும் ஞான சூரியனே! பன்னிருகைகளையுடைய கந்தனே! பழனியும் திருப்பரங்குன்றும் பொருந்தியிருக்கின்ற வாழ்க்கையினைப்போல் ஈப்போமலைக் குகையில் யாவருங் காண இருக்கின்றாய். (எ-று) [௩]

பண்ணார் மொழிமட வாரொடுங் கூடிப் பயிலுமின்பம்
மண்ணார் மிசைதுணை யென்றுனும் மூடருன் வான்கருணை
யுண்ணார் துயர மொழியா ருறுதி யுறுபொருளை
நண்ணார் பிறவிப் பயனுண ராரிந்த நானிலத்தே

(இ-ள்) இந்த நால்வகைப் பூமியின்கண்ணே, பண் நிறைந்த மொழியினையுடைய பெண்களோடுங் கூடியனுபவிக்கின்ற இன்பமே இவ்வுலகில் துணையென்று எண்ணுகின்ற மூடரானவர், மேலான உனது கருணையைப் புசிக்க மாட்டார்கள்; துயரத்தினின்று நீங்கமாட்டார்கள்; உறுதியைக்கொடுக்கின்ற பொருளை விரும்பமாட்டார்கள்; தமது பிறவியினுல் ஆம்பயனையும் அறியமாட்டார்கள். (எ-று) [௪]

கூறுங் கருணை வடிவாங் குமரன் குறிவடிவ
மாறுஞ் சமயமொ ராறுக்கு முட்பொரு ளற்புதத்தைத்
தேறும் பெருமை தெளிவா ரவனடி சிந்தைசெய்து
வீறுந் துயரொழித் தேகாந்த மேவிட வேண்டுவரே

(இ-ள்) சொல்லுகின்ற கருணையே தனக்குரிய வடிவாகவுள்ள குமாரக்கடவுளினது ஆறு திருவுருவத் திருமேனிகளும் ஆறு சமயங்களுக்கும் உட்பொருளாகுமென்னும் அந்த அற்புதத்தை விளக்கிக் கொள்ளுகின்ற பெருமையைத் தெளிகின்றவர்களே அவனடியைச் சிந்

தித்து வலிமையுடைய துயரை நீக்கி ஏகாந்தத்தையடைவார்கள். (எ-று) [ரு]

ஈப்போ மலையி லெழுந்தருள் வேலவ வென்றுமுயர்
காப்பா யெனக்குன் கழலிணை தந்தருள் காதலித்து
நாப்பா லுனதெழுத் தோதவு மென்னை நலிவுசெய்யுந்
தீப்பா லனவழிந் தேகவு மின்பஞ் செழிக்கவுமே

(இ-ள்) ஈப்போ மலையில் எழுந்தருளி யிருக்கும் வேலாயுதனே; என்னைத் துன்பப்படுத்தும் தீங்கான காரியங்கள் நீங்கவும்; இன்பமானது பெருகவும்; அன்பு கொண்டு நாவினிடத்து உனது ஆறெழுத்துக்களை ஓதவும்; மேன்மையான காவலாக உனது திருவடிகளைத் தந்தருள வேண்டும். (எ-று) [சு]

வேலன் பெருமன் விசாகன் விமலன் விடையில்வருங்
கோலன் குமரன் குளகன் மயிலன் குமரிபெற்ற
பாலன் பரம தயாள னவுணர் பகைக்குவெய்ய
காலன் திருவரு ளென்னுளு மேனுறக் காத்திடுமே

(இ-ள்) வேலினையுடையவன்; பெருமையையுடையவன்; விசாகன்; இயற்கையே மலமில்லாதவன்; இடப வாகனத்தில் வரும் அழகினையுடைய சிவபெருமானுக்குப் புதல்வன்; நெற்றிக் கண்ணினையுடையவன்; மயில் வாகனத்தை யுடையவன்; எக்காலமும் குமரியாகவுள்ள பராசத்தியின் பாலகன்; ஒப்புயர்வற்ற இரக்கமுடையவன்; அசுரர்களுடைய பகைக்குக் கொடிய காலனாகவுள்ளவன்; அவனுடைய திருவருள் எப்பொழுதும் மேன்மைபொருந்த எம்மைக் காப்பாற்றும். (எ-று) [எ]

நீடும் பெருமை பொருளொன்றி னுலந்த நீள்பெருமை
கூடுங் கலையறி வோடறி வின்பங் கொழிக்குமன்றித்
தேடும் புகழ்வண்மை யோடவை சேரிற் சிறீதரனே
யாடும் மயிற்கந்த நின்னன்புமேறி லளப்பரிதே

(இ-ள்) உயர்ந்த பெருமையானது பொருளினால் வந்து கூடும், அப்பொருளுங் கல்வியறிவோடு சேர்ந்தால் இன்பத்தைச் சொரியும், அவ்விரண்டும் புகழையுடைய கொடையொடு சேர்ந்தால் இலக்குமி நாயகனது அமிச மாகக் கூறலாம். இவை மூன்றுடன் ஆடுகின்ற மயில் வாகனத்தையுடைய கந்தனே! உன்னிடத்து அன்புமிருக் கின் அதற்கோர் அளவுகூறுதல் இவ்வுலகினிடத்து அரி தாகும். (எ-று) [அ]

ஆருந் துணையில்லை நான்படும் பாடென் னறுமுகங்கள்
சேருங் கருணை விழியொன் றிலேனுந் தெரிகிலவோ
தாருஞ் சுடர்வடி வேற்படைத் தண்ணிர் மலைக்குகனே
சீருஞ் சிறப்பு முனதடி யானெனுஞ் செல்வமுமே

(இ-ள்) ஒளிபொருந்திய கூர்மையுடைய வேலா யுதத்தைத் தாங்கிய தண்ணிமலைக் குகனே! ஆருந்துணை யில்லாது நான் படுகின்ற துன்பங்கள் உமது ஆறு முகங் களிற் பொருந்திய பன்னிரண்டு கண்களில் ஒரு கண்ணுக் கேனும் தெரியவில்லையோ? செல்வத்துடன் கூடிய சிறப் புக்களும் உமது அடியவன் என்னும் பாக்கியத்தையுந் தந்தருளுவீராக. (எ-று) [கூ]

வேலுடை யான்றகர் மேலுடை யானொளிர் வெள்ளிவெற்பின்
மேலுடை யானதள் மேலுடை யான்றந்த வேண்மயிலின்
பாலுடை யான்வள்ளி பாலுடை யான்பங்க யச்சிலம்பின்
காலுடை யான்முக மாறுடை யானெனைக் காப்பவனே

(இ-ள்) வேலாயுதத்தை யுடையவன், செருக்குற்ற ஆட்டுக்கடாவின்மேல் ஆரோகணித்து அதனை அடக்கின வன், ஒளி வீசுகின்ற வெள்ளிமலையின் மேலிருப்பவரும் புலித்தோலை ஆடையாக உடையவருமாகிய சிவபெருமா னாற் றரப்பட்ட வேளென்னும் பெயரையுடையவன், மயிலி

னிடத்தே நீங்காதிருப்பவன், வள்ளிநாயகியாரை ஒரு பாகத்திற் கொண்டிருப்பவன், சிலம்பணிந்த செந்தாமரை போன்ற திருவடியையுடையவன், ஆறுமுகங்களை யுடையவன் என்னைக் காப்பாற்றுகின்ற கடவுளாகும். (எ-று) [௰]

முற்றிற்று.

ஆக்கியோன் பெயரும் காலமும்.

சீர்திகழு நலம்பொலியு மீப்போவிற் தண்ணிமலைச் செல்வர்மீதே
யோர்திகழும் பாமாலை செய்தவன்றன் சன்னிதியி லேற்றம்பெற்றான்
பேர்திகழும் யாழ்நகர்வண் வயித்திலிங்க செல்லைய பெயரோனேங்க
வார் திகழுங் கலியையா யிரத்திருபத் தேழின்மதி யானிதானே.

யாழ்ப்பாணம் வண்ணைநகர்

சைவப்பிரகாச வித்தியாசாலைத்

தலைமையாசிரியரும்

மதுரைத்தமிழ்ச்சங்க வித்துவானுமாகிய

சுன்னாகம்

அ. குமாரசுவாமிப்புலவரவர்கள்

சொல்லிய சாற்றுகவி.

அறுசீராசிரிய விருத்தம்

பூவாரும் வண்ணைநகர் பொலிதிருமா தடிக்கமலம்
போற்றி மேலாம்
நாவாரு மிரட்டைமணி மாலையொடு பதிகமிவை
நயந்து செய்தான்
மாவாரு மப்பதியோன் வைத்தியலிங் கன்றருநன்
மதலை யான
பாவாரும் புலமையுள்ளோன் கலையுணர்ந்தோன் சேல்லையா
பாவல் லோனே.

ஸ்ரீராமஜெயம்.

வண்வணத் திருமகள் இரட்டைமணிமாலை.

சீரார் திருவண்ணை செய்யவள்மேற் சேரிரட்டை
யோரார் மணிமாலை யோதுதற்கு—நேராக
நாளுமொளிர் சங்காழி நற்றண்டு வில்லுடனே
வாளுந் துணையாய் வரும்.

நூல்

நேரிசை வெண்பா

பூமே லிருந்து பொலிவுறநற் சீவர்களை
ஆமா றளித்தருளு மன்னையே!—மாமேவு
பொன்னே! மணியே! புகழே! புவகைபொலி
மின்னே யருளை விதி. க

கட்டளைக் கலித்துறை

விதிதனை யுற்ற வெறுமையி னேற்கு விரைந்துனது
கதிதனைக் காணக் கடைக்கணிப் பாய்கதித் தோங்குமின்ப
நிதிதனைப் பெற்று நிலைபெற்று வாழ்வுயர் நீர்மைபெற்றே
சதிதனை நீங்கி யழியாத பேரின்பந் தங்கிடவே. ௨

நேரிசை வெண்பா

தங்கும் படிக்கிச்சை தந்தாளு வாயுனது
பொங்குந் திருத்தாளிற் பொற்கொடியே!—யெங்கு
மொளியா யுயிர்க்குயிரா யூதியமா யூனுய்
நளியா யுறைவாய் நவில். ௩

கட்டளைக் கலித்துறை

நவில்கஞ்ச மென்றிருக் கோயில்கொண் டாயிரு நற்புறமுங்
குவியஞ் சனக்குன் றிரண்டேந்தி மஞ்சனங் கொள்ளநித
மவிருந் திருவடி வும்புய நான்கும் மலர்க்கரமுங்
கவினுங் குறுநகை யுந்திரு நோக்குமென் கண்ணின்றவே.

நேரிசை வெண்பா

நின்றாளு நீயிருக்க நெஞ்சங் கவலுவதேன்
குன்றா மணியே! குவலயமே—லென்றாயே!
வாழாநின் றாய்நின் மகிழ்நரொடு வாழ்விலியைத்
தாழாது காத்தல் தரும். ௫

கட்டளைக் கலித்துறை

தகுமாறு நின்னடி தஞ்சமென் றேத்திநற் றண்மலரா
லுகுமாறு காண்கில னுன்கோயில் சூழ்கில னான்பொதியை
மிகுமாறு கொண்டு வளர்த்ததல் லால்விழி நீர்பெருகி
நெகுமாறு நெஞ்சம் பணிகின்றி லேனை நினைந்தருளே. ௬

நேரிசை வெண்பா

அருளே வடிவ மகிலவுயிர்க் கெல்லாம்
பொருளே யியங்கும் புலனா—யிருள்சீத்து
நிற்குஞ் சுடரொளியே! நின்னைநேர் வேறுபொருள்
சொற்குப் படுமோ சொல. ௭

கட்டளைக் கலித்துறை

சொல்லும் பொருளுந் துணையொடு சுற்றமுந் தூநெறியு
மில்லுஞ் சுகமு மெடுக்குங் குழவியு மேந்தெழிலும்
மல்லுந் திசைகள் மருவும் புகழும் வளர்கல்வியும்
புல்லும் பரிமளப் பூங்கொடி பாதம் பொருந்தினர்க்கே, ௮

நேரிசை வெண்பா

கேட்டிருக்க லாமோ கிறிபடுமோ நின்பெருமை
தோட்டுச்செந் தாமரைமேற் றூயனமே!—நாட்டி
னிருணக் கராவா னிடர்ப்படுமென் னேலங்
கருணைக் கிழுக்கன்றே காண். க௰

கட்டளைக் கலித்துறை

காண்பானுங் காட்சியு மேற்கும் பொருளுங் கலந்துறுதி
பாண்பா டளிமுரல் பங்கயத் தாய்நின் பரந்தவருட்
பூண்பார்வை தன்னுட் பொலிவதன் றேபொங்கு பாற்கடலுட்
சேண்பா லவர்துதி செய்ய வுதித்த செழும்பொருளே! க௰

நேரிசை வெண்பா

பொருகின்ற பஞ்சப் புலனொழித்து மூலத்
தெரிகொண்டு காலா லெழுப்பி—உருகும்
மதிமண் டலத்தே வதிந்தோர்க் கெளிதாந்
திதியாள னில்லாள் திறம். கக

கட்டளைக் கலித்துறை

திறம்படு தொல்பதி கொல்லா புரத்திற் றிகழ்விமலை
யறம்படு செல்வி அமலை கமலை அரிப்பிரியை
நிறம்படு மாமணி யென்றேத்து வார்க்கு நினைத்தவெலாம்
புறம்படு மாறின்றி யெய்துங்கண் டீர்பொருட் பேறுகளே.

நேரிசை வெண்பா

பேறாய்ப் பெரியாழ்வார் பிள்ளையாய்க் குல்லையிடை
வீறா யவதரித்த விந்தையே !—நாறுதொடை
சூடிக் கொடுத்த சுடரே ; யரங்கர்தோள்
நாடினாய் ! தந்தாள் நலம். கா

கட்டளைக் கலித்துறை

நல்லாரி னத்துளை நற்றமிழ்ப் பின்னுளை நான்மறையின்
சொல்லார் சிரத்துளை சொற்றொறு நீயுளை தோன்றுபல
நில்லாது நின்ற சராசரந் தோறுநி றைந்துளையே
யெல்லா வடிவு முடையா யுனையெங்ங னேத்துவனே. கச

நேரிசை வெண்பா

ஏத்து மடியார்க ளீரே ழுலகினையுங்
காத்து மளித்துங் கழிப்பராற்—பூத்த
மடல்சேர் மரையுறையும் மாதேவி நோக்கின்
கடைசே ரருளாற் கதித்து கரு

கட்டளைக் கலித்துறை

கதிக்கும் பெருநிதி காவலர் சேவை கநகதண்டி
பதிக்கும் மணிக்குவை பட்டுப்பட் டாடை பசும்பொனணி
மதிக்கும் வளமனை வாரணம் வாசிம கிழ்ச்சிபொங்கிக்
குதிக்கு மிலையென்ற சொன்னீங்க யாவுங் குறைவறவே.

நேரிசை வெண்பா

அறவே புலனொடுங்கி யையுந்திக் கண்பஞ்
சுறநா விழுமப்போ தோடித்—திறமேவு
நாகாரி மீதி நளினையே யஞ்சலென
வாகாய் மகிழ்நனொடு வா. கஎ

கட்டளைக் கலித்துறை

வானோக்கி வாழுங் குடிகடம் மன்னை மலர்முகத்தைத்
தானோக்கி வாழு மிளஞ்சே யரசன் றனதுசெங்கோல்
மேனோக்கி வாழு முயர்நீதி யொவ்வொன்று மேன்மையுண்டு
மானோக்கி மாதருண் மேனோக்கி மன்னுயிர் வாழுமன்றே.

நேரிசை வெண்பா

வாழுமயி ராணிகலை வாணியபி ராமியொடு
தாழுமர மங்கையர்கள் சந்நிதியே—வாழ்வு
புனைந்தாள் கமலவனப் பூவையடிப் பூவை
வனைந்தாளென் சென்னி மனம். ௧௯

கட்டளைக் கலித்துறை

மனங்கொண் டிருந்து மதிகொண் டிருந்து வருமன்னையா
யினங்கொண் டிருந்தென தில்கொண் டிருந்திடி லெத்தனையுங்
கனங்கொண் டிருந்து பிறக்கவஞ் சேன்கம லாலயமேல்
வனங்கொண் டிருந்த புரிசடை வார்குழற் பூமகளே! ௨௦

முற்றிற்று.

உ

ஸ்ரீராமஜெயம்

வண்ணைத்

திருமகள் பதிகம்

"மற்றுப்பற்றெனக்கின்றிநின்றிருப்பாதம்"

என்னும் சந்தம்

பண்பழம் பஞ்சுரம்.

காப்பு

பூபரவு வண்ணைதனிற் போற்றுதிரு மாதின்மேல்
நாபரவு நற்பதிகம் நான்பாட—மாபரவு
வேரிமகிழ் மாலை விமலன் சடகோபன்
காரிமகன் பொன்னடியே காப்பு.

நூல்

பூவி னீடுபொ லிந்து யாங்கணும்
போற்ற நின்றிடு தோற்றமாந்
தேவி யே! யழி யாத நின்னருள்
தேடி னேனருள் வாடிடாப்
பாவி யேன்நெடு நாட்ப டிந்த
பரிப்ப வக்கட னின்றெனைத்
தாவி யாள்கம லால யத்துறை
சலசை யே! வருக வருகவே.

மண்ணில் யாக்கை யெடுத்த போதுநின்
மாறி லாத வருட்பெருந்
தண்ண ளிக்குரு வாகி டாதவர்
தம்மை யேன்புவி மீதினில்

எண்ணி டாதுனே யான்ம றக்கினு
மேழை மீதி லிரங்கியே
நண்ணி யங்கம லால யத்துறை
நளினே யே! வருக வருகவே. 2

ஆதி நாரண ஞக மீதொளிர்
அற்பு தத்திரு நடனமே!
வேத ஞேடான் மால்சு ரர்க்கிறை
வேண்டி நிற்பது முன்னருள்
கோதி லாதம னத்த ரோடுறை
கோதை யே! குறை தீர்த்தருள்
பாத மேதுணே யாய டைந்தனன்
பதுமை யே! வருக வருகவே 3

முத்தொ ழிற்குமு தல்வி யாகியு
மூல காரண மூர்த்தி யாய்ச்
சுத்த நின்மல நிட்க ளங்க
சொரூப சின்மய துரியமாய்
முத்தி யாகியு முத்தி வித்து
முளைத்தெ ழுந்திடு முளையுமாய்க்
கத்து நான்மறை யாகி நின்றிடு
கார ணி! வருக வருகவே. 4

மன்ன ஞகவுந் துய்த்த வின்றி
மலர்க்கை நீட்டி யிரந்தவன்
பொன்ன ஞகவு மேழை யின்றிப்
பிறந்தி றந்திடு நாள்வரை
சொன்ன மேவுசம் பன்ன ஞகவுந்
தோற்ற வேண்டுநின் கண்ணருள்
பின்னே யே! பரி பூர ணி! யரிப்
பிரியை யே! வருக வருகவே. 5

கொடிய வல்லிலங் கதிர்செய் கானகங்
　　கூட மாநக ராகிடும்
மிடிகொள் கூன்குரு டூமை நின்னருள்
　　மேவின் மூவுல காளுவர்
படியி லேலின தருளி லாதவர்
　　பாவி யாய்நடைப் பிணமதே
துடியி டைந்திடு மிடைகொள் பூவனத்
　　தோகை யே! வருக வருகவே 6

சீதை யாய்ச்சிறீ ராமர் தாமணஞ்
　　செய்ய வில்லொடு தோன்றினாய்
இராதை யாய்விடை யேழு வென்றிடு
　　மிருடி கேசனை மருவினாய்
வாதை யாய்ப்புவி மீது வாழ்க்கையில்
　　வாடி னேனி னடிச்சரண்
கோதை யே! பர ஞான மோனமெய்க்
　　கொண்ட லே! வருக வருகவே 7

அப்ப நீ!புய ரம்மை நீ!குரு
　　வறிவி னுக்கறி வாகும்நீ!
வைப்பு நீ!புயிர் வடிவு நீ! பொருள்
　　வாழ்க்கை நீ! யறு சுவையுநீ!
அப்பு சூழ்புவி தன்னி லேயுறி
　　வான காட்சிமெய்த் தெய்வமே!
தப்பு செய்யினு நீபொ றுத்தருள்
　　தயாப ரீ! வருக வருகவே 8

அன்னை யே! யுனை யன்றி யோருற
　　வவனி மீதிலை யஃதினால்
துன்னு பொன்னடி யென்ம னத்திடை
　　சூட்டி னேனருள் காட்டுவாய்!

மின்னு பூம்பொழில் வண்ணை மேவிடு
வேற்க ணாய் ! கம லாசனி!
இன்னல் தீர்த்தெனை யஞ்ச லென்றருள்
இந் திரை! வருக வருகவே 9

இல்லா தார்க்குல கில்லை யுள்ளவர்க்
கெல்லா ருந்து தி செய்குவார்
சொல்லு நீதிகுன் றாத தோர்ந்துநின்
தூய சீரடி பாடினேன்
தில்லை காஞ்சி தென் னாகை யிந்தளூர்
சேறை யூர்மலை சோலையுங்
குல்லை நாறும ரங்க மாதிய
குலவு நாயகி ! வருகவே. 10

முற்றிற்று

௨

அரிநாம தோத்திரம்.

சங்கு சக்ர பீ தாம்பர தாரி
தந்த வக்ரசிசு பாலசம் மாரி
சலச லோசன தற்பர நீதா
அகில லோக அரி அற்புத போதா
என்னை யாள்பர நாத முராரி
ஏதி லார்க்கருள் துய்ய புராரி
நித்திய தத்துவ நின்மல ரூபா
சித்த முண்டுகொல் பத்துமநாபா

வேறு

வாசு தேவ பரந்தாமா
சோதை மகிழ்ந்த அரிராமா
பின்னை மகிழ்ந்த பிராணேசா
வண்ணை யமர்ந்த அருள்வாசா
பூவுல குண்டுமிழ் சீதரனே
போற்றினே னுன்னடி மாதவனே
கோபா லா அரி கோவிந்தா
கோகுல நந்தன சீபாலா
எங்கு நிறைந்த பரம்பொருளே
எந்த னிடர்வினை தீர்த்தருளே
வேங்கட மாமலை யோங்கியவா
ஈங்கது போலுன தருள்தரவா

வேறு

10 மருதி டந்த மாதவா
எருத டர்ந்த கேசவா
வண்ணை வேங்க டேஸ்பரா

வரத னேதா மோதரா
கோல மான தூயனே
தால முண்ட வாயனே
வேலை மீது பள்ளியாய்
நீல மேக வள்ளியாய்
ஆழி கொண்ட கையனே
வாழி நாமம் மெய்யனே

வேறு

அட்டாட்ச ரப்பொரு ளாய்நிறைந் தாயே
கட்டமி லாதெனைக் காத்தருள் வாயே
பண்ணவர் பணியும்வை குந்தா முகுந்தா
பாவிக்கு னின்னருள் பாலிப்பா யெந்தாய்
பாதுகை யீந்தப ரமத யாளா
மாதொளிர் மேனி மறைமுடி யாளா
தந்தைசொற் காய்முடி தன்னைவி டுத்தோய்
வந்தனை செய்சுரர்க் கபய மளித்தோய்
அண்ட சராசர மெங்கும் நிறைந்தாய்
அளவினைத் தூணில் அறிந்திட வந்தாய்

வேறு

செந்தமிழ்ப் பின்சென்ற செல்வக் கொழுந்தே
சேவடி துதிசெய்யத் திருவருள் நீயே
ஏழும லைப்பொரு ளாயிருந் தாயே
என்துதி தன்னையு வந்தருள் வாயே
சீதர கேசவ நந்த முகுந்தா
நீத பரத்துவ நாத வரந்தா
நீல முகுந்தா நிருதர்கள் காலா
வேலையின் மேற்றுயில் பாலக சீலா

பாண்டவ தூதா பத்தும நாபா
நீண்டருள் வாமன நின்மல கிருபா
சுத்தசை தன்னிய சுந்தர மூர்த்தி
சோதிசு தர்சன நிட்கள மூர்த்தி

வேறு

ஆதிமூல ஆதிமூல ஆதிமூல நாதனே
வேதபர நாதமூல ஆதிமூல நீதனே
நாவிழுந்து கண்மயங்கி நாடியோயும் போதிலே
தாவிவந்தென் முன்னே நின்று தாங்கியா தரிப்பாயே
அத்திநின்று மூலமென்ன ஆழியேவு மச்சுதா
சித்தமுன்னை யன்றியில்லைச் ஸ்ரீநமோ நாராயணா
வித்தநித்த சுத்தமுத்தி சத்திபால சித்தனே
பத்தருத்த மத்திறத்து சித்தமாடும் கத்தனே
மாடு வீடு பாடுகொண்டு நீடுமென்ற னுள்ளமே
தேடுகாடு சென்றிடாமு னாடுவேய னுள்ளவே
அந்திவண்ண மாழிவண்ணஞ் சிந்தைவண்ண மானவா
நொந்தழைக்கு மேழைமீது நோக்குவேயின் கானவா

வேறு

வனமாலைத் தரிமாலைப் போற்று
வருமாலைத் தரியாமல் நீற்று
நலிகின்ற மடநெஞ்சே நில்லு
நாராயணாவென்று சொல்லு
கலங்காதே மடநெஞ்சே ! நில்லு
காகுத்தன் நாமத்தைச் சொல்லு
சீரழியும் மடநெஞ்சே ! நில்லு
சீதரனை நாவாரச் சொல்லு
துளாய்மாலை யான்பெயரைச் சொல்லு
துயரம்போய் விட்டதெனத் துள்ளு
பாற்கடற் பள்ளியான் பெயரே
பாவிகாள் சொல்லுவீர் ! நீரே

கேடழிய வேண்டுமென் னெஞ்சே
கேசவன் திருவடி யிறைஞ்சே
மாயவாழ் வின்னலுறு மனமே
மாயனடி பத்திசெய் தினமே
பொன்பூமி யாடையணி வீடு
பொங்குமா தவனடியை நாடு

வேறு

சீதர னென்றுனைச் செப்புவனே
செய்வினை தனினின்று தப்புவனே
தாமோ தரனடி சார்ந்தனனே
சஞ்சல மதினின்று தீர்ந்தனனே
மாதவ னடியிணை மறவேனே
வல்வினை யாலினிப் பிறவேனே
வேங்கட வாவென விள்ளுவமே
வீழ்ந்தது வினையெனத் துள்ளுவமே
பன்னக சயனனைப் பாடுவமே
பதின்மர்சொல் வாய்மொழி நாடுவமே
பேய்முலை யுண்ட பிரானடியே
பிரியமோ டனுதினம் பேணுதியே
அரவணை யான்புகழ் பாடுவமே
அவனடி யாரொடும் கூடுவமே
நான்சொன்ன பாடலும் கேட்டாரே !
நாதாந்த வைகுந்த நாட்டாரே !
நாரா யணனடி நல்லவரே
நல்ல தெல்லாந்தர வல்லவரே
எனக்கினித் துயரிலை விட்டேனே
எம்பெரு மானடி தொட்டேனே
என்னுயி ருடம்பொடு சித்தமதே
இருப்பது தாரக புத்தமுதே
பாலகிருஷ் ணன்பதம் பாடுவமே

பாராங் குசன்மொழி தேடுவமே
அரங்கத்து மணியே யருமணியே !
ஆண்டா ளணியுந் திருமணியே !
பீதாம் பரதர அரிநமோ நாரண !
நாதாந் தரசிவை சோதர பூரண !
சிந்தனைக் கெட்டா திருப்பதுவே
திருமால் திருவருள் விருப்பதுவே
மதுசூ தனனடி மறவேனே
மறலிதன் கதவினைத் திறவேனே
பையர வணைமிசைத் துயில்வோனே !
பாவியேன் படுதுயர் களைவோனே !
வேங்கட சிமய விழுப்பொருளே !
வேண்டினே ருகத் துறைபொருளே !
கருடத் துவசா கண்ணபிரானே !
புருடோத் தமனே புண்ணியனே !

வேறு

திருவளரும் மணமகள் கணவா ! உந்தன்
திருவருளை வேண்டினேன் துதிசெய்யத்துணைவா
வண்ணைநகர் வாசனே ! சரணம் ; எந்தன்
வலியுபிணி கலிநலியத் திருவடியே யரணம்
மாரிதடுத் தாண்ட கோபா ! கருணை
மாரியளித் தாளும்தே வகிதேவி பாலா !
அன்னமா யருமறைசொல் வாயா ! நீண்ட
ஆதி திரு விக்கிரம அமலனே ! மாயா !
உன்னடிக் கென்றொரு விண்ணப்பம் ; தாரு
முலையாது துயராழி நீந்தவொரு தெப்பம்
அரிநமோ நாராயணா ! வென் ; நமரர்
அஞ்சலிசெய் தடிபணியுஞ் செஞ்சரணம் போற்றி
பொல்லாத மாயமிடி நீங்கி—உந்தன்

பொற்பாத கமலத்தை யெப்போதுந் தாங்கி
கைதவ மிலாதுனடி பாடி—நாளும்
கநகவம் பரநாத னே! யென்று தேடி
கைவிடே லுன்னடிக் கபயம்—மிகவும்
கவலையுற் றேனெளியும்! நின்பாத உபயம்
பரிபவம தால்நிதமும் வாடிப்—பாழில்
70 பாவியேன் தவியாது தேவியருள்கூடி
வண்ணைநகர் வேங்கடேச் சுரனே! கமல
மாதுவளர் பூவைநிற மேனிவளைக் கரனே
கோபால னேயரி முகுந்தா! பின்னை
கூடிமகிழ் சீதரா! பூவைநிற வண்ணா

வேறு

சோலைமலை மீதிருக்குஞ் சோதிமயமே! பர
காலன் துதி செய்யுமொரு நீலமயமே
ஒரிரவி லோர்மனையில் வந்து பிறந்தாய்! அன்றே
ஒரிரவி லோர்மனையில் நன்று கிடந்தாய்
மாயவன்னை யாகிவந்த பூதனைதனை—முலை
வாயில்வழி ஆவிகொண்ட சீதர! நினை
பாடும்வண்ணைச் செல்லையன் நாடும்பொருளே;
76 வந்து—கூடும்படி செய்தநிறை வான அருளே!

முற்றிற்று.

வண்வண

வேங்கடேசப் பெருமாள் ஊஞ்சல்.

காப்பு

திருமேவு மணிமார்பத் தேவதேவன்
சீர்செறியும் வண்ணைநகர்ச் செம்பொற் கோயில்
உருமேவும் பரமபதத் தொருவன் வேழ
மோலமிட முன்னின்ற வுயர்வொப் பில்லான்
மருமேவுந் துளபத்தார் வேங்க டேசன்
மலரடிக்கே ஊஞ்சலிசை மகிழ்ந்து பாடத்
தருமேவு தமிழ்மறைசொல் குருகூர் நங்கை
தந்தவருட் சேய்மலர்த்தாள் சிந்திப் பாமே. 1

நூல்

பங்கயனு முருத்திர னுங் கால்க ளாகப்
பராபரமே மணியார்ந்த விட்ட மாகப்
பொங்குகலை ஞானமொடா கமநூ லங்கம்
பொருந்துமுப நிடதமுறுக் கிழைய தாகத்
துங்கமிகு நால்வேதங் கயிற தாகத்
துலங்குபிர ணவமேபொற் பலகை யாக
மங்குல்தவழ் சோலைசெறி வண்ணை மேவி
வாழ்வேங்க டேசுரரே! யாடீ ருஞ்சல். 2

துய்யபர வெளியேநல் விதான மாகத்
துலங்குடுக்கள் நவமணியின் மாலை யாகப்
பொய்கை முதல் மூவர் தமிழ் விளக்க மாகப்
போதாந்த மங்கலவா லாத்தி யாகச்

செய்யவனுங் கலைமதியும் கவிகை தாங்கத்
திருமகளார் வலமார்பிற் சீர்கொண் டாட
வையமதில் வளஞ்செறியும் வண்ணை மேவி
வாழ்வேங்க டேசுரரே! யாட ருஞ்சல். 3

மன்னுமறம் பொருளின்பம் வீடு நான்கும்
மருவிநிரை சாமரையின் தொகுதி யாகப்
பன்னுவடந் தொட்டமரர் பணிந்து தாழப்
பரமபதத் தடியர்குழாம் பாதந் தாங்கச்
சின்மயசிற் பர வடிவே! யாட ருஞ்சல்
திகழ்கருடத் துவஜரே! யாட ருஞ்சல்
வன்னமணிக் கோபுரஞ்சேர் வண்ணை மேவி
வாழ்வேங்கடேசுரரே! யாட ருஞ்சல் 4

செம்மலர்த்தாட் பரிபுரமுஞ் சிலம்பு மாடத்
திருமார்பிற் கௌத்துவமுந் திருவு மாடக்
கொம்மைபெறு புயமீதிற் றுளவ மாடக்
குலவுகரத் தாழிவளை கூடி யாடச்
செம்மல்முடிக் கருங்குழலுஞ் சுரும்பு மாடத்
தேறுமுக மதியருளுங் குழையு மாட
வம்மெனுஞ்சீர்க் கொடியாடும் வண்ணை மேவி
வாழ்வேங்க டேசுரரே! யாட ருஞ்சல். 5

தடமறுகிற் குடமாடித் தழல்வாய் நாகந்
தன்மீது நடமாடித் தாழிக் காடிக்
குடமுறுபால் தயிர்க்காடி வெண்ணைக் காடிக்
கோவியர்தம் மனைதோறுங் குலவி யாடி
இடமுறுமென் னகத்தாடி ஈமத் தாடி
இரவுதவிர்த் தாடிவரு மீசா! என்றும்
மடல்விரியு மிணர்க்காவின் வண்ணை மேவி
வாழ்வேங்க டேசுரரே! யாட ருஞ்சல் 6

எவ்வுயிர்க்கும் பராபரரே ! ஆடீ ரூஞ்சல்
இனியதமிழ்ப் பின்னடந்தீர்! ஆடீ ரூஞ்சல்
கௌவைதவிர்த் தாள்பவரே! ஆடீ ரூஞ்சல்
கருடனூரத் திருவடியீர்! ஆடீ ரூஞ்சல்
தெவ்வருயிர்க் காழிகொண்டீர்! ஆடீ ரூஞ்சல்
திருமகளின் மணவாளா! ஆடீ ரூஞ்சல்
மௌவனகை வாய்ச்சியர்சூழ் வண்ணை மேவி
வாழ்வேங்க டேசுரரே! யாடீ ரூஞ்சல் 7

சாரங்க பாணி!சம்பு சங்க மேந்தி!
தாமோதரா ! முகுந்தா! சலசை கேள்வா!
சீரங்க வாசவனே! கேசவா நீள்
திரிவிக்ர மா!பதும நாபா! சீலா!
ஆரங்கொள் வனமார்பா! மணிவண் ணனென்
றணி முறுவ லரம்பையர்சீர் வடங்கொட் டாட்ட
வாரங்கொ ளடியார்சூழ் வண்ணை மேவி
வாழ்வேங்கடேசுரரே! யாடீ ரூஞ்சல் 8

ஆரணத்து முதற்பொருளே! ஆடீ ரூஞ்சல்
அக்கரமெட் டானவரே! ஆடீ ரூஞ்சல்
வாரணமுன் வந்தவரே! ஆடீ ரூஞ்சல்
வாட்கலியன் மொழியுவந்தீர்! ஆடீ ரூஞ்சல்
நாரண நான் முகவரனே ! ஆடீ ரூஞ்சல்
நாதாந்த வடிவுடையீர்! ஆடீ ரூஞ்சல்
வாரணங்கள் முழங்குவயல் வண்ணை மேவி
வாழ்வேங்க டேசுரரே யாடீ ரூஞ்சல் 9

கண்ணகன்ஞா லத்துயிரைக் காக்க வேண்டிக்
கஞ்சன்மனைக் குழவியெனக் காண வந்தீர்
விண்ணுமண்ணுந் தோயாநின் விபூதி யாலே
வேண்டுருவந் தனையெடுத்தே விளங்க வாட்டி

உண்ணுதராத் துதியாது முதித்தே மீள
வுலகொடுக்குந் திருவயிற்றீர் ! ஆடீ ரூஞ்சல்
வண்ணைநகர் வைசியர்கொண் டாட மேவி
வாழ்வேங்க டேசுரரே ! யாடீ ரூஞ்சல் 10

சீர்மலிதா ரச்சுதரே ! ஆடீ ரூஞ்சல்
தேவகியா ரச்சுதரே ! ஆடீ ரூஞ்சல்
கார்மலிசீ ரங்கத்தீர் ! ஆடீ ரூஞ்சல்
கலிபணிசீ ரங்கத்தீர் ! ஆடீ ரூஞ்சல்
தார்மலிநா லம்புயத்தீர் ! ஆடீ ரூஞ்சல்
சானவிநா லம்புயத்தீர்! ஆடீ ரூஞ்சல்
வார்மலிசூழ் வளம்பொலியும் வண்ணை மேவி
வாழ்வேங்கடேசுரரே யாடீ ரூஞ்சல். 11

முற்றிற்று.

எச்சரீக்கை

சீரார் வண்ணை யூரா ! வருணீரா ! குல்லைத் தாரா
திருமாதுறை யொருமாதவ தேவாளச்ச ரீக்கை
கூராழிசங் கோரார்கரத் தீராபர நீரா
குண பூஷண வீபூஷண குருவேளச்ச ரீக்கை
ஆராவமு தனையாயடி யாராவமு தனையாய்
அண்டாவரு கண்டா கண்டன் விண்டேளச்ச ரீக்கை
வீராஅரி யூராபுரி கோராஅவ தாரா
விமலாவிழிக் கமலாதரு வமராளச்ச ரீக்கை க

காயாமலர்க் காயாவெண்ணை வாயாளச்ச ரீக்கை
கதிராழிகொண் டுருளாழியைக் காத்தாய்ளச்சரீக்கை
ஆயாதயைக் காயாவருட் டேயாளச்ச ரீக்கை
அடியாரிடர் பொடியாவரு நெடியாளச்ச ரீக்கை
வேயாளச்ச ரீக்கை முகிழ் மாயாளச்ச ரீக்கை
மேலோயெச்ச ரீக்கைதிரு மாலோய்ளச்ச ரீக்கை
நேயாவெச்ச ரீக்கைவண்ணை மாயாளச்ச ரீக்கை
நீண்டோயெச்ச ரீக்கை யென்னை யாண்டோய்ளச்ச ரீக்கை உ

பராக்கு

திருவளரும் வண்ணைநகர்த் தேவே பராக்கு
சீர்வளரும் மகிழ்மாறன் பாவே பராக்கு
பெருவளமை தருமுருக பேறே பராக்கு
பின்னைமகி ழன்பான கூறே பராக்கு
அருவளரும் விசையனை யளித்தாய் பராக்கு
அந்தணன் புதல்வரை யளித்தாய் பராக்கு
கருவளரு முயிருறையுங் கர்த்தா பராக்கு
காளிங்கன் மீதருளு நிர்த்தா பராக்கு க

யாதவ குலத்தெழுங் கதிரே பராக்கு
யாதவ பராக்கீதை யாதவ பராக்கு
மாதவ பராக்குவா மனனே பராக்கு
மாயா பராக்குவன மாலீ பராக்கு
பூதர பராக்குந்தி பூத்தோய் பராக்கு
புண்ணிய பராக்குபுரு டோத்தம பராக்கு
சீதர பராக்குப் பராக்குதிரு வேங்க
டேசா பராக்குப் பராக்குப் பராக்கு. உ

வாழி

நீராழி வண்ணனடி நினைப்போர் வாழி
நிறைமொழியோர் பசுநிரைகள் நிதமும் வாழி
பேராழி மன்னுலகிற் பெருகி வாழி
பிறங்குவண்ணை நகர்வாழி புலவர் வாழி
சீராழி சங்குகதை சிலைவாள் வாழி
சீரியகற் புடைமையறஞ் சிறந்து வாழி
வாராழி சூழிலங்கை வடபால் வண்ணை
வாழ்வேங்க டேசுரன்றுள் வாழி வாழி

ஆக்கியோன் பெயரும் காலமும்.

சீரேறும் ரத்தாட்சி இடபமதி தனில்வண்ணை
சிறக்க வாழுங்
காரேறு மாலடிக்கே ஊஞ்சலிசை பராக்குவரை
கற்ரேர் போற்ற
ஏரேறு மொருபதினை ந் தியம்பினு னப்பதியி
லினிது வாழ்வோன்
பாரேறும் வயித்தியலிங் கேந்திரனருள் செல்லைய
பாவல் லோனே.

முற்றிற்று.

முத்துமாரியம்மை பேரில்
ஊஞ்சல் பதிகம்

மாமேவு கலியாணி கௌரி மாரி
மாமாயி மனோன்மணிநின் மலசு காரி
பூமேவு புராதனி பூரணி புராரி
புனிதனிடம் புரப்பவரே யாடீரூஞ்சல்
நாமேவு கலைமாதும் பூவின்மாதும்
நலந்திகழ இருமருங்கும் வடந்தொட் டாட்ட
தேமேவு பாணறுகா லிசைக்கு மீப்போச்
செல்விமுத்து மாரியரே யாடீரூஞ்சல். 1

அறம்வளர்த்த நாயகியே யாடீரூஞ்சல்
அகிலாண்ட நாயகியே யாடீரூஞ்சல்
நிறங்குலவு மரகதமே யாடீரூஞ்சல்
நீலவண்ணர்க் கிளையாளே யாடீரூஞ்சல்
மறம்படிக்குந் திருவுருவே யாடீரூஞ்சல்
மகிடசுர சங்காரி யாடீரூஞ்சல்
திறம் பெருகு கனிகன்னல் செழிக்கு மீப்போச்
செல்விமுத்து மாரியரே யாடீரூஞ்சல். 2

உ

குகமயம்.

நல்லைச் சுப்பிரமணியர் திருவிருத்தம்

மஞ்சுண்ட கோலமயி லுண்டுமிளிர் வேலுண்டு
வளர்கின்ற வினைகளெவையும்
வாளாது விட்டோட வுன்னெழுத் தாறுண்டு
மகிமைபெறு நீறுமுண்டு
நெஞ்சுண்டு வாயுண்டு நீயுண்டு நானுண்டு
நியமமதின் வழுவுமுண்டோ
நீடித்த காலமா யென்குறை யியம்பியும்
நெஞ்சிரங் காததென்னே
தஞ்சமுன் னடியுண் டெனக்கொண்ட வேழைதன்
சஞ்சலந் தீர்த்தருளுவாய்
சரவண பவா! குகா! சண்முகா! நீபனே!
சாமி! சிவ காமி சேயே!
வஞ்சமுறு நெஞ்சினர்கள் பஞ்சமுறு செஞ்சரண
வடிவேல் கரக்குமரனே!
வாரண முழங்குவயல் சூழுநகர் நல்லைவளர்
வரசுப்ர மணியபொருளே. (1)

சிந்தைகுடி கொண்டபொரு ளறுமுகப் பொருளெனது
சிந்தா குலந்தவிர்க்குஞ்
செய்யபொரு ளருமறைகள் தேடியுங் காணாத
தேவகுரு வானபொருணேர்

யந்தம தறுத்தெனது பவமுதற் பிணிமிடிகள்
பற்றுத ழித்தபொருளன்
யர்க்குமுனி வர்க்குமெதி கட்குமெதி ரானபொருள்
பாறூர்தி மருகப்பொருள்
கந்தசர வணமலர் தொட்டிமிசை யறுபதங்
கானமிட நடனமாடுங்
கண்ணியப் பொருள்தெய்வ கற்பகப் பொருளெனது
கண்ணினுட் பொருள்நல்லையில்
வந்தபொருள் தெய்வானை வள்ளிமகிழ் கின்றபொருள்
மயின்மேலு கந்தபொருள்சீர்
வானவர் பிழைத்தபொருள் தேனிடி விழைந்தபொருள்
வரசுப்ர மணியபொருளே (2)

ஓயாத துயராழி திரைமோத மோதுண்டெ
னுணர்வொடுயர் செயலழிந்தே
புன்னரிய சந்நிதியி லென்னெளிமை கூறினே
னென்றிரண் டோவநந்தம்
மாயாத புலனுறுகண் மீதுமன நீடியே
மருவுசுக மின்றிநாளும்
வாட்டமுறு மென்னையரு ணட்டமது கொண்டு நீ!
வளமருவ வைப்பதென்றோ?
தூயாத வா! சுப்ர மணிய பண் டிதகுகா!
சுருதிமுடி வான பொருளே!
தோகைமயில் வாகனக் கடவுளே! வேன்முருக
சோதியே! துரியவடிவே!
வாயார நின்னெழுத் தாறிலா நாவுடைய
வாதருற வகலவருள்வாய்
வாரண மகட்கினிய பூரண நல்லைவளர்
வரசுப்ர மணிய பொருளே (3)

கருவறை திறக்கா தடைத்தமணி யென்னையென்
கன்மங்கள் வாட்டிடாது
காத்தமணி! விடைமிசைக் கருணையங் கடல்வரக்
கண்பிசைந் தழுதமணி! சீர்த்
திருவறை திறந்தெனக் கன்புடன் வேண்டியன
செய்துமிடி தீர்த்தமணி! நற்
செந்திலம் பதியில்வளர் தெய்வமணி! சைவமணி!
சிந்தாம ணிக்குமணி! யஞ்
சுருவறைக் குள்ளொளிய தாய்மேவி யசைவிக்கு
மூலகமணி! ஞானமணி! யே
ரோதரிய தெய்வீக நாடகச் சாலையா
யோங்குகதிர் காமமேவி
வருமறைக் குருமணி! குமாரமணி! நாதாந்த
மருவுமணி! மயிலூர்மணி!
மாணிக்க மோனமணி! நல்லையம் பதியில்வளர்
வரசுப்ர மணியபொருளே (4)

தேசிகப் பொருளாகி யெங்குநிறை கின்றனே!
சிறந்தமறை முதலாயினை!
சிற்பரவி யோமமாய்த் தோன்றவு மொடுங்கவுந்
தெரிவரிய பொருளாயினை!
யாசிலட் டாக்கரப் பொருளாகி யாறுகி
யஞ்செழுத் தாகிநின்று!
யறுமுகப் பொருளான தெய்வமே! நின்பொரு
ளறிந்தெவ ருரைக்கவல்லார்
பூசல்வண் டறைகடம் பணிபுமணி மார்பனே!
புனமயிலை மருவுபுயனே!
பூரித்த தீவினைக் கடலிலே நெடுநாட்
புலங்கொள வழுந்திநின்றே

மாசினுற் றடுமாறு மென்னைவெளி தூக்குவாய்
வானவர்கள் சஞ்சீவியே !
வையமிசை யுய்யுநெறி செய்யுநகர் நல்லைவளர்
வரசுப்ர மணியபொருளே (5)

நானாகி யென்னினைவி லெழுகின்ற பொருளாகி
நவில்பொருளில் நடுவனாகி
நலமேவு முயிராகி யுயிரினுக் குயிராகி
ஞாலமதி லூனுமாகிக்
கோனாகி யுயிர்புரந் தளிசெய்யு மொருவனாய்க்
கூறுமெண் வடிவமாகிக்
கோதிலா நறையாகி நறையினுட் சுவையாகிக்
கொள்ளுமெப் பொருளுமாகித்
தானாகி நின்றசிவ சண்முகா ; வீதுநின்
றன்மையென் றுரை படுவதோ ?
தாலமுழு துண்டசங் காழியன் மருகனே !
சரவணோற் பவகுமரனே !
மானுடு துயர்கொண் டலந்திடா தெனையாள
வந்தருளும் வடிவேலனே !
வள்ளிமண வாளனே ! தெள்ளுதமிழ் நல்லைவளர்
வரசுப்ர மணியபொருளே (6)

உவந்துனை நினைந்துருகு நெஞ்சமுநி னிணையடிக
ளோர்ந்துகண் களிகூர்தலு
மொப்பரிய முருகாவெ னப்புல னொருங்கமைந்
தோதலு மெனக்கருளுவாய்
சிவந்திடு தலைச்சூர் மடிந்திடு புலந்தொறுந்
திரிபேய்க் கவந்தமாடச்
செய்யவடி வேல்தொட்ட கையனே ! வையமிசை
சென்மித்த நாளாகவே

யவந்தனைக் கொண்டநாட் போக்கினே னன்றியொன்
றறிகிலே னடைகிலேனே.
யாதலா லென்னையுன் னடியருட் கூட்டிமன
வாறுத லளிப்பதென்றோ !
மகந்தனை யழித்தபெரு மாருதி யுளத்தொளிரு
மாயவன் றிருமருகனே
வானவர் தினம்பணியு ஞானபண் டிதகுகா
வரசுப்ர மணியபொருளே (7)

வெப்பினொடு வலிகுட்ட மீளைகண் ணோயிடி
விளங்கிடு மெலும்புருக்கி
வேர்விழு கிரந்திகா மாலைசத்தி வாதநோய்
வெட்டைநீர் நெஞ்சடைப்பு
செப்பிய பவுந்திரம் மூலநோய் புண்ணிவைகள்
சேர்ந்திடா தெக்காலமுஞ்
செந்திலம் பதிமேவு கந்தனே ! பழனிமலை
திகழ்பரங் குன்றானே !
யொப்பிலா தொளிபரவு கதிரைமலை நாதனே !
யுமைபால கதிர்வேலனே !
யொருமையுட னுனதுதிரு வடிமலரி லெனதுமன
மொன்றாகி நிற்பதென்றோ ?
மப்பகல வேதனுக் குரைகுரவ மலரொடு
மணமாகி நின்றவடிவே !
வரமுருக ! குமரகுரு பரநிருப ! நல்லைவளர்
வரசுப்ர மணியபொருளே (8)

குமரகுக முருக ! சண் முகநாத னே ! பரங்
குன்றனே ! செந்தூரனே !
கோதிலா துறையாவி னன்குடிப் பழனிமலை
கொண்டருளு ஞானவடிவே !

யமர ! விமலாநந்த குருநாத ! வேரகத்
தணிகடம் பமர்தோளனே !
யண்டர்பணி குன்றுதொறு நின்றருளு மெந்தையே !
யமலனே தணிகைவாழ்வே !
தமரமிடு சோலைமலை யாடிவரு வேலனே !
தவநீடு கதிர்காமனே !
தாரணியி லுனையன்றி வேறொன்று மறிகிலேன்
சாற்றுமுரை கேட்டருளுவாய்
வமநமுறு மிழுதுநாய் போன்றிடா துன்னருள்
வழிப்படுவ தெக்காலமோ ?
வரமருவு சினகரத் தொளிபெருகு நல்லைவளர்
வரசுப்ர மணியபொருளே (9)

நலமருவு செந்தமிழ்க் குரவனே ! சந்தமெனு
நறையொழுகு மதுரவுசித
நாமேவு மருணகிரி புகழ்கொண்ட நாதனே ?
நற்றிற மிலாத நாயேன்
தலமருவு முன்னல முளத்துன்னி வாழ்த்திேனன்
சகிக்கரிய சஞ்சலத்தாற்
சரவண பவாநந்த சாமி ! குரு நாதசிவ
சண்முகா ! யின்னு மென்னை
மலமருவு துன்புடலில் வைப்பையோ ! வலதுநின்
மலரடிக்கீழ் வைப்பையோ ?
மாறுது பொழிகருணை முகமாறு கொண்டவா !
வள்ளலே ! யினிதுபுகல்வாய்
வலமருவு திருமாது மணவாளன் மருக ! பெரு
வாழ்வான கருணைவடிவே !
வன்னமணியோசைதுயர் தன்னையகல் செயுநல்லை
வரசுப்ர மணியபொருளே

முற்றிற்று

உ

கணபதி துணை

ஈப்போ நகர்

மகா கணபதி ஊஞ்சற் பதிகம்

காப்பு

திருமேவு மணிமார்பத் தவனும் வேதச்
செங்கமலத் தவிசோனுந் தேடற் கெட்டாப்
பெருமானன் துயர்தவிர்த்தே யீப்போ மேவும்
பேராளன் சீராளன் பிறப்பில் லாதா
னுருமேவி மூவுருவங் கொண்ட பெம்மா
னொப்பரிய கணபதிக்கே யூஞ்சல் பாடப்
பருமேரு தனிலெழுத முனிவன் வாக்கைப்
பற்றியகோட் டவனிருதாள் பரசு வாமே

நிரஞ்சனமாஞ் சத்திசிவங் கால்க ளாக
நிகரில்பர நாதமணி விட்ட மாகப்
பரந்தகலை ஞானமுட னாக மங்கள்
பன்னுபுரா ணங்கள்முறுக் கிழைய தாக
வரந்தையறு நால்வேதங் கயிற தாக
வழகொழுகு பொற்பலகை குடிலை யாகச்
சிரம்பொலியும் வளம்பெருகு மீப்போ மேவும்
சித்திமகா கணபதியே யாட ரூஞ்சல் 1

அம்பரபீ தாம்பரகல் விதாந மாக
வலருடுக்கள் நவமணியின் மாலையாக
நம்புசுடர் ஞாநமே விளக்க மாக
நாதாந்த மங்கலவா லாத்தி யாகத்

தும்புருவு நாரதருங் கீதம் பாடத்
துலங்குமிரு சுடருமொளிர் கவிகை தாங்கச்
செம்பதுமத் தாண டஞ்செ யீப்போ மேவும்
சித்திமகா கணபதியே யாடீ ரூஞ்சல் 2

முக்குணமுந் திருமுன்பு முறைகேட் டுய்ய
மொழியுமறம் பொருளின்பம் வீடு நான்கும்
பக்கமுயர் சாமரையின் பந்தி யாகப்
பகர் மோட்ச மொழியாத்தித் தீப மாக
மிக்கவன்பு மலராலே யடியர் கூடி
வேண்டுவரம் பெறுவதற்கே பூசித்தேத்தச்
சிக்கமுகிற் கிரிசூழ்ந்த ஈப்போ மேவும்
சித்திமகா கணபதியே யாடீ ரூஞ்சல் 3

கநகபர முடிக்கிரணம் பரவை வீசக்
கருணையெனத் தனிசெவிகள் கவிகொண் டாடப்
புனைமுடியி லிளம்பிறையுங் கங்கையாளும்
புயங்கமுட னணிகெழுமிப் பொலிந்து தோன்றத்
தனதொழிவிற் குங்கணருள் பொழிந்து காட்டத்
தாங்கியவங் குசபாசந் தவரைக் காக்கத்
திநமணியுந் திங்களுஞ்சூ ழீப்போ மேவும்
சித்திமகா கணபதியே யாடீ ரூஞ்சல் 4

அங்குசஞ் சேர் கரமாடப் பாச மாட
வடியர் தமை யீடேற்று நால்வா யாடப்
பங்கமிலா மோதகஞ்சேர் கரமு மாடப்
பனைக்கைமுகத் தசுர னுயிர் பறிகோ டாடத்
துங்கமிகு திலகநுதற் சுட்டி யாடத்
தொந்தியொடு தூர்வைவன்னி துளங்கி யாடத்
திங்கள்முக வனிதையர்சே ரீப்போ மேவும்
சித்திமகா கணபதியே யாடீ ரூஞ்சல் 5

புத்திசித்தி யிருமருங்கும் வடங்தொட் டாட்டப்
புடையிளிர் வல்லபையாள் புளகங் கொள்ளப்
பத்தியுட னமரர்துதி பரவை யேப்பப்
பாமகள்பூ மகளிசைபல் லாண்டு பாட
வத்திமுக முடையவரே யாடீ ரூஞ்ச
லம்பிகையாள் திருமகனே யாடீ ரூஞ்சல்
சித்திபொழி வளமலியு மீப்போ மேவுஞ்
சித்திமகா கணபதியே யாடீ ரூஞ்சல் 6

அந்தமிலா வருள் படைத்த வாகு மாட
வழகியபொற் சதங்கைகலீன் கலினென் றாடச்
செந்திருவார் பரிபுரங்கள் தானு மாடச்
செம்பொனிடை யசைந்தசைந்து சிறப்பா யாட
வெந்தனகத் திருந்தருளும் பாத மாட
வெவ்வுயிர்க்கு மானவனு யிருந்தே யாடச்
சிந்தைசெயு மாடமலி யீப்போ மேவுஞ்
சித்திமகா கணபதியே யாடீ ரூஞ்சல் 7

கள்ளார்ந்த கூவிளங்கண் டிகையு மாடக்
களபமொடு புரிநூலுங் கலந்தே யாட
வுள்ளார்ந்த வரைஞாணுங் கச்சு மாட
வோங்காரத் தொனியுலகத் துயர்ந்தே யாட
நள்ளார்ந்த கானகத்திற் சேய்க்காய் வள்ளி
நாயகியை நடுக்கல்செய்த நாத மாடச்
சிள்ளார்ந்த காவினஞ்சூ ழீப்போ மேவுஞ்
சித்திமகா கணபதியே யாடீ ரூஞ்சல் 8

ஓங்காரத் திருவுருவே யாடீ ரூஞ்ச
லுலகினுக்கு முதற்பொருளே யாடீ ரூஞ்சல்
தாங்காரைத் தாங்காரே யாடீ ரூஞ்சல்
தாலகரத் தாங்காரே யாடீ ரூஞ்சல்

பாங்காரை யில்லாரே யாடீ ரூஞ்சல்
பணிந்தார்தம் மில்லாரே யாடீ ரூஞ்சல்
சிங்கார மாளிகைசூ ழீப்போ மேவுஞ்
சித்திமகா கணபதியே யாடீ ரூஞ்சல் 9

தாயாகி யெவ்வுயிர்க்குந் தானாய் நின்றே
தண்ணளிசெய் தருள்பவரே யாடீ ரூஞ்சல்
மாயோன்றன் மருகரே யாடீ ரூஞ்சல்
வல்லபையாள் கணவரே யாடீ ரூஞ்சல்
நாயேனைத் தொண்டுகொண்டீ ராடீ ரூஞ்சல்
நலிகலியை யழித்தவரே யாடீ ரூஞ்சல்
சேயாரும் மலைநிலவு மீப்போ மேவுஞ்
சித்திமகா கணபதியே யாடீ ரூஞ்சல். 10

வாழி

திருமலியுஞ் சைவநெறி செழித்து வாழி
திருநீறுங் கண்டிகையுஞ் சிறந்து வாழி
உருமலியுஞ் செங்கோன்மை யுயர்ந்து வாழி
ஒப்பரிய தமிழ்மொழியும் நாடும் வாழி
தருமலியு மீப்போவிற் சனங்கள் வாழி
தரணிமிசை செந்நெறிநற் றருமம் வாழி
வரமலியு மாகுவா கனமும் வாழி
வாரணமா முகனடிகள் வாழி வாழி.

PENROSE & Co.
GENERAL PRINTERS,
BINDERS &c.
MADRAS

உ

சிறப்புப் பாயிரம்

திருக்குறட் குமரேசவெண்பா ஆசிரியர், கவிச் சக்கரவர்த்தி

ஸ்ரீமான் : ஜெகவீரபாண்டியனவர்கள்

செய்தது.

அறுசீர்க்கழிலடி யாசிரிய விருத்தம்.

கள்ளாரு மலர்த்தடங்கள் காமருபூம் பொழில்களொடு
        கவினி யோங்கும்
கிள்ளானில் அமர்ந்தருளுங் கிளர்வடிவே லெம்பெருமான்
        கேழார் பாதம்
உள்ளார வுள்ளியின்ப முறுமாறு விருத்தமுயர் ஊஞ்ச
        லென்னும்
எள்ளாத மொழிமாலை யிசையார இனிதியற்றி யீந்தா
        னம்மா

அன்னவன்யார் என்னிலறி வார்ந்தபயன் ஒழுக்கமென
        ஆய்ந்து தேர்ந்தோன்
மன்னுதமிழ் மறையமிர்தை வையமெலாம் உண்டுய்ய
        மனங்கொண் டுள்ளோன்
பன்னியசீர் யாழ்ப்பாண வண்ணைவைத்தியப் பெரியோன்
        பயந்த மைந்தன்
தன்னியலோர்ந் தடங்கினோன் செல்லையா எனும் பெயர்
        கொள் சதுரன் மன்னோ.

வேலுமயிலுந்துணை

கிள்ளான்

தெலுப்பளை, வடிவேலர் திருவிருத்தம்

சித்திவளர் கிள்ளான் தெலுப்பளைவாழ் வேலவர்மேற்
பத்திவளர் நற்பதிகம் பாடவே—நத்துமுச்சிப்
பேராளை யைந்துகரப் பேராளை யாகூருங்
காராளைக் கற்பகமே காப்பு.

பூபரவு செங்கமல வதனமோ ராறுமொளி
பொழிகருணை விழியிராறும்
பொற்புமிகு பன்னிரு புயாசலமு மம்பவள
புன்னகை ததும்புவாயும்
மாபரவு மதுநளை கடம்பிணை ரசைந்தாடு
மாலைசேர் மார்பினழகும்
வடிவேலு மஞ்சலென் றருள்கரமுங் கிங்கிணி
வயங்குபொற் பதமுநாயேன்
நாபரவி வாழ்த்தவென் னெஞ்சைவிட் டகலாது
நாதனே வீற்றிருப்பாய்
நானிலந் தனிலுனது புகழ்பரவு மடியர்துயர்
நலியவடி வேல்பிடித்தே
தாபரவி டாதுகாத் தருள்தெய்வ நீயென்று
சாற்றுமொழி சரதமன்றோ
தங்குகிள் ளானமல துங்கசங் கரிபால
தருதெலுப் பளைவேலனே.

எந்தையே முழுமறை யிரைத்திடும் பல்லுயிர்க்
கினியவொரு தந்தையேசீ
ரெழிலாறு முகமுடைத் தருமமே நான்முக
னிறைஞ்சிடும் பரமவித்தே
கந்தசர வணபவா சண்முகா வென்றுநான்
கதறியழு மோசையுனது
காதிலே கேளாத காரணமி தென்னவோ
கடையேன்செய் வினையின்வலியோ
தொந்தமா கியவினையு முந்தனருண் முன்னிலே
தோற்றுமோ வடிவேலனே.
சொப்பனத் திலுமுனது நற்பதமி றைஞ்சிடுந்
தூயமன மெற்கருளுவாய்
தந்திமக ளொடுவெள்ளி சுந்தரபு யந்தழுவு
தாமோத ரன்மருகனே
தங்குகிள் ளானமல துங்கசங் கரிபால
தருதெலுப் பளைவேலனே 2

சிறுமையெய் தினுநலிவு தீயவினை யெய்தினுஞ்
சேர்வறுமை யெய்தினுலுஞ்
செல்வம துயர்ந்துபல போகமதில் மூழ்கினுந்
திறலரச வாழ்வுபெறினும்
அறுமுகமும் பன்னிருபு யத்தழகும் வடிவேலு
மடியேன்ம றந்தயர்வனோ
அணிபெரும் பொருளுணர்த் தோங்கார வுள்ளொளியி
னைம்பெருஞ் சோதிவடிவே
பெறுமுலகி லொன்றேனு நிலையாகி நீடித்தல்
பேசவா ராவியல்பினுற்
பேணுமெப் பிறவிதா னெய்திடினு மெய்திடுக
பேசுமுன தடிமலரையே

சருவகா லமுநினைந் தகநெகிழு மப்பிறவி
தந்தென்னை யாட்கொள்ளுவாய்
தங்குகிள் ளானமல துங்கசங் கரிபால
தருதெலுப் பளைவேலனே 3

நிலையான மாதவஞ் செய்தறிகி லேனன்பு
நெகிழுமுறை கூறியறியேன்
நீடுமுயிர் கட்கிரங் கேனலந் தார்முகம்
நேசமொடு பார்த்தீகிலேன்
அலைமன மொடுங்கவழி தேடியறி யேனறிவு
மறிவுநூல் கற்றறிகிலேன்
ஆனசுக மொன்றேனு மறிகிலே னென்னையிவ்
வகிலமதி லேன்படைத்தாய்
* கலையொளிரு மொருமங்கை யாக்குபா தாம்புயக்
காகுத்தன் மகிழ்மருகனே.
கதியொன்றி லாதுனடி வந்தடைந் தேனெனைக்
காத்தருள வேண்டுமையா
தலைகொண்ட செஞ்சாலி நல்லறிவு ளோர்தமைத்
தாங்கிநின் றிடுவளநிறை
தங்குகிள் ளானமல துங்கசங் கரிபால
தருதெலுப் பளைவேலனே. 4

கொடியரா யினுமா றெழுத்தோதி நெஞ்சகங்
குழையாத பேராயினுங்
குஞ்சிதப் பாதமலர் தஞ்சமென் றுன்னையே
கும்பிடாத வராயினுங்
கடியகொலை களவுமா பாதகஞ் செய்கின்ற
கயவரா யினுமொருதரங்
கதிரையம் பதிமருவி முக்கோண வீதியுட்
கற்பூர வொளிமுனின்றுற்

---

* கல்லை—என்பது கலையென இடைக்குறையாய் நின்றது.

படிமிசையி லுயர்ஞான பராவரேலதன்
பரிசுரையி னுட்படுவதோ
பன்னிருக ரங்கொண்ட செல்வமே யயிராணி
பாலனுக் கருள்செய்தவா
சடிலகங் காதரபு ராரிசிவ குருநாத
சரவணோற் பவகுமரனே
தங்குகிள் ளானமல் துங்கசங் கரிபால
தருதெலுப் பளேவேலனே. 5
கூரெயி றிலங்கிரும் பன்றியாய் நெடுநிலங்
கொண்டகார் வண்ணனென்கோ
கொற்றமுறு வானகமும் வையமும் படைத்திடுங்
குளிர்முளரி வாசனென்கோ
ஓர்விலா முழுமுதற் பொருளாகி யொளிர்பரம
யோகிசிவ நாதனென்கோ
ஒப்பற்ற பேரயிற் குமரநா யகவுன்னை
யோதுமுறை யானறிகிலேன்
ஆருமிருண் *மலமூட மூந்துமுயிர் வீடுபெற
வருள்கொண்டு †மாயையுந்தி
‡அத்துவா நிலைமருவி யவைமுற்றி நின்கதி
யளிக்கவரு தனிமையான

* மலமூடமூந்துமுயிர்—ஆணவம், கன்மம், மாயை யென்னும் மும்மலமுடைய சகலரை. சகலரென்பதற்குக் கலையோடு கூடினவர் என்பது பொருள்.

† மாயையுந்தி—சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை இவைகளைப் பொருந்திக் காரியப்படுத்தி.

‡ அத்துவா—ஆன்மாக்களுக்குக் கன்ம மேறுதற்கும் பரகதி யடைதற்கும் காரணமாகிய வழி, மந்திரம், பதம், வர்ணம், புவனம், தத்துவம், கலை, இவை முறையே ௧௧, ௮௧, ௫௧, ௨௨௪, ௩௬, ௫, எனக்கூறப்படும். இவ்வாறனுள்ளே முந்திய மூன்றும் சொல் வடிவம். பிந்திய மூன்றும் பொருள் வடிவமாய் நிலவி, ஆன்மாக்கள் இருவினைப் பயன்களை நுகர்தற்கு ஏதுவாய் இறைவற்குந் திருவுருவாய் அமைந்து நிற்கும். நிருவாண தீக்கையினால் ஆறு அத்துவாக்களும் நீங்கப்பெற்று ஆன்மா சிவகதி அடையும்.

தாரகத் துள்ளொளியி னொருவநீ யுன்னிலை
  தனைத்தெரிந் தறைவதார்கொல்
தங்குகிள் ளானமல துங்கசங் கரிபால
  தருதெலுப் பனைவேலனே. 6

நெறியிலா தவனீதி நிலையிலா தவனரு
  நிதியிலா தவனன்புசேர்
நேசமில் லாதவன் றுணையற்ற மிடியனன்
  னெஞ்சிலா துழலுமடிமை,
குறிகொண்டு மனமதை யொடுக்கியொளி வெளியூடு
  கோலமறி யாததுட்டன்
குற்றமே பெரிதுடைய னென்மீதி ரங்குவாய்
  குறவள்ளி மணவாளனே
அறிவுற்ற நாளாயு ளைத்தொழு திரங் கென்ப
  தறியாத தொன்றல்லவே
ஆறுமுக வேலவா வேறுமுக மாகநீ
  யறியாதி ருப்பதழகோ
தறிகொண் *டெயிற்றியர் முழக்கு†தொண் டகவொலி
  தயங்கிடு ‡ குறும்பொறைவளந்
தங்குகிள் ளானமல துங்கசங் கரிபால
  தருதெலுப் பனைவேலனே. 7

மணமிகு பரங்குன்று பாடிசெந் தூர்பழம்
  மயிலநீ யென்றபழனி
மாதுபங் காளனுக் குபதேச மதுசெய்த
  வரமிக்க திருவேரகம்
வணமிகு குறக்கொடி மணங்கொண்ட தணிகைமலை
  வளர்சோலை குன்றுதோறும்

---

* எயிற்றியர் = வேடப்பெண்.
† தொண்டகப்பறை = குறிஞ்சிப்பறை.
‡ குறும்பொறை = குறிஞ்சி நிலத்தூர்.

வடிவேல் கரங்கொண்டு விளையாடு முனதுதிரு
வருண்மேவு கிள்ளானிலே
குணமிகு குகாநந்த வடியார்கள் வாழவே
கூடிவிளை யாடிநின்றாய்
குமரகுரு பரமுருக சமரசண் முகநாத
கோதண்ட பாணிமருகா
தணமிகு மணங்கொண்டு பாணரிமி ழற்றுபொழில்
சார்வளமி குந்துறைந்தே
தங்குகிள் ளானமல துங்கசங் கரிபால
தருதெலுப் பளைவேலனே. 8

கதிர்காம மருணல்லை கந்தவன மாவையொடு
கழுகுமலை சிக்கல்சேயூர்
கயிலைமலை திருமலை விராலிமலை வள்ளிமலை
கஞ்சமலை திருவேங்கடம்
நிதிவளர் சிதம்பரஞ் சீர்காழி யெட்டிகுடி
நிலைகாஞ்சி குமரகோட்டம்
நீடுமருள் செங்கோடு வள்ளியூர் வயலூர்
நிராமயங் குன்றக்குடி
கதிவளரும் நாககிரி யூதிமலை தீர்த்தமலை
கண்டியுட னறுபதியும்
கந்தாக டம்பனே வேன்முருக நாதனே
காட்சிபெற வீற்றிருந்தாய்
ததிவளரி டும்பைபிணி தாங்கமுடி யாதுனடி
தஞ்சமென வந்தடைந்தேன்
தங்குகிள் ளானமல துங்கசங் கரிபால
தருதெலுப் பளைவேலனே. 9

குமரகுரு பரமுருக குறவர்மட மகளிணைய
குவவுமுலை யுழுதபுயனே
கூறமரர் பதிதழைய வசுரர்பதி யெரியவிடு
குலிசகைத் தலமுதல்வனே
விமலவறு முகவரிதன் மருகனே செந்தமிழ்
விளங்குவித் துவசேகரா
வேண்டியுன் னடிமீது பாமாலை பணிகொண்ட
வீறு மடியார்களுக்கே
யமலையருள் பெறவருளி யாளுமருள் வேலனே
யண்டினர்க் காரமுதமே
அருணகிரி யரவிந்த செந்தமிழ்த் தேன்பருகு
மநுராக போகவரியே
தமரமிடு திரையுலக மடையமுடி வெகுளு நிசி
சரர்திமிர தினகரகுகா
தங்குகிள் ளானமல துங்கசங் கரிபால
தருதெனுப் பளைவேலனே. 10

கிள்ளான்

தெலுப்பளை, வடிவேலர் ஊஞ்சற்பதிகம்

திருமேவு புலவர்துயர் தீர்த்தோ னங்கை
திகழ்வடிவேல் விளங்குபரன் தேடற் கெட்டாப்
பெருமானங் துயர்தவிர்த்தே யடிமை கொண்ட
பேராளன் சீராளன் பிறப்பில் லாதான்
பொருசூர னுடல்பிளந்தோன் கிள்ளான் மேவும்
புத்தேளுக் கூஞ்சலிசை போற்றிச் சொல்ல
வொருகோட னிருசெவிமும் மதநால் வாய
னுபயமல ரடியகத்தே யுன்னல் செய்வாம்.

சீர்பரவு மாரணங்கள் கால்களாகத்
திகழுமங்க மாறுமொளிர் விட்ட மாகப்
பேர்பரவு முபநிடதம் விதான மாகப்
பிறங்குசிவா கமங்களே கயிற தாக
நார்பரவு பிரணவம் பொற் பலகை யாக
நாதமுய ராறெழுத்தும் பீட மாகத்
தேர்பரவு மாடமலிந் தோங்கு கிள்ளான்
தெலுப்பளைவாழ் வேலவரே யாடீ ரூஞ்சல் 1

செங்கதிரும் வெங்கதிருங் கவிதை தாங்கத்
திகழுடுக்கள் நவமணியின் மாலை யாகத்
துங்கமிகு ஞானமே விளக்க மாகத்
தூயசரி யாகிரியை யோகஞ் ஞானம்
பங்கமிலாச் சாமரையின் பந்தி யாகப்
பகர்நாதம் மங்கலவா லாத்தி யாகத்
தெங்குதிர வாளைகுதி வயல்சூழ் கிள்ளான்
தெலுப்பளைவாழ் வேலவரே யாடீ ரூஞ்சல் 2

வன்னியொடு மருத்துமலர்ப் பாதந் தாங்க
வாநதியாள் பரிமளநீர்த் திவலை தூவ
அன்னையெனு மறுவர்முலை யமுத மூட்ட
வரம்பையர்கள் திருமுன்பு நடன மாட
இன்னிசைசேர் யாழ்முனிதும் புருவும் பாட
இந்திரனும் வேதாவுந் துவசந் தாங்கத்
தென்னிலவு மயிலால முகிலார் கிள்ளான்
தெலுப்பளைவாழ் வேலவரே யாடீ ரூஞ்சல் 3

இந்திரையும் நாமகளும் வடந்தொட் டாட்ட
இமையவர்கள் மலர்தூவிப் பணிந்து போற்றச்
சுந்தரஞ்சேர் மயிலாடச் சேவல் கூவத்
துதித்தடியார் வேன்மயிலுந் துணையென் றார்ப்ப
நொந்தவர்கள் திருமுன்பு குறைகள் தீர
நோக்கமொரு பன்னிரண்டு மருளைக் காட்டச்
செந்தினையார் செய்யொலியும் வளஞ்சேர் கிள்ளான்
தெலுப்பளைவாழ் வேலவரே யாடீ ரூஞ்சல் 4

ஆறுமணி முடியருக்க னொளியை யேப்ப
அம்புலியும் பகீரதியு மணிபெற் றோங்க
நீறுகொன்றை மத்தமெருக் காத்தி வில்வம்
நிலவுமுடி மிசையோங்கி நிழலைக் கால
வீறுதவர் யோகர்சித்தர் முத்த ராஞோர்
வேல்துணையென் றுசிமொழி விளம்பி யார்ப்பத்
தேறு *மெரி யிணர்வேங்கை பொன்சேர் கிள்ளான்
தெலுப்பளைவாழ் வேலவரே யாடீ ரூஞ்சல் 5

மல்லார்ந்த பன்னிரண்டு தோள்களாட
மாறுகொள்சூர் மார்பிடந்த வடிவே லாடச்

* எரியிணர் வேங்கை பொன்சேர்—தீ நிறத்தைக் கொண்ட பூங்கொத்துக்களை யுடைய வேங்கைமரம் பொன்னிறத்தைச் செய்கின்ற—என்பதாம்.

சொல்லாக்க மணிகடப்ப மாலை யாடச்
சோதியிள நகைமுகத்தே துலங்கி யாட
நல்லாடை யரைஞாணுங் கச்சு மாட
நாயகிமா ரிருமருங்கு நயந்தே யாடச்
செல்லார்ந்த சோலைமலர்த் தேன்செய் கிள்ளான்
தெலுப்பளைவாழ் வேலவரே யாடீ ரூஞ்சல் 6

மாசுதவிர் மயிலாடச் செஞ்சூட் டோங்கு
வாரணத்தின் கொடியாட மலர்ப்பாதத்தே
காசுதவிர் சதங்கைகலின் கலினென் றாடக்
கருணைவிழி எமதுதுயர் களைந்தே யாடப்
பேசுதிருப் புகழடியா ரிசையிற் பாடப்
பெருகுசரா சரங்களருட்பெருக்கை நாடத்
தேசுதிகழ் செல்விநடஞ் செயுஞ்சீர்க் கிள்ளான்
தெலுப்பளைவாழ் வேலவரே யாடீ ரூஞ்சல் 7

* மாகருக்காய்த் தனதுமுக மாறுங் கொண்டு
மருவுசிவ னுதற்பொறியை வாயு தாங்கிப்
† போகநதி யூடுசர வணத்து ளோங்கிப்
புதல்வரெனக் கார்த்திகையார் முலையுண் டம்மை
தாகமுட னணைத்தெடுக்க வுருவ மாறுந்
தழுவியொன் றாய்க் கந்தனெனத் தரணி வந்தோய்
சீகரஞ்சேர் கொண்டல்முழ வோங்கு கிள்ளான்
தெலுப்பளைவாழ் வேலவரே யாடீ ரூஞ்சல் 8

‡ வாரணமா துவசத்தீ ராடீ ரூஞ்சல்
¶ வனக்குறமா துவசத்தீ ராடீ ரூஞ்சல்
§ ஆரணமா றங்கத்தீ ராடீ ரூஞ்சல்

---

* மாகர்—தேவர்கள். † போகநதியூடு சரவணத்துள்—கங்கையினிடத்தே செலுத்தக் கங்கை சரவணப்பொய்கையில் விட்டது. ‡ வாரணமாதுவசம்—கோழிக்கொடி. ¶ வனக்குறமாதுவசம்—அழகிய குறப்பெண்ணாகிய வள்ளி நாயகிக்கு வசமானவர். § ஆரணம், ஆறு அங்கம்—நான்கு வேதங்களும் ஆறு அங்கங்களுமானவர்.

$ அடையலர்மா றங்கத்தீ ராடீ ரூஞ்சல்
* * பூரணமா மயிலாரே யாடீ ரூஞ்சல்
† † பூரியர்தம் மயிலாரே யாடீ ரூஞ்சல்
தோரணமா முளரிவிளக் கணிசெய் கிள்ளான்
தெலுப்பளைவாழ் வேலவரே யாடீ ரூஞ்சல் 9

* துடியாடும் பெருமானே யாடீ ரூஞ்சல்
துலங்குமுக மாறுடையீ ராடீ ரூஞ்சல்
படியாருங் கிரிபுகந்தீ ராடீ ரூஞ்சல்
† பனுவலுரை கேட்டவரே யாடீ ரூஞ்சல்
பொடியாடும் மேனியரே யாடீ ரூஞ்சல்
புகழருணை கிரியளியீ ராடீ ரூஞ்சல்
செடியாணி படுமருள்பொற் கோயிற் கிள்ளான்
தெலுப்பளைவாழ் வேலவரே யாடீ ரூஞ்சல் 10

$ அடையலர் மாறு அங்கம்—பகைவரைத் தூலவுடல் விட்டுச் சூக்கும உடல்கொள்ளச்செய்தல்: அதாவது பகைவரை அழித்தல். இனிப்பகைவனாகிய சூரனைச் சேவலும் மயிலுமாகிய மாறுபட்ட அங்கமாக்கினவர் என்றும், அடையலர் மால் தங்க தீர் என்றும் வரும்: இது சூரபன்மாவுக்கு மெய்யுணர்வு தோற்றுவித்ததை யுணர்த்தும். * * பூரணமாமயிலார்—நிறைந்த அழகுடைய மயில் வாகனத்தை யுடையவர். † † பூரியர்தம் அயிலார்—கெட்டவர்களை அழிக்கும் வேற்படையைத் தரித்திருப்பவர். அல்லது, பூரியர் தம்மை யிலார்—கெட்டவர்களை அணுகாதவர் என்றுமாம்.

* துடி—வேற்றுருவங்கொண்டு கடலிலே நின்ற சூரனுடைய மார்பைப் பிளந்து துடிகொட்டி முருகனாடிய கூத்து. † பனுவலுரை கேட்டவர்—நக்கீரர் செய்த அகப்பொருளுரை கேட்டவர். † மயிலை யிலென்புரு—மைலாப்பூரில் நோயினால் உடல்வற்றி என்புருவா யிருந்த பெண்ணை அந்நோய் தீர்த்து நல்லுருவாக்கியது. $ திருமரு கல்விடம்—திருமருகலில் விஷந்தீண்டி யிறந்த செட்டியை உயிர்ப் பித்தது.

எச்சரீக்கை

மாவாய்வரு சூர்மார்பிடந் தாவாய்வரு கோவே
வருமா ‡ மயி லையிலென்புரு வரதா எச்சரீக்கை
பூவார் $ திரு மருகல்விடம் பாவாயஞ்ச லென்றே
பொலிகொள்வர னுயிர்தந்தருள் புலவா எச்சரீக்கை
காவாயென விண்ணோர்பதி காவாயிடந் தந்தோய்
கருணாகர குருநாதசிற் கந்தா எச்சரீக்கை
தாவாதநற் பொருளேதருஞ் சாமீகுக நாதா
தந்தாவள முகனார்துணைச் சரணீ எச்சரீக்கை. 1

சேந்தாவள்ளி காந்தாசிவ சேயே எச்சரீக்கை
திணைமாவிழை தணிகாசலத் திருவே எச்சரீக்கை
பூந்தாமரைப் பாதாவுயிர் வேந்தே எச்சரீக்கை
பொற்பார்திரு முகமாறுடைப் பொருளே எச்சரீக்கை
ஆந்தாயினு மினியாயரு ளாழி யெச்சரீக்கை
அமலா அர கரவேலவ அலரீ யெச்சரீக்கை
தாந்தாமெனுஞ் சமயப்பொரு டருவோ யெச்சரீக்கை
சத்திச்சர வணனேபர முத்தீ யெச்சரீக்கை 2

பராக்கு

வரமருவு கிள்ளானில் வளர்வோய் பராக்கு
வாலைதிரி புரைதந்த வாழ்வே பராக்கு
புரமெரிசெய் பரசிவன் போதா பராக்கு
புண்ணிய புராதன புராரீ பராக்கு
கரமருவு வேற்படைக் கதிரே பராக்கு
காங்கேய வசுரேசன் காலா பராக்கு
தரமருவு திருவருட் சாமீ பராக்கு
தாங்கியெனை யாதரிக்குந் தாயே பராக்கு 1

கும்பமுனி சங்கரன் குருவே பராக்கு
கோலமயில் வாகனக் குமரா பராக்கு
அம்புவி படைத்தசே யையா பராக்கு
ஆறிரு புயாசலத் தரசே பராக்கு
* உம்பலால் வள்ளியை யுவந்தோய் பராக்கு
ஓதுநக் கீரர்படை யுருவே பராக்கு
தம்பிரா னெனவந்த தவமே பராக்கு
சண்முக பராக்குப் பராக்குப் பராக்கு. 2

வாழி

மன்னுமறம் பொருளின்பம் வளர்ந்து வாழி
மாமயில்வா கனனடியார் மகிழ்ந்து வாழி
தன்னிகரிற் சைவநெறி தழைத்து வாழி
தருமநெறி செங்கோன்மை தரணி வாழி
இன்னிலவு தமிழ்மொழியு மியலும் வாழி
இலங்குமருண் மன்பதையு மேரும் வாழி
மன்னிலவு சேவல்மயில் குறமின் யானை
மங்கையரும் வடிவேலும் வாழி வாழி.

---

* உம்பலால் வள்ளியை உவந்தது—வள்ளி நாயகியைத் தினைப் புனத்தில், யானை உதவியால் கலந்தது, உம்பல்—யானை.

மங்களம்

ஆனைமுக மானவற்கு மம்பிகைக்கும் நாதனுக்கும்
வானுயருஞ் ஞாயிறுக்கும் மற்றுமுள்ள தேவருக்கும்
—மங்களம்

செங்கமலை நாயகிக்கும் தேவிகலை மடந்தைக்கும்
தங்குதமிழ் வேதமுறைசமயகுரு நால்வருக்கும்--மங்களம்
நாரணற்கும் வேதனுக்கும் நாவலர்க்குங் காவலற்கும்
ஆரணவா கமங்கட்கும் அந்தணர்க்குஞ் செந்நெறிக்கும்
—மங்களம்

பேறுயர்கிள் ளானகர்க்கும் பெம்மானடி யார்களுக்கும்
வீறுகொடி வேன்மயிற்கும் வேலவற்கும் மங்கையர்க்கும்
--மங்களம்.

வடிவேலர் திருவருட்பத்து

கட்டளைக் கலித்துறை

முருகா குமர முதல்வா முகந்தன் றிருமருகா
தருகாத லம்மை யிருவர்பங் காதமி யேனையுளந்
திருகாம லுன்பற் றொழியாமற் சிந்தை செறிவழித்து(ன்)
அருகார வேயிருத் தாயடி யேனுன் னடைக்கலமே 1

எறுதற் குன்ற னிணைத்தாள்க ளுண்டெ னிருந்துயரை
யாறுதற் குன்ற னறுமுக சேவையுண் டந்தகன்பால்
மீறுதற் குன்கை வடிவேற் படையுண்டு மேலெதற்குங்
கூறுதற் காறெழுத் துண்டுகண் டேனிக் குவலயத்தே 2

செய்வதொன் றேனு மறியேன் சிறியன் றிருவடிக்கே
யுய்வகை நாடி யுனையடுத் தேனை யுவந்தளிப்பா(ய்)
ஐவருங் கைவிட் டறிவுங் கலங்கி யலைதரும்பாய்
மெய்விடும் போது னிருதாள் துணையன்றி வேறிலையே 3

அகழ்ந்திடு மார்கலிப் பௌவத் துயர்மண் ணளப்பினுமென்
னிகழ்ந்திடு பாழ்பிறப் பெண்ணில வெண்ணில வேதமின்றிப்
புகழ்ந்திடு வாழ்வுற் றிரும்பய னென்றும் பொருந்திநில்லேன்
றிகழ்ந்திடு வேற்படைக் கந்தா விதுவுன் றிருவருளே 4

வேண்டிப் பணியு மடியவர்க் குற்ற விழுமமதை
மாண்டற் றிடவளித் தாரருள் செய்யும் மகபதிசீர்
பூண்டங் குழலு மவர்போ விலாது புகழவைக்குந்
தூண்டங் குயர்செம் மணிப்பன் னிருசுடர்த் தோள்
வலியே 5

தீரா துழலு மயற்றளை கொண்டு தியக்கமுண்டு
சோராக் கவலையி னுற்பிணிப் புண்டு துளங்குமுன்னீர்
வாராத் துரும்பென நின்றேன் மதிகெட்டு வான்கருணைத்
தீரா விரங்குசெந் தூரா கிள்ளானுறைச் செம்பொருளே 6

தோளா றிரண்டுஞ் சுரக்குங் கருணைச் சுடர்முகமும்
மாளாத வெற்றி வடிவேலு நீப மலர்த்தொடையும்
மீளாத வன்புகொண் டெந்நாளு மேத்த விளங்குமலர்த்
தாளா வரந்தரு வாய்மயிற் பாக தயாநிதியே. 7

ஓது நற் பாட லுணராப் புலையர்க் குரைத்தவர்பா(ல்)
ஏதும் பெறாது மனமாழ்கிக் குன்று மிசைப்புலவீர்
காதுஞ் சினங்கொண்ட சூர்க்களம் பாடக் கருதுகிலெப்
போதுந் திருவருஞ் செவ்வே ளடியின் புகப்பெறுமே. 8

படைப்பானுங் காப்புப் பரனுமிப் பாரிற் பலவுயிருந்
துடைப்பானு நீயெனத் தோன்றினை நல்லைச்சுடர்மணியே
கொடைக்கார் முகில்தவழ் குன்றுதொ றாடுங் குமரவனை
விடைப்பாகன் சேயெனக் கூறுவ ரென்ன வியப்பிதுவே 9

காய்ந்திடு வெங்கனல் வாய்மெழு கென்னக் கனிந்துருகித்
தீய்ந்திடு நெஞ்சுடை யேன்பா விரங்கு செழுஞ்சுடிகை
யேய்ந்திடு மாமயில் மாணிக்க மேயிங் கிடர்ப்படுநோய்
மாய்ந்திட வேண்டுங் குறைதீர வேண்டும் மகிழ்ந்தருளே.

செய்தோனும் காலமும்

பெருகு யாழ்நகர் பேர்பெறு வண்ணையில்
　　பேசு நெல்வயித் தீசன் புதல்வனும்
பருகு செந்தமிழ் வாணன்செல் லையனார்
　　பண்பி னோடுகிள் ளானகர் வேலற்கு
உருகு பாடல்வி ருத்தமு மூஞ்சலும்
　　ஓங்கு பின்னுங் கலித்துறை யோதினான்
முருகு லாவுக லியினை யாயிரம்
　　முப்ப தைப்பசி முன்னாத லோங்கவே

Penrose & Co., Printers, Madras.